காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்
ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்

400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட்
பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

...ர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; பேரானந்தத்தை விரும்
...வுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.
...பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்
...ாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததிக
...் பயனையும் அடை... வாயிருக்கும்படி பற்பல
...றந்த இந் நூல் இப்பொழுது இனிய தமிழ்நடையில் வெளி
...து. இதில் நமது பூர்வ கொக்கோக சாஸ்திரத்தின்சாராம்

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷ தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் ஸகோதர ஸகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீஸில் தமிழ்நாட்டுச் சுகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

கனகபூஷணம் 2-பாகம்

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரஸ மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக் கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டு மாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 2—0—0

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

187515

மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், ஸ்நேகத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்கா மனிவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சர்யத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1—8—0

இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இந்த சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம் சாமார்த்தியம் முதலிய யாவும் உடையனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக் கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்வனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1—4—0

தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குறக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்!　　　　புதிய நாவல்!!

கிருஷ்ணஸிங்

அல்லது

துப்பறியும் சிடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல படுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கிணங்க நீதிமதியோடு கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

இதன் விலை அணா 14.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை அணா 10.

அம்பாலிகை

அல்லது

அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவளுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தஸிங் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணம் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்!　　　　பெருகும் ஆவல்!!

சற்குணவல்லி

அல்லது

சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் அபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விலக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34-வரை விலை ரூபா 1-0-0.

கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-துப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1—2—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந்
தெரிந்துகொள்ளும் **ஆனந்த**

ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா **2.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் கேதுவாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தைத அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்வதற்கு தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வோரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஔவையார் அருளிச்செய்த

பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை **அணு 2.**

கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல மருட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

விலை ரூபா 1—8—0.

காமவல்லி இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணு 8

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நாவல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1.

ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதாநாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர் மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின்போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப் பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு ஏற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1—6—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 28-2-34 வரை விலை ரூபா 1.

அன்பானந்தன்

அல்லது

அருஞ்செல்வன் விளைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இப்படிப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள் படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக் களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓம்
பரப்பிரம்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	ஸ்ரீமுக வருஷம் தைமீ ௧௳	பகுதி
19	1933 வருஷம் ஜனவரிமீ 14௳	7

கடவுள் வணக்கம்.

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலமொழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குருமொழியை மலையிலக்கு மற்றைமொழி எல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் கண்டாய்
கருமொழியின் குணக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கும்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங் கண்டனைமேல்
தருமொழியின் குணக்கில்லை உன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே. (1)

நில்லாத ஆக்கை நிலை அன்றெனவே கண்டாய்
நேயவருள் மெய்யன்றோ நிலையமதா நிற்கக்
கல்லாதே ஏன்படித்தாய் கற்றதெல்லாம் மூடம்
கற்றதெல்லாம் மூடமென்றே கண்டனையும் அன்று
சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போல் தொட்டதுபற்றுநில்
எல்லாரும் அறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ
இராப்பகலில் லாவிடமே எமக்கிடமென் றறிந்தே. (2)

சொல்லை யுன்னித் துடித்தத லாலருள்
எல்லை யுன்னி எனையங்கு வைத்திலேன்
வல்லை நீஎன்னை வாவென் றிடாவிடின்
கல்லை யாமிக் கருமி நடக்கையே. (3)

அங்கார மென்னுமத யானைவச மிற்கரும்பாய்
ஏங்காமல் ஏக்கதையருள் எய்துநாள் எந்நாளோ. (4)

அரும்பொருள் விளக்கம்

1. இதனால் மகா வாக்கியத்தின் சிறப்பை உணர்த்துகின்றார்.

(இ-ள்) மகா வாக்கியமாகிய ஒரு சொல்லே பல சொற்களுக்கும் இடந்தரா நிற்கும். அந்த ஒரு சொல்லே மலங்களைப் போக்கும் போக்கும் என்று சொன்ன ஆச்சாரிய வசனமே மலைக்குறிபோல்வதாகும். மற்றைய வாசகங்களெல்லாம் வகுத்த இடம் இல்லாமல் வட்டு ஆடலை ஒத்திருப்பனவாம். இவ்வாறும் உனக்குக் கர்ப்பவாசம் என்கிற சொல்லே இல்லை. சொல்லுக்குச் சொல் இனிக்கின்ற—கரும்பை யொத்த சொற்களைக் கொண்டு உன்னைக் காண்பிக்கவும் நீயும் தரிசித்தனை. இப்படியான பின் உனக்குப் போதித்தற்குரிய சொற்கள் இல்லை. ஆதலால், இனி, உன்னைவிட்டு நீங்காத தற்பரமாகவும், இன்பப் பொற் சபையாகவும் நிற்கக் கடவாய் என்க.

வட்டு—சொக்கட்டான் காய். வீடு வகுத்துக்கொள்ளாமல் சொக்கட்டான் ஆடில் வெற்றி தோல்விகள் ஏற்படாதவாறுபோல உண்மை தேறாமல் முத்தி நெறியை நாடில் பயனில்லை என்பார் "மற்றை மொழி எல்லாம், கோடின்றி வட்டாடல் கொள்வ தொக்கும்" என்றனர்.

2. இதனால் முத்தியே உறுதி என்பதை விளக்கிக் காட்டவேண்டும் என்கிறார்.

(இ-ள்) நிலைத்திராத சரீரம் நிலை அன்று என்றே பார்த்தாய். உயிரின்மேல் கிருபையுள்ள திருவருளானது உண்மை அல்லவா? அத்திருவருளே இடமாகக் கொண்டு, அதிற்படிந்து நிற்கக் கல்லாமல் வேறாகிய கல்விகளை ஏன் கற்றாய்? நீகற்ற கல்வி எல்லாம் மூடத்தனத்துக்கு ஏதுவே ஆகும். ஆனால் கற்றதெல்லாம் மூடமென்றே தெரிந்து கொண்டாயும் அல்லை. சொற்களாலே பிரயோஜனம் இல்லை. சொற்களின் முடிவையே தொடர்ந்துபற்று; குரங்குபோல் பிடித்ததையே பற்றிக்கொண்டு நிலைத்திரு. அதன் பிறகு இராப்பகல் அற்ற இடமே எமக்கு இடமாவதென்று உணர்ந்து—அவ்வநுபவ விசேஷத்தை யாவரும் உணருமாறு நீ வாயாகிய பறையைக் கொண்டு சாற்றி அறிவிக்க என்க.

ஆக்கை நிலை அல்ல என்பது பிரத்தியக்ஷப் பிரமாணம் என்பார் "நில்லாத ஆக்கை நிலை அன்றெனவே கண்டாய்" என்றனர். அருள் அடைவதற்கேதுவாகிய சாஸ்திரங்களைக் கல்லாமல் பிரபஞ்ச சம்பந்தமாய சாமானிய கல்வியிற் பழகுவதில் பயன் இல்லை என்பார். 'நிலயமாதா நிற்கக் கல்லாதே என் படித்தாய்" என்றார்.

3. கடவுள் தம்மை ஆதரித்து அருளவேண்டும் என்று விரும்புகின்றார்.

(இ-ள்) நீ சொன்ன சொல்லினை நினைத்துப் பதைத்ததேயன்றி அருளின் எல்லையை நினைத்து என்னை அவ்விடத்தில் அமைத்திலேன். விரைவில் என்னை நீ வா என்று அழையாவிட்டால் இத்தீவினையேனது ஒழுக்கமானது பொய்யாகும் என்க.

ஆச்சாரியர் உபதேசித்த மொழியின் அருமையினைத் தெரிந்திடினும், அம்மொழியின் வழியே நின்று அருளில் தலைப்பட்டால் அல்லது பயனில்லை என்பார் "சொல்லை யுன்னித் துடித்ததலால் அருள், எல்லை யுன்னி எனை அங்கு வைத்திலேன்" என்றனர்.

ஆனந்தபோதினி

ஸ்ரீமுக ௵

தைமீ 1௳

தமிழன்பர் மகாநாட்டுத் தீர்மானங்கள்

சென்ற டிசம்பர் மாதம் 23—24-ம் தேதிகளில், சென்னையில், கல்வி மந்திரி கனம் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் தமிழன்பர் மகாநாடு கூடியது நேயர்கட்குத் தெரியும். இதைப்பற்றி நாம் சென்ற மாதமே குறிப்பிட்டிருந்தோம். தமிழ் மொழியில் புதிய விஷயங்களைப் பற்றிய நூல்கள் பெருகச் சாதனமாயிருப்பதே இம்மகாநாட்டின் உத்தேசம் என்று சொல்லப்பட்டது. இம் மகாநாட்டின் உயரிய நோக்கத்தை நாம் பாராட்டுகின்றோம். ஆனால் மகாநாட்டு நிர்வாகிகள் தமிழ்ப் பேரறிஞர்களையும் பெரியார்களையும் புறகணித்துவிட்டு ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே அதிகச் சலுகை காட்டியது மிகுந்த சந்தேகத்திற்கு இடமுண்டாக்கி விட்டது. எனவே இம் மகாநாட்டில் கலந்துகொண்ட தமிழ் மக்களிற் பலர் இம் மகாநாடு சூழ்ச்சி பொருந்தியது எனக் கருதினர். மகாநாட்டு நிர்வாகிகள் "தமிழ் அன்பர் சங்கம்" என்னும் பேரால் ஒரு சங்கத்தை ஸ்தாபிப்பதாக முன்னரே விதிகளைத் தயாரித்து வெளியிட்டிருந்தனர். இந்தச் சங்க ஸ்தாபன தீர்மானம் ஏனோ பகிரங்க மகாநாட்டுக்கு வரவில்லை. இது தமிழர்கள் கொண்ட சந்தேகத்தை உறுதிப்படுத்தி விட்டது. தமிழ் அன்பர் மகாநாட்டு நிர்வாகிகள் தமிழறிவுள்ள பெண்மணிகட்கும், தாழ்த்தப்பட்ட மக்கட்கும் பிரதிநிதித்வம் வழங்கவில்லை என்னும் குறையும் கூறப்பட்டது. இம் மகாநாட்டுக்குப் பின்னர் தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்ற கிளர்ச்சி இப்பொழுது ஏற்பட்டிருப்பதற்கு நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம். தமிழைப் புதிய வழியில் வளர்க்கத் தகுந்த பிரதிநிதித்வம் வாய்ந்த ஒரு மகாநாட்டைக் கூட்டும் முயற்சி நடைபெறுவதை அறிந்தும் மகிழ்கின்றோம். நிற்க,

தமிழன்பர் மகாநாட்டில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றை ஒவ்வொருவரும் ஊன்றிக் கவனிக்க வேண்டியது மிக மிக அவசியம். அவற்றுள் முக்கிய தீர்மானங்களின் சாரம் வருமாறு:—

தற்காலத்துக்கு வேண்டிய விஞ்ஞான சாஸ்திரம் முதலிய கலைகள் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும்.

தமிழில் இல்லாத பரிபாஷைச் சொற்களையும், உலக வழக்குச் சொற்களையும் தழுவிக்கொள்ள வேண்டும்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களை எல்லாத் தமிழ் மக்களும் அறிந்துகொள்ளுமாறு முயற்சிக்க வேண்டும்.

தமிழ் இலக்கியங்களின் புதுப் பதிப்புக்களும், சுருக்கங்களும், திரட்டுக்களும் வெளி வருதல் வேண்டும்.

தமிழில் பல்பொருள் விளக்க நூல் ஒன்று அவசியம்.

சிறுவர்கட்கேற்ற சித்திரங்கள் நிறைந்த நூல்கள் வெளிவருதல் வேண்டும்.

ஜாதிமத வேற்றுமை உணர்ச்சியை உண்டாக்கக் கூடிய புத்தகங்களைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் பாடங்களாக வைக்கக்கூடாது.

பாட்டுக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்களே பெரும்பாலும் பாடப்படவேண்டும்.

நாட்டுக் கதைகளையும் பாட்டுக்களையும் திரட்டிப் பாதுகாப்பது அவசியம்.

எஸ். எஸ். எல். ஸி., வரையிலாவது எல்லாப் பாடங்களும் கட்டாயமாகத் தமிழ் மூலமாகவே கற்பிக்கப்படவேண்டும்.

தமிழ் நூல்கள் நிறைந்த புத்தகசாலைகள் எங்கும் அமைக்கப்பட வேண்டும். அவற்றிற்கு ஸ்தல ஸ்தாபனங்கள் உதவிபுரிய வேண்டும்.

தமிழ் நெடுங்கணக்கில் அநாவசியமாயுள்ள அதிக எழுத்துக்களைக் குறைப்பதோடு அவசியமான வேறு எழுத்துக்களையும் தழுவிக் கொள்ள வேண்டும்.

இவையே தமிழன்பர் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களின் சாரம். இவற்றில் ஒருசில தீர்மானங்கள் இதுகாறும் தமிழ் சம்பந்தமாக நடைபெற்ற எந்த மகாநாட்டிலும் நிறைவேற்றப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். தற்காலத்திற்கு வேண்டிய விஞ்ஞான சாஸ்திரம் போன்ற கலைகள் தமிழ் மொழியில் இல்லை என்பது கண்கூடு. இந்தியாவில் தமிழைத் தவிர மற்ற மொழிகளில் இத்தகைய கலைகள் கூடியவரை சேகரிக்கப்பட்டு வருகின்றன என்பதில் ஐயம் இல்லை. உருது மொழியில் மேனாட்டு

வைத்தியம், இஞ்சினீரிங் போன்ற கலைகள் ஏராளமாக வெளிவந்திருக்கின்றன. காலஞ்சென்ற கவிராயர் பாரதியார் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் இயற்றவேண்டும் என்றும், இறவாத புகழுடைய புது நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றவேண்டும் என்றும் கதறிச்சென்றார். தமிழ் மக்கள் இவ்விஷயத்தில் இன்னும் அலக்ஷியமாயிருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். கரடு முரடான செந்தமிழ்க் கடின நடையை ஒரு சில பண்டிதர்கள் மட்டும் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கலாம். ஆனால் எளிய நடையே இக்காலத்தில் பெரிதும் வேண்டப்படுகிறது. புலவர்களும் பண்டிதர்களும் தங்கள் திறமையைக் காட்டிக்கொள்ள ஒருகால் திரிசொற்கள் நிறைந்த கடின நடை உபயோகமாயிருக்கலாம். பொது மக்கட்கு அத்தகைய இரும்புக் கடலை நடை தேவை இல்லை. சில பண்டிதர்கள் கடின நடையே அழகியது என்றும். எளிய நடையில் அழகு இல்லை என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இது மொழியின் தத்துவம் அறியாத குறை என்பதைத் தவிர வேறு என்ன கூறுவது? செய்யுளுக்குத் தேவையான அளபெடைகளை உரைநடைகளிலும் புகுத்தி மகிழும் அளபெடைப் பண்டிதர்கள் இருக்கும் வரை தமிழன்னை புத்தணி பெற்றுப் புது வாழ்வு நடத்தப்போவதில்லை என்பது உறுதி. நமது நாட்டில் தனித் தமிழ்ப் பைத்தியம் ஒரு சில அறிஞர்களைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கிறது. வடசொற்களையும், பிற சொற்களையும் தமிழில் கலக்கக்கூடாது என்பது இவர்களுடைய வாதம். தமிழ் உயர் தனிச் செம்மொழி என்றும், அது பிற சொற்களின் உதவியின்றித் தானே தனித்து இயங்கவல்லது என்றும் அவர்கள் பெருமையாக எடுத்துக் காட்டுகிறார்கள். இக்குழுவினர் பிறசொற்கலப்பின்றியே பேசுகிறார்கள்-எழுதுகிறார்கள். நாமும் தமிழுக்கு அத்தகைய சிறப்பும் பெருமையும் இருப்பதை இல்லை என்று மறுக்கவில்லை-யாராலும் அதை மறுக்கவும் முடியாது. ஆனால் தமிழை வளர்க்கும் முறை இதுதானா என்று கேட்கின்றோம்? எந்தச் சொல்லுக்கும் சரியான தனித் தமிழ் மொழியைச் சிருஷ்டிப்பது பண்டிதர்கட்குப் பிரமாதமான காரியம் அல்ல. அத்தகைய புதுச் சிருஷ்டி யாருக்குப் பயன்படும்? பண்டிதர்கட்கே பயன்படும்! மற்றவர்கட்கு அத்தகைய தனித் தமிழ்ச் சொற்கள் பிறமொழிச் சொற்களாகவேதான் தோன்றும். இவ் வுண்மையைத் தமிழன்பர்மகாநாட்டைத் திறந்துவைத்த ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டியதை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். எனவே எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கும்படியான பரிபாஷைகளையும் உலக வழக்குச் சொற்களையும் தழுவிக்கொள்ள வேண்டும் என்று தமிழன்பர் மகாநாடு செய்துள்ள தீர்மானத்திற்கு நாம் முழுமனதுடன் நல்வரவு கூறுகின்றோம்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பல அரும்பெரும் பொருள்

கள் செறிந்து கிடக்கின்றன. அந்த இலக்கியங்கள் கடல்போலப் பரந்து விரிந்து கிடக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். அவற்றின் அருமை பெருமைகளை எல்லாரும் உணர்ந்து இன்புற வேண்டுமானால் சிறந்தமுறையில் தமிழ் இலக்கியங்களின் புதுப் பதிப்புக்களும், இலக்கியச் சுருக்கங்களும், திரட்டுக்களும் வெளிவரவேண்டும். இத் துறையில் மேனாட்டார்நன்முறையில் தொண்டாற்றியிருக்கின்றனர் என்பதை அறிஞர்கள் நன்கு அறிவார்கள். தமிழின் பல்பொருள் விளக்க நூல் ஒன்று வெளிவரவேண்டும் என்றும், சிறுவர்களுக்கான சித்திரப் படங்கள் நிறைந்த நல்ல நூல்கள் வெளிவரவேண்டும் என்றும், அரசாங்கத்தாரும் சர்வகலாசாலையாரும் தமிழ்மொழி ஆக்கத்திற்கு அதிக உதவிபுரிய வேண்டும் என்றும், தமிழ் நூல்கள் நிரம்பிய புத்தகசாலைகள் எங்கும் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தமிழன்பர் மகாநாட்டார் செய்துள்ள தீர்மானங்களின் அவசியங்களை நாம் விரித்துரைக்கவேண்டியது அநாவசியம். இத் தீர்மானங்களில் கண்ட விஷயங்கள் பல தடவைகளில் பல அறிஞர்கள் சொற்பொழிவுகள் வாயிலாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றனர். இம் மகாநாடு நிறைவேற்றியுள்ள இரண்டு முக்கிய தீர்மானங்களின் அவசியத்தை இங்கே ஒருசிறிது எடுத்துக் காட்டிவிட்டு இத் தலையங்கத்தை முடிக்கலாம் என்று எண்ணுகின்றோம்.

சாதி-சமய வேற்றுமைகளை உண்டாக்கக்கூடிய புஸ்தகங்களைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் பாடங்களாக ஏற்படுத்தக் கூடாது என்று தமிழன்பர் மகாநாடு தீர்மானம் செய்திருக்கிறது. இத்தீர்மானம் இச்சமயத்தில் மிக மிக முக்கியமானது என்பதில் ஐயம் இல்லை. நமது நாட்டில் பற்பல வகுப்பினரும் சமயத்தாரும் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வகுப்பையும் சமயத்தையும் பெரிதாகவே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே ஒரு குறிப்பிட்ட சமயக் கதைகளையோ பிறவற்றையோ பாடமாக வைத்தால் மற்றவர்களின் சமய உணர்ச்சியைப் புண்படுத்துவதாகவே கருதப்படும். தவிர, ஆராய்ச்சி மிக்க அறிஞர்கட்கே மயக்கமும் மலைப்பும் உண்டாக்கும்படியான சாதிசமய சம்பந்தப்பட்ட விஷயங்கள் மாணவர்களின் இளமையான மூளைகளைக் குழப்பி ஸ்தம்பிக்கச் செய்யும் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகம் இல்லை. இளமையிலேயே விவகாரத்திற்குரிய கடின விஷயங்களை மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அநாவசியமான வேலையாகவும் முடியும். மாணவர்களின் மனப்போக்கை ஒட்டிப் பயன்படும்படியான அறிவுப் பொருள்களை ஊட்டலே சிறந்த வழியாகும் என்பது எமது கருத்து. அறிவு வளர்ச்சி பெற்றபின் எத்தகைய விஷயங்களையும் ஆராய்ச்சி செய்ய யாரும் துணியலாம். ஆகையால் பொதுப் பள்ளிக்கூடங்களில் பொருளற்ற—சாதி-சமயப் பூசலை உண்டாக்கும்படியான பாடங்களை வைக்காமல் இருக்குமாறு

செய்வது தமிழ் மக்களின் கடமை யாகும். மேனாட்டார் இவ்விஷயங்களில் நல்ல முற்போக்கு வழியில் சென்று வெற்றி பெற்றிருக்கின்றனர் என்பதை அறிஞர்கள் அறிவர். எனவே நாமும் அவர்கள் மேற்கொள்ளும் நல்ல வழிகளைப் பின்பற்றுவோமாக.

இன்னொரு முக்கியமான தீர்மானம் தமிழ் நெடுங்கணக்கைப் பற்றியது. இப்பொழுது நமது தமிழ் நெடுங் கணக்கில் உயிர் பன்னிரண்டு. மெய் பதினெட்டு. ஆய்தம் ஒன்று. உயிர் மெய் இருநூற்றுப் பதினாறு—ஆக மொத்தம் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் வழக்காற்றில் இருக்கின்றன. இவற்றுடன் ஐந்து வடமொழி எழுத்து வரிசைகளும் வழக்கத்துக்கு வந்துவிட்டன. தமிழ் எழுத்துக்களில் ஙகா வரிசையில் ங்-ஙா-ஆகிய இரண்டும் தவிர மற்றவையெல்லாம் எத்தகைய பயனுமின்றி வீணாகவே இருக்கின்றன. இப்படியே இன்னும் சில எழுத்துக்களும் அநாவசியமானவை என்பது அறிஞர் கருத்து. நமது மொழி வளர்ச்சிக்கு வேறு பரிபாஷைச் சொற்கள் தேவை. அவற்றிற்குரிய ஒலிகள் தமிழில் இல்லை. அவைகளையும் தழுவிக்கொள்ளவேண்டும். நவீன யந்திரசாதனங்கட்கு இத்தகைய மாறுதல் இன்றியமையாததாகும். தமிழ் நெடுங்கணக்கில் மாறுதல் செய்வது பல பழைய பண்டிதர்கட்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் ஆதியிலிருந்த தமிழ் எழுத்துக்களுக்கும் இப்பொழுதுள்ள தமிழ் எழுத்துக்களுக்கும் வடிவத்தில் பல வேறுபாடுகள் உண்டு. இவைகளையெல்லாம் காலச் சக்கரம் பண்டிதர்களையும் ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டது. இப்படியே புதிய மாறுதல்களும் காலக்கிரமத்தில் தமிழ் மக்களால் ஒப்புக்கொள்ளப்படும் என்றே நம்புகின்றோம். தமிழ்நெடுங் கணக்கில் மாறுதல்செய்யத் தமிழன்பர் மகாநாடு ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருப்பது பெரிதும் பாராட்டத் தக்க விஷயம் என்றே கருதுகின்றோம். இந்தத் தீர்மானங்களையெல்லாம் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் என்று பெரிதும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றோம். இதற்குச் சாதிசமய வேற்றுமையின்றி எல்லாத் தமிழ்மக்களுடைய அன்பும் ஆதரவும் மிக மிக முக்கியம் என்பதை நாம் விரிக்கவும் வேண்டுமோ? ஒரு நாட்டின் முன்னேற்றம் தாய் மொழியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது. இந்த உண்மையை நாகரிகம் பெற்ற நாடுகளெல்லாம் நன்குணர்ந்து காரியத்தில் காட்டி வருகின்றன. இந்தியாவிலுங் கூடத் தமிழ் நாட்டைத் தவிர மற்ற நாடுகளெல்லாம் தாய்மொழிகளைப் புத்திலக்கியங்களால் அணி செய்து வருகின்றன. தமிழ்நாடு பண்டைத் தற்பெருமையில் மூழ்கிச் செயலற்றுக் கிடக்கின்றதென்றே கூறி வருந்துகின்றோம். இனிமேலேனும் தமிழ் அறிஞர்களும் மற்றவர்களும் ஒன்று கூடித் தமிழன்னையைப் புத்தம் புதிய ஆபரணங்களால் அலங்கரிக்க வேண்டும் என்று பெரிதும் விரும்புகின்றோம்.

ஓம் தத் ஸத்.

'ஆனந்தபோதினி' பொங்கல் வாழ்த்து.

(ஸ்ரீ. பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்.)

பொங்குக பாலே! பொங்குக பாலே!!
மங்கள மாகப் பொங்குக பாலே!!!
நன்னய முடனே பன்னல மார்ந்து
கன்னலும் கைக்கும் கட்டுரை யேந்தி
சொன்னலப் புலவரும் பொன்னெனப் போற்ற
அன்னையே போல அன்புடன் மதிபல
திகட்டா அமுதாம் தீந்தமி ழதனால்
புகட்டுமா னந்த போதினி மாதும்,
தகுதியோ டவளைத் தந்தமா சீர்த்தி
மிகுதியுங் கொண்டோன் மெலிந்தவர்த் தாங்கும்
தயாளமும் அருளும் சார்ந்த சற்குணன்
புயல்வண னடிகளைப் போற்று முத்தமன்
சாதுவா முனி சாமி வள்ளலும்,
ஏத மகற்றும் இனியகட் டுரைகள்
கண்டோர் களிக்கக் கவினுறத் தீட்டிப்
பண்போ டளிக்கும் பாவலர் பலரும்
"என்றே பெறுவோம் என்றே மகிழ்வோம்"
என்றே நோக்கி இன்புறப் படிக்கும்
சந்தா நேயரும் சார்ந்தவுற் றோருடன்
நந்தாப் பேறுகள் சந்தத மெய்தி
வாழிய நீடு வாதன் கருணையின்
ஆழியா னருளால் அமர்ந்து கொதித்து
"பொங்கலோ பொங்கல்; 'பொங்கலோ பொங்க"லென்
றெங்கு முழக்கம் எதிரொலி கொள்ளப்
பொங்குக பாலே! பொங்குக பாலே!!
மங்கள மோங்கப் பொங்குக பாலே!!!



புரவலர் பெருமை

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.எ., பி. எல்.)

இத் தமிழ் நாட்டில் தன்னரசு நிலைத்திருந்த காலத்தில் தமிழ் மொழி தலை சிறந்து விளங்கிற்று. தமிழ் நயமறிந்த மன்னர் தமிழ் நாட்டை ஆண்டு வந்தமையால் முத்தமிழும் முறையே வளர்ந்தோங்கி வளமுற்றுத் திகழ்ந்தன. அறிவினைக் கொல்லும் வறுமை வாய்ப்பட்டு வருந்திய புலவரை, அருந்தமிழறிந்த அரசர் ஆதரித்துப் போற்றினார்கள். இத்தகைய மன்னரையும், செல்வரையும் கண்ட பசிப்பிணி கதிரவனை எதிர்பட்ட கடும்பனிபோல் அகன்று ஒழிந்தது. சோழநாட்டிலமைந்த திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையனாரைக் கண்டபோது, கருடனைக் கண்ட நாகபாசம்போல், கற்றோர் பசி அழிந்து ஒழிந்ததென்று கல்வியிற் பெரிய கம்பர் கூறும் நயம் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

"வாசங் கலந்த மறைநாள நூலின் வகையென்ப தென்னை மழையென்று
ஆசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல் சரராமன் வெண்ணெய் [அணுகும்
தேசங்கலந்த மறைவாணர் செஞ்சொல் அறிவாளர் என்றிம் முதலோர்
பாசங்கலந்த பசிபோல் அகன்ற பதகன் துறந்த உரகம்"

என்று கம்பர் பெருமான் அழகுற அருளிப் போந்தார். கைம்மாறு கருதாது மழை பொழிந்து உலகை மகிழ்விக்கும் மேகம்போல், வெண்ணெய் நல்லூர் வள்ளலார் மறைவாணரும், செஞ்சொல் அறிவாளரும் அரும்பசி தீர்ந்து அகங் களிக்குமாறு பெரும்பொருள் வழங்கினார் என்பது இதனால் இனிதறியப் படுகின்றது. போர்க்களத்தில் வானர சேனையை வலித்து பிணித்து வெம்மை விளைத்த நாகபாசம், அருங்கலை அறிந்த புலவரைப் பற்றிப் பற்றிப் பிணித்த பசிப்பிணியை ஒத்தது. இத்தகைய கடுமை வாய்ந்த பாசம் வன்மை சான்ற கருடனைக் கண்டபோது நீங்கியதன்மை, பாசம் கலந்த பசி நோய் வன்மை சான்ற வள்ளலைக் கண்டபோது நீங்கி ஒழிந்ததை நிகர்த்

ந்தது. இவ்வாறு தமிழகத்தின் ஒளியாய்த் திகழ்ந்த அரசரும், செல்வரும் வறுமை நோய் அகற்றி அறிஞரை ஆதரித்தார்கள்.

இன்னும் தமிழ் நாட்டில் முடியுடை வேந்தராய் விளங்கிய மூவரும், தமிழ் மொழியின்பால் வைத்த தலையாய அன்பினால் அம்மொழியின் அகலமும் ஆழமும் கண்ட அரும்புலவரைத் தம் உயிரினும் அருமையாய்ப் போற்றினார்கள். தமிழறிந்தோரைக் காணுந்தோறும் தமிழ்த் தாயைக் கண்டாற் போலவே கழிபேருவகை எய்தினார்கள். இவ்வுண்மை ஒரு சிறிய கதையால் இனிதுணரப்படும். சேரநாட்டை ஆண்டுவந்த "பெருஞ்சேரல் இரும்பொறை" என்னும் அரசன் ஆண்மையிலும் வண்மையிலும் ஒப்பற்று விளங்கினான். அயல் நில மன்னராய் இருபெருந் தமிழ்வேந்தரையும் வென்று, ஔவைக்கு நெல்லிக் கனி அளித்த அதியமானது வலியழித்து, தகர்த்தற்கரிய தகடூரை வென்று, "தகடூரெறிந்த சேரமான்" என்று தமிழுலகம் போற்றத் தனிக்கோல் ஓச்சி வந்தான். இம்மன்னன் பெருமையை,

"பல்வேல் தானை அதிய மானொடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசம் குடையும் கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந்து எய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை"

என்று பதிற்றுப்பத்துப் பாராட்டுகின்றது. இவ்வரசனது கொடிய வாளின் கொற்றம் அஞ்சி அடிதொழுத முடிவேந்தர் பலராய் அமைந்தார்கள்

இத்தகைய பெருமை வாய்ந்த சேரமானது கொடைத்திறம் அறிந்த மோசிகீரனார் என்னும் முதுதமிழ்ப்புலவர், பரிசுபெற்றுப் பசிநோய் தீர்க்குமாறு அவன் மணிமாட மாளிகை நோக்கிச் சென்றார். அம்மன்னன் நீர் விழாக் காணவிழைந்து வெளியே போந்திருந்தான். ஆயினும் அடையார் சென்று அடையாத அரண்மனைவாயில் அடையாதிருந்தமையால், அறிஞர் தடையின்றி உள்ளே சென்றார். அவ்வழகிய மாளிகையின் ஒவ்வோர் அங்கத்தின் அமைப்பையும் கண்டு புலவர் அகங்களித்தார். மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று மல்லிகைமணம் கமழ்ந்தது. பசியால் கலிந்து, வெயிலால் உலர்ந்து, வழி நடையால் வருந்தித் தளர்ந்த தமிழ்ப்புலவர், அவ்வரண்மனையில் தங்கியிருந்து இளைப்பாற எண்ணினார். இருப்பதற்கு ஏற்ற இடத்தை நாற்றிசையும் நாடுகையில் ஓர் அறையில் அழகிய மஞ்சம் தோன்றிற்று. அம் மஞ்சத்தில் மெல்லிய பஞ்சமைந்த மெத்தையிட்டு, அதன்மீது பாலாவிபோன்ற வெண்பட்டு விரித்து, அனிச்சமலர்போன்ற மெல்லிய மலர் தூவியிருந்தது. மணம் கமழ்ந்த மஞ்சத்தைக் கண்ட புலவர் மனம், பள்ளத்

திற் பாயும் வெள்ளம்போல் அதன்மீது படிந்தது. பூஞ்சேக்கையின் மென்மையைக் கையினால் தைவந்து இன்புறக் கருதி அதன் அருகே சென்றார். மருங்கு செல்லச் செல்ல மாயமான்போல், அம் மஞ்சம் புலவரது மனத்தை முற்றிலும் கவர்ந்து தன் வசமாக்கிக் கொண்டது. கையினால் அதன் மென்மையை யறிய விரும்பிய புலவர் மெய்சோர்ந்து அதன்மீது சாய்ந்தார். அப்பொழுது எந்நாளும் அறியாத புதியதோர் இன்பம் உற்றுக் கணப்பொழுது கண்ணிமைத்தார். நறுமணம் கமழ்ந்த இனிய தென்றல், இயற்கை நலம் உணர்ந்த புலவரை இளைப்பாற்றக் கருதி இன்புறத் தவழ்ந்து அவர் கண்களை இறுக்கியது. சிறிது பொழுதில் மஞ்சத்தின் மென்மையாலும் மந்த மாருதத்தின் மணத்தாலும் புலவர் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்.

இவ்வாறு சிற்றுடை யுடுத்த செந்தமிழ்ப்புலவர், செம்மையாய் உறங்குகையில், மன்னவன் தானைத் தலைவர் மருங்கேவர, மாளிகை வந்துசேர்ந்தான். அமைச்சருக்கும் தானைத்தலைவருக்கும் விடை கொடுத்து, ஏவலாளர்க்கும் பணி வகுத்து, சேரமான் தனியே மேடைக்குச் சென்றான். விழாவிற்காக அணிந்திருந்த ஆடை அணிகளையும் உடை வாளையும் களைந்து வீரமுரசம் வீற்றிருத்தற்குரிய மஞ்சத்தின் அருகே சென்றான். அங்கு பழுத்த மேனியோடும், நரைத்த முடியோடும் தளர்ந்து கண்வளர்ந்த பெரியாரைக் கண்டான். அவரது முகவிளக்கத்தைக் கண்டு நாமகள் அருள்பெற்ற நல்லார் எனத் துணிந்தான். ஆயினும் அவரது ஆடையாலும் மற்றைய அடையாளங்களாலும், பூமகளால் புறக்கணிக்கப்பட்ட புலவர் என்று தெளிந்தான். அருந்தமிழறிந்த புலவர் மேனி தோய்ந்தமையால் இம்மஞ்சம் இன்று புனிதமாயிற்று என்று மன மகிழ்ந்தான். கவிச் செல்வம் பெற்றோர் புவிச்செல்வம் பெறாது வருந்தும் புன்னெறியை நினைந்து நெஞ்சம் குழைந்தான். அப்பால் அப்பாவலர்க்குப் பணிசெய்யக் கருதி, அருகேயிருந்த கவரியை அங்கையால் எடுத்து வீசினான். செங்கோலும் வெம்படையும் பற்றிப் பழகிய கைகளால், ஏவலாளர்க்குரிய கவரியைக் காவலன் பற்றி மனமலர்ந்து பணிசெய்தான்.

இவ்வாறிருக்கையில், கவிஞரும் ஒருவாறு மயக்கம் தீர்ந்து கண்விழித்தார். தான் மெல்லிய மஞ்சத்தில் அமர்ந்திருப்பதையும், காவலன் அருகேயிருந்து கவரி வீசுவதையும் கண்ட கவிஞர், மனம் பதைத்து, அக்காட்சி கனவோ, நனவோ என்று ஐயமுற்றுப் பரக்க விழித்தார். கீரன் குறிப்பறிந்த சேரன், புலவரது அச்சத்தை அகற்றக் கருதி புன்முறுவல் பூத்த முகங்காட்டி மெல்லிய மொழிகளால் நல்வரவுரைத்தான். அக்காட்சி கனவன்று என்று தெளிந்த கீரனார், திடுக்கிட்டு மன்னனுக்குச் செய்த தீமையை நினைந்து மனம் பதைத்தார். கையும் மெய்யும் நடுங்க, கண்கள் அச்சத்தால் இடுங்க மஞ்சத்தினின்றும் இறங்கக் கருதினார். இவ்வாறு பாவலர் மனமும் மெய்யும் பதைக்கக் கண்ட சேரமான் அன்பளாவிய இன்பமொழிகளால் அவரைத் தேற்றி அச்சத்தை மாற்றினான். அப்போது புலவர் ஒருவாறு மனம்

தேறி நடுக்கம் தீர்ந்து மன்னனது பெருமையை மனமாரப் புகழ்ந்தார். செஞ்சொற் கவியின் இன்பத்தால் மகிழும் சேரமான் செவிகுளிர, "அரசே!

..................................என்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவா
இருபாற் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்; நற்றமிழ் முழுதறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித்
தண்ணென வீசியோயே"

என்று வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினார். எண்ணெயின் நுரையை முகந்தாற்போன்ற மெல்லிய பூவையுடைய உனது மஞ்சத்தில் அறியாது ஏறிப் படுத்துயின்றேன். இத்தகைய பிழைசெய்த என்னை இலங்கு வாளால் இரண்டாகத் துணியாது தமிழ் அறிந்தவன் என்னும் தன்மையால் வாளா விடுத்தாய்; இது ஒன்றே தமிழ் அன்னைபால் நீ வைத்த அன்பிற்குப் போதும். ஆயினும் அவ்வளவில் அமையாது கல்லெனத் திரண்ட நின்தோளால் கடையேற்குக் கவரி வீசவும் இசைந்தாயே. உனது பெருமையை என்னென்றுரைப்பேன் என்று சேரமானது தமிழ் அன்பைச் சிறப்பித்தார். அப்பால் அருந்திய புலவர், மன்னன் மாளிகையில் விருந்துண்டு, பசி நோயைப் பல்லாண்டகற்றப் போதிய பரிசும் பெற்றுத் தம் ஊர் நோக்கிச் சென்றார் என்று புறநானூற்றுக் கவி புகழ்ந்துரைக்கின்றது.

இவ்வரலாற்றால் அக்காலத்திய தமிழரசர் அருந்தமிழ் அறிந்த புலவரை எவ்வாறு ஆதரித்துப் போற்றினார்கள் என்பது இனிது அறியப்படும். தமிழ் அறிந்தோர்க்குச் செய்த சேவையும் பணியும் தமிழ் அன்னைக்கு இயற்றிய அரும்பணியாகக் கருதப்பட்டன. தம்பியின் கொடுமையால் நாடுதுறந்து காடுபுகுந்து கரந்து வாழ்ந்த "குமணன்" என்னும் வள்ளல் தன்னிடம் வருந்தி வந்தடைந்த பெருந்தலைச் சாத்தனாரது பெருமையை அறிந்து தன் தலையையும் கொடுத்து அவரது வறுமையை நீக்கக் கருதிய வரலாறு இந்நாட்டில் வழங்கும் பழங்கதையன்றோ? இவ்வாறு தமிழ் மன்னரும், தலைவரும்' போற்ற வாழ்ந்த புலவர்கள் செந்தமிழ் மொழியில் செவ்விய நூலியற்றிப் புரப்போர் பெருமையைப் பொன்றாது நிலை நிறுத்தினார்கள்.

இரண்டு பிரபுக்கள் நாடகம் பார்த்துக்கொண் டிருந்தனர்.
ஒருவர்:—என்ன சார், இன்னும் சாவித்திரி வரக்காணோம்?
மற்றவர்:—இன்று "ராமாயண"மல்லவா?
முதல்வர்:—அப்படியா! நான் "கோவலன்" நாடகமென்று கேட்டேன்.

சிவபெருமான் கீதப் பிரியர்

(தென்னாப்பிரிகா-டர்பன், சரஸ்வதி சபைத் தலைவர்
திரு. ச. முனிசாமி பிள்ளை)

பரமபிதாவாகிய சிவபெருமானுக்கு நாமியற்றும் உபசாரங்களெல்லாவற்றுள்ளும், அவருடைய மெய்யடியார்களால் பாடித் துதிக்கப்பட்ட தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புகழ், திருப்புராணம் முதலிய அருட்பாக்களை அதனதன் பண்ணுக்கியைந்த இராகத்தோடு சந்நிதானத்தில் நின்று அஞ்சலியத்தராய் அன்போடு பாடித் தோத்திரஞ் செய்கின்ற வழிபாட்டையே மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வர். அன்றியும், அப்பெருமான் தனது மெய்யன்பர்களின் அருள் வாக்குகளில் ஈடுபட்டுக் "கன்றின் பின்னே செல்லுந் தலையீற்றுப் பசுப்போல" அவர்கட்கு வேண்டிய குற்றேவல்களைச் செய்தார் என்றும், உலகோருய்யும் வண்ணம் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்தாரென்றும் சமயாசாரியர்கள் பாடிய தேவார திருவாசகங்களிற் தெற்றெனப் புலப்படுகின்றது.

வரை யெடுத்த அரக்கன் பாடிய சாமகானத்தால் மகிழ்ந்து அவனிழைத்த தீங்கினையும் பொறுத்து வேண்டிய வரங்களையும் கொடுத்தாரன்றோ? அன்றியும், தந்தைக்குள்ள குணம் மைந்தர்க்கு என்னும் 'நியாயம்பற்றி அருணகிரிநாதரும் "மொய் தாரணி குழல்வள்ளியை வேட்டவன்'முத்தமிழால் வைதாரையு மங்குவாழ வைப்போன்," என்று கூறி யருளினர்.

இக்காலத்திலோ பலர் தேவாலயங்கட்குப் போய் அங்கே இன்னது செய்வதென்று தெரியாமல் ஊமரைப்போல நிற்கின்றார்கள். சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைக் கற்றிருந்தும் வாயாரத் தோத்திரஞ் செய்ய நாணுகின்றார்கள். சிலர் வாய் திறந்து பாடுவதைக் கௌரவக் குறைவாக எண்ணுகிறார்கள். சிலர் இன்ன இன்ன தோத்திரங்களைப் பாடவேண்டுமென்பதை யறியாமல் வாயில் வந்த வீண் பாட்டுக்களை யெல்லாம் பாடுகின்றார்கள். சில பாமரர் சந்நிதானத்தில் நின்று கூத்துப் பாட்டுக்களையும் பாடுகிறார்கள். கடவுளிடத்தில் மெய்யன்பு செலுத்த விரும்பினோர் அவருடைய பிரதாபங்களை விளக்கும் நூல்களை ஐயந்திரிபறக் கற்று அவரை மெய்யன்போடு வாயாரத் தோத்திரஞ் செய்தல்வேண்டும். அவருடைய பெருமைகளைக் கல்லாதபோது, அவரை வாயார வாழ்த்துவதும், வாழ்த்தி அவரருளைப் பெறுவதுங் குதிரையின் கொம்பாக முடியும். இதுபற்றியே, "கல்லார் நெஞ்சில் நில்லா னீசன்" என்று ஆன்றோர் கூறினர். நம்மவரில் அநேகர் தமிழ்க் கல்வி யறிவில்லாமையினால் சமயக் குருடர்களாக இருக்கின்றார்கள். ஆங்கிலங்கற்ற பெரும்பாலார் சமய நூலுணர்ச்சியின்றிக் கண்டோர் அஞ்ஞானிகளென்று பரிகசிப்பாரென எண்ணி உற்ற காலத்தில் விபூதிதானும் தரிக்க நாணுகிறார்கள். இப்போது நடக்கும் உற்சவாதிகளில் சனங்கள் சாமிக்குச் சாத்தும் ஆடையாபரணங்களைக் கண்டும், புட்ப மாலைகளால்

இயற்றப்படும் சாத்துப்படிகளைக் கண்டும், நிவேட்டி மத்தாப்பு முதலிய வாண வேடிக்கைகளைக் கண்டும் சந்தோஷித்துப் போகின்றனரே யன்றி, ஐந்து நிமிஷமாவது கடவுளுடைய சந்நிதானத்தில் நின்று எம்பெருமானுடைய பெருமைகளைச் சிந்தித்துச் சிந்தை நெக்கு நெக்குருக, அருட்பாக்களைப் பாடுகின்றிலர். ஆதலால் உலகம் உய்யவேண்டிக் கைம்மாறு கருதாது பதி புண்ணியங்களைச் செய்ய விரும்பும் புண்ணிய பிரபுக்கள் எங்கும் தேவாரப் பாடசாலைகளை ஏற்படுத்தி அதில் தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பண்ணோடு கற்றுக்கொடுக்கக்கூடிய ஆசிரியரை நியமித்து, பிள்ளைகளுக்குக் கற்பித்து அவர்கள் தனித்தனியாகவும், கூட்டம் கூட்டமாகவும் சிவபெருமானை மனங் கசிந்து வாயாரத் தோத்திரஞ் செய்யுமாறு செய்தல்வேண்டும். கண்ட சுகமுள்ள ஒருவர் இறைவன் சந்நிதானத்தில் நின்று அருட்பாக்களைப் பண்ணோடு பாடுவாரானால், கேட்டுக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கானோருக்கு தேவ பக்தி உண்டாக ஏதுவாகுமன்றோ?

ஸாஹாவின் உபதேசம்.

சமீபத்தில் பம்பாயில் நடைபெற்ற இந்திய சாஸ்திர காங்கிரஸில் புரொபஸர் ஸாஹா தமது அக்ராசனப் பிரசங்கத்தில் சொன்னதாவது:— உலகத்தில் ஸர்வ ஜனங்களும் சாப்பிடுவதற்கு பகவான் போதிய பொருளாதார மூலங்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால், ஒழுங்கான முறையில் உற்பத்தி செய்து ஒழுங்கான முறையில் விநியோகித்தால்தான் எல்லாருடைய வயிற்றிற்கும் அகப்படும். சாஸ்திர ஆராய்ச்சியால் ஜனங்களுடைய வருங்கால வாழ்வு ஓரளவுதான் மேன்மைப்பட முடியும். உலக நிலை மாறுவதற் கேற்றபடி ஜனசமூகமும் தனது முறைகளை மாற்றிக்கொள்ளாததால் பல கெடுதல்கள் சம்பவிக்கின்றன. கல்வி, நாகரிகம் முதலிய துறைகளில் இனி பற்பல தேசங்களும் தனித்திருக்கத் தீர்மானிப்பது முடியாத காரியம். செய்தியனுப்பும் கஷ்டம், போக்குவரத்துக்கஷ்டம் முதலியவை வெகுதூரம் குறைந்துபோனதே இதற்குக் காரணம். இப்படியிருந்தும் பற்பல தேச ராஜீயவாதிகளும் உண்மையுணராமல் அகங்காரம் பிடித்தலைகிறார்கள். பற்பல தேசங்களும் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழாதவரையில் சாஸ்திர ஆராய்ச்சியால் உலகத்தாருக்கு முழு அளவுக்கு நன்மை ஏற்படப்போவதில்லை. ராஜீய வாதிகள் தங்களுடைய அதிகாரங்களில் பெரும் பகுதியை சாஸ்திரிகள், கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் அடங்கிய ஒரு சர்வதேச சபையினிடம் ஒப்படைத்துவிட்டால் ஒற்றுமையாகக் காரியம் செய்வது சாத்தியப்படும். உற்பத்தி விநியோக வேலைகளைப் பொருளாதாரப் பண்டிதர்களுக்கு விட்டுவிட வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இத்தனை பேருக்குமேல் வாழக்கூடாது. இவ்வளவு ஜனத்தொகைதான் இருக்கலாமென்று நிர்ணயிக்கப்படவேண்டும். ஒருவர் மற்றவர் சொத்தைச் சுரண்டுவது முதலியவை நின்றுபோகவேண்டும். கஷ்டப்படுவோருக்கு உதவி புரிவதே நமது கவலையாயிருக்கவேண்டும். இங்கிலாந்தில் இருப்பதுபோல் இந்தியாவிலும் சாஸ்திர ஆராய்ச்சிக் கழகமொன்று ஸ்தாபித்து இந்திய சாஸ்திர நிபுணர்கள் யாவரும் அதன் வேலையில் ஒத்துழைக்க வேண்டும். கவர்ன்மெண்டும் சாஸ்திர ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட உத்தியோகப் பற்றில்லாதவர்களும் ஒத்துழைத்தால் தான் பல காரியங்கள் சாதிக்க முடியும்.

சந்திரவதனா

(ஓர் சரித்திரக் கதை.)

(வி. சங்கரய்யர்.)

ஆப்கானிஸ்தானத்திலுள்ள கந்தஹார் என்னுமிடத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு மரத்தடியில் ஒரு கரு நாகம் மண்டலமிட்டுத் தன் கொடிய வாயை ஒரு சிறு குழந்தையை நோக்கித் திறந்து வைத்துக்கொண்டிருந்தது. இந்தக் குழந்தை யார்? இச்சிறு குழந்தையை அங்கு அனாதையாகப் போட்டுச் சென்றவர் யாராயிருக்கலாம்? பொறுக்க முடியாத அதிகத் துன்பத்தை யடைந்தவரைத் தவிர, வேறொருவரும் இப்படிப்பட்ட கொடுங் காரியங்களைச் செய்யத் துணியார்கள்.

அக்கஷ்டங்களுக் குள்ளானவர்கள் யார் என்பதை ஆராய்வோம். இக்குழந்தையை அனாதையாய் போட்டுவிட்டுச் சென்றவர் அக்குழந்தையின் தந்தையான கியாஸ் என்பவரே.

இவர் பாரசீக தேசத்தரசனுடைய மந்திரிகளில் ஒருவரான க்வாஜா மஹம்மதின் அருமை மகனே. கியாஸ் தன் இஷ்டப்படி ஓர் ஏழைப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டார். அதனால் இவருக்குத் தன் குடும்பத்தாருடைய விரோதம் உண்டாகி மிக்க ஏழ்மை நிலைமையை அடையும்படி நேர்ந்தது. ஆகையால் அவர் தன் அருமை மனைவியுடன் இரண்டு குமாரர்களுடனும் காலக்ஷேபத்திற்காக இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார்.

பாரசீக ராஜ்யத்தின் தலைநகரமான டெஹ்ரானை விட்டுப் புறப்பட்டு இந்தியாவை நோக்கி தங்கள் குதிரைகளில் சவாரி செய்துகொண்டிருந்தார்கள்.

வழியோ புற்பூண்டு கூட முளையாத பெரும் பாலைவனம். குளிர்ந்த நிழலைத் தரும் மரங்களோ கிடையா. எங்கே பார்த்தாலும் மணலும், கற்பாறையுமே காணப்பட்டன. ஜலமுள்ள ஏரியோ நதியோ கண்ணுக்குப் புலப்படவில்லை.

இவ்வளவு தூரம் மனித வாசத்துக்கு அயோக்கியமான பாலைவனத்தில் கியாஸின் மனைவி பட்ட கஷ்டத்தைப் பார்க்க கியாஸின் மனம் சகிக்கவில்லை. ஆப்கானிஸ்தானத்திலுள்ள கந்தஹார் என்னும் பட்டணத்துக்கு வெகு கஷ்டப்பட்டு அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு அவர் மனைவிக்கு கி. பி. 1578-ல் ஓர் அழகிய பெண் மகள் பிறந்தது. அக்குழந்தையைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் ஒன்றுமே இல்லாததைக் கியாஸ் யோஜித்தார். அவர் அக்குழந்தையைத் தாயிட

யிருந்து பெற்றுக்கொண்டார். பட்டணத்துக்கு வெளியே வந்து ஒரு மரத்தடியில் மிக மன வருத்தத்துடன் கிடத்திவிட்டு தன் மனைவி மக்களுடன் சிறிது தூரம் சென்றார். தாய்க்குக் குழந்தையின் ஞாபகம் வந்துவிட்டது. "ஐயோ தெய்வமே! என் அருமைக் குழந்தையின் கதி என்னவோ! ஊர்! குழந்தையைத் தூக்கிக் கொடுத்தேனே பாவி!" என்று பெரு மூச்சு விட்டு கீழே விழுந்தாள். தன் அருமைக் காதலியின் தவிப்பைப் பார்க்க அவன் மனம் சகிக்கவில்லை. ஆகையால் உடனே குழந்தையை எடுத்துவர கியாஸ் கந்தஹாரை நோக்கி ஓடினன். அவ்விடத்தில் முன் சொன்ன பிரகாரம் குழந்தை மரத்தடியில் கிடப்பதைப் பார்த்த கியாஸ் தன்னை அக்காகம் கடித்தால் என்ன செய்வது என்றுகூட யோசியாமல் மெய்மறந்து ஆத்திரத்துடன் குழந்தையை எடுக்க ஓடினன். தெய்வாதீனமாக அந்நாகமானது தன் இருப்பிடத்துக்கு நழுவி விட்டது. உடனே குழந்தையைத் தூக்கிக்கொண்டு தன் மனைவி பிருக்குமிடம் வந்து சேர்ந்தான்.

நல்ல வேலையாய் அச்சமயத்தில் ஒரு காரவான் கூட்டத் தலைவன் இத்தம்பதிகளைக் கண்டான். அவன் மிகவும் நல்லவன். தயாளகுண முடையவன். அவன் இவர்கள் சரித்திரத்தைக் கேட்டு மனமிரங்கி அவர்களையும் தன் பாது காப்பில் டில்லி நகரத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

அத்தியாயம் 2.

அந்த வணிகன் டில்லி சக்கரவர்த்தியான மஹா அக்பருக்கு பிராண சினேகிதன். ஆகையால் அவனுடைய உதவியால் கியாஸும் அவர் குமாரர்களும் அக்பர் சக்கரவர்த்திக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அவர்கள் முதலில் சிறு உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார்கள். அவர்களுடைய சக்தியினாலும் சாமர்த்தியத்தாலும் சக்கரவர்த்தியின் தர்பாரில் பெரிய உத்தியோகங்கள் அவர்களுக்குக் கிடைத்தன.

கியாஸும் தன் மகளுக்கு 'சந்திரவதனு' என்ற பொருளுள்ள 'மெஹ்ருன்னிஸா' என்று பெயரிட்டான். அழகில் அக்காலத்திய பெண்மணிகளைக் காட்டிலும் அவள் சிறந்தே விளங்கினள். அவள் அதிக கவனத்துடன் கல்வி கற்பிக்கப் பட்டாள். சங்கீதத்திலும், சித்திரம் வரைவதிலும், கவனத்திலும், நர்த்தனம் செய்வதிலும் அவளை அக்காலத்தில் ஒருவரும் வெல்வாரில்லை.

(தொடரும்)

புது ஜீவிய சந்தாதார்.

தஞ்சாவூரைச் சேர்ந்த டாக்டர் வைத்தியசாலை திரு. கே. பி. கே. காசிநாதன் செட்டியார் அவர்கள், நமது "ஆனந்த போதினி"க்கு ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்திருக்கிறார். அவருக்கு ஆண்டவன் எல்லா நலன்களையும் ஒருங்கே வழங்குவானாக.

ஆசிரியர்.

பிறவிப்பிணியோ டுறவாடாதே.

(தெல்லிப்பிழை-க. சின்னப்பா.)

—:(o):—

அகவற்பா.

மண்ணுல கதனில் மானிடப் பிறவியை
எண்ணரும் பிறவியில் எழில்மிக வுள்ள
பிறவியென் றனைவரும் பேசுவ ததனை
மறவா திருந்திடில் மாட்சி மிகுந்த
சீவியம் செய்துநாம் சிவன்பத மதனை
மேவிடு தற்கு வேண்டிய வழிகளை
அல்லும் பகலும் அன்புடன் தேடி
எல்லாப் பாசமும் எமைவிட் டகலத்
தேவையாம் திருவருள் சிறப்புடன் பெற்று
நாவாற் புகலரும் நன்மை பலவும்
நாடியே நாமும் நற்பெயர் தாங்கி
வீடடை வதற்கு வெறுத்தே பிறவியைப்
பீடொன் றில்லா பிணியென நினைத்து
நாடொறும் நாமும் நமனைவெல் வதற்கு
முயற்சி பலவும் முழுமனதோடு
இயற்கைக் கேற்க இயற்றிடி லென்றும்
சொலற்கரு மின்பம் சுகித்திட லாமெனப்
பலர்க்கிதை நாமும் பகர்ந்திடு வோமே.
பிறவியிற் பற்றைப் பித்தர்க ளன்றித்
துறவிக ளாதிய தூயர் பலரும்
மறந்துபே ரின்பம் மாண்புடன் பெற்றுச்
சிறந்தநல் வாழ்வைச் சேர்வ ரென்பதனைச்
சாத்திர முணர்ந்த சகலரு மறிவர்;
சூத்திர மிதனிற் சொற்பமு மில்லை,
எவ்வகைப் பற்றும் எமைவிட் டகல
இவ்வை யகத்தில் இனிப்பிறப் பில்லை.
என்பதை யறிந்துசிற் றின்பம் பலவும்
துன்ப மெமக்குத் தொடர்ச்சியாய் நல்கிப்

பிறவியைப் பெருக்கும் பெற்றி வாய்ந்த
அறம்சிறி தில்லா தவையென வெண்ணிச்
சுயநலங் கருதாத் தூய்மையைப் பெற்றுப்
பயஞ்சிறி தில்லாப் பான்மை யுடனே
மண்பெண் பொன்னில் மயக்கம தற்றுக்
கண்மணி போலக் கருதிடும் காதலி
அன்னை பிதாவுடன் அரியபுத் திரரும்
பன்னரு மன்புடன் பகாரு மைக்கியம்
உள்ள சோதரருடன் உறவ ரயலார்
விள்ளரு முதவி விழைந்துசெய் திடுமெம்
இனத்தவ ரனைவரும் எமனெமைப் பற்றிடும்
தினத்தினி லெமக்குத் தினைத்துணை உதவியும்
செய்திடா ரென்பதைச் சிந்தையி லெண்ணி
உய்திடும் நிலையை உறுதியாய்ப் பற்றிப்
பூவுல கத்திற் பொருந்திய வொன்றையும்
தாவா திருக்கும் தன்மையைப் பெற்றுத்
தேக மதனைத் தினமும் வளர்த்திடும்
தாகம தின்றிச் சர்வே சுரனை
நின்று மிருந்து மென்று மெண்ணிப்
பொன்றுங் காலம் புன்சிரிப் போடு
அழுக்குப் படிந்த ஆடையைக் களைந்து
அழுக்கு நீக்கிய ஆடையை யணிதல்போல்
தேகம் விட்டுத் திருவருட் சக்தியால்
ஏகசிந் தையோ டிறைவன் பதத்தில்
என்று மிருந்துபே ரின்பம் பெற்று
நன்றென வெண்ணியிந் நாட்டினில் நாலு
சமய குரவரும் தாயுமா னவரும்
இமய மலையி லிருந்தபல் விருஷிகள்
திருமூல ரோடு திருவள்ளு வரும்
அருண கிரியா ராதிய மகான்களும்
பட்டினத் தடிகள்போற் பலபெரும் துறவிகள்
இட்டமாய்த் தேடி எய்திய நிலையில்
என்று மிருந்திடில் எமையோர் பிறவியும்
பொன்றுங் காலம் பொருந்திடா தென்று
சைவ சமய சாஸ்திரம் பலவும்

மெய்பல வுணர்ந்த மேதாவி யரும்
சாற்றி யிருப்பதைச் சகலரு முணர்ந்து
ஏற்ற வகையாய் எமது சீவியத்தை
இன்புடன் நடத்தி எழிலுற வாழ்ந்து
அன்புட னீசனை அனுதினம் போற்றிப்
பிறவியின் நோக்கம் பெரிது முணர்ந்து
துறவிக ளடையும் தூயநன் னிலையைப்
பெற்றுமே யிந்தப் பிறவியோ டினிமேல்
பற்றெலா மற்றதன் பயனாய்ப் பிறவியைக்
கனவிலு. மெண்ணாக் கண்ணியம் மிகுநிலை
தனைநா மடைந்து சத்தியங் கடைப்பிடித்
தின்புட னென்றும் இவ்வுல கதனில்
அன்பு நிறைந்த அரியநற் சீவியம்
செய்துமே தூய சிவபெரு மானின்
எய்தரு கழல்கள் எய்திவாழ் வோமே.
இந்நல் வாழ்வை எழிலுறப் பெற்றுச்
சிந்தைத் தூய்மையைச் சீருட னடைந்தால்
எமக்கும் பிறர்க்கும் ஏற்றநற் சேவையும்
நமனையும் வெல்லும் நவிலரும் சக்தியும்
மனமதைப் பற்றி மங்களம் நிறைந்தே
தினமு மெம்சீவியம் தீமை யொன் றில்லாச்
சீருடன் விளங்கித் திருவருள் வசப்படும்.
பேருட னிவ்வகைப் பேற்றினைப் பெறுதல்
எவர்க்கும் நலமென எண்ணியே யாவரும்
தவம்பல செய்தும் தாமதை யடைய
வேண்டிய சேவை விழைந்தே புரிந்து
காண்டற் கரிய கடவுளை யனுதினம்
தொழுது வணங்கித் தோத்திரஞ் செய்து
பழுதொன் றில்லாப் பாக்கிய மாகும்
சிவபதம் தன்னைத் திருவருட் சக்தியால்
பவமதை யகற்றிப் பணிவுடன் வணங்கிப்
பிறவிப் பிணியோ டுறவா டாது
இறவா திருக்கு மிருநிலை யெய்துவர்.
இக்கதி யதனைநாம் என்றும் விரும்பித்
தக்க வகையதைத் தாமெய் துவமே.

“கம்பர் உவமை நயம்”

——:(0):——

(திருமலை. இராமாநுஜன்)

காவிய உலகில் இன்றுகாறும் நின்று நிலவும் பெரும் புகழ் படைத்துச் சென்ற புலவர் பெருமக்களுள் தலை சிறந்தவர் நம் கவிச் சக்கரவர்த்தி—கம்பநாட்டாழ்வார் என்பது ஒருதலை. இவர் கவி நயங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தமக் கவிஞர். தான் பிறந்ததொரு தகவினால், தமிழ் உலகிற்கும் “உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு” என மேலவர் புகழும் வண்ணம் பெயரிட்டுச் சென்ற பெருமகன். காத்தற் கடவுளாம் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானிடத்துக் கொண்ட அளவிறந்த பக்திப் பெருக்கால், தான் கண்ட இன்பம் தராதலமும் பெற எண்ணி, அவ் விராம காதையைத் தமிழில் முறைப்படுத்துரைத்த தண்ணளியாளர்.

இப்புலவர் பெருந்தகையை அறியாதார் தமிழ்நாட்டில் இன்னும் இரார். ‘கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்’—‘கல்வியில் பெரியவர் கம்பர்’—என்றின்னோரன்ன முதுமொழிகளே அடுக்கிய மூவுலகும் கேட்கும் ஆற்றல் உடைத்து. ஆயின் இவரது சரிதத்தை உள்ளது உள்ளபடி உணரமாட்டாத நிலையில், தமிழ் நாட்டினராகிய நாம் இன்று இருக்கிறோம் என்று நினைக்கின் நம் மனம் பெரிதும் புண் படுகின்றது. எனினும், இவர் இயற்றிய இராம கதையாவது நம்மிடை நின்று உலவுவது நாம் முன்னைச் செய்த நல்வினைப் பயனேயாம்.

இவ் விராம காதையை முன்னர்த் தேவ பாடையில் செய்தவர் வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி என்பார். ‘கற்பார் இராம பிரானை அல்லால் மற்றும் கற்பரோ’ என்று பெரியார் பணித்தருளிய படியே, தன் குணம் செயல் அழகு முதலிய இவற்றான் கண்டவர்தம் மனம் வாங்கும் தன்மையுடையராய இராமபிரானது கதையினைக் கேட்கும் பான்மை ஒன்றுமே அற முதல் பொருள்கள் அனைத்தையும் பயக்க வல்லது என்பது பல்லான்ற கேள்விப்பயன் உணர்ந்த பழம் பெரும் மக்கள் துணிவு.

இவ்வாறு ஒப்புயர்வற்றதொரு திவ்விய கதையைச் செந்தமிழ்ப் பாவினால் பரிந்து உரைத்த கம்பநாடரது இராம காதையோ அவ் வாரணக் கவிதையாம் வான்மீகத்தினும் பல்லாற்றானும் பெருமை படைத்தது எனப் பாவலர் பலரும் போற்றுமாறு உள்ளது. நம் கவிச் சக்கரவர்த்தி அதனையே முதல் நூலாகக் கொண்டு வழிநூல் இயற்றினரேனும், கால தேசங்கட்கேற்ப சிற்சில இடங்களை மாற்றியும் திருத்தியும் புதுக்கிச் செய்யத் தலைப்பட்டனர். மற்றும் இதன் கண் உள்ள சொற் பொருள் நயங்கள், கவி யமைப்பு, கற்பனைத்திறன், காவிய அமைதி, தொடை நயம், சந்த இன்பம், குறிப்புப் பொருள், இலக்கண விசேடம், சொல்லணி, பொருளணி, ஆகிய இன்னோரன்ன சிறப்பு இயல்புகள் எல்லாம் புலம் மிக்கவரால் பெரிதும் பாராட்டற் குரித்து. இது கருதியே

‘கம்பநாடன் கவிதையில்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே’ என அபியுக்தர் வாக்கு வழங்கி வருவதூஉம் என்க. பலவாய்ப் பரந்து விரிந்து கிடந்த இலக்கியங்களை எல்லாம் கற்று அவ்வவற்றின் கண் ஒவ்வோர் சுவைநலங் கண்ட கலைவாணர் யாவரும் எல்லா நயங்களும் ஒருங்கு அமையப்பெற்றிருத்தலின், இஃதொன்றனிடத்தே மிக்கதொரு அன்பு செலுத்தி பயின்று இன்பம் எய்தி வந்தனர் என்பது இதன் கண் பொதிந்த புதைபொருளாகும். அவற்றை எல்லாம் எடுத்து விரித்து உரைப்பது ஈண்டைக்கு ஏலாமையின், கம்பர் கையாண்ட உவமைகளின் நயத்தை மட்டும் சிறிது விரித்துக் கூற விடைபெறுகின்றேன்.

உவமை யென்பது அணிவகைகளுள் ஒன்று. அணியாவது அழகுதருவது என்னும் பொருட்டாய்ச் செய்யுள்கட்கு இன்றியமையாது வேண்டப்படுவது. “உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்” என்பது செய்யுள் இயல். அணிகலம் அணிந்த நங்கை யாங்கனம் பார்த்தோர் பலரானும் விரும்பப்படுகின்றனளோ, அம்முறையே அணியொடு புனைந்த கவியும் கண்டோரான் விரும்பப்படும்.

நிற்க, உவமை அணியாவது இரு வேறு பொருள்களிடத்து உள்ளது ஒரு ஒப்புமையை விளங்கக் கூறுதல். புலி அறியாதான் ஒருவனுக்குப் பூனை ஒன்றனைச் சுட்டிக் காட்டி ‘இது போல்வது புலி’ எனத் தெரிவிப்பது இவ்வணியின்பாற் படும். கண்டும் கேட்டும் இராமையான் புலன்கட்குப் போதமாகாததொரு பொருளைக் கண்டதுபோல மனதில் பதிய வைத்து விளங்கச் செய்தல் இது கொண்டு யாம் அடையும் பெரும் பயனாகும். பிறிதொன்றற்கும் இலதாய்த் தனி வகையான் இதற்குமட்டும் உள்ள இத் தன்மைத்தாய அரிய பயன் கருதியே, அணி வகைகளைப் பெரிதும் வேண்டாத ஒரு சார் பண்டைத் தமிழாசிரியரும் இஃதொன்றனையே முனைந்து வேண்டினர். கட்புலன் ஆகாக் கடவுள் பற்றிய உணர்வு உரு முதலியவற்றையும் இவ் வணி நலத்தால் நாம் நன்கு உணர்தல் கூடும். உதாரணமாகக் கடவுளியல் அறியாதான் ஒருவனுக்கு அஃதறிந்தான் பிறிதொருவன் “கடவுள் விளக்கினை ஒத்து விளங்குபவர்” என உவமை முகத்தாற் கூறின், அவ்வறியாதான் உடனே கடவுளைப்பற்றி ‘விளக்கினைப்போன்ற ஒளியுள்ளவர்; அறியாமையாகிய இருள் பற்ற ஒண்ணாதவர்; உயிர்களது அகவிருளைப் போக்கடிக்கும் ஆற்றல் உற்றவர்; பிறவிப் பிணியான் வருந்தும் யாவரானும் விரும்பப் படுகின்றவர்’ என்றிப்படியெல்லாம் அறிபொருளைப் போலப் போத முண்டாகி விரித்துணர நேரிடுகிறது. எனினும் இதன் மூலம் இவ்வாறு அறிந்து கொள்ளுவதற்கு முன் கடவுளைப்பற்றிக் கொண்ட உயர்தர எண்ணமும் சிறிது குலைய இடம் ஏற்படும். ‘கற்பனை கடந்து நின்று மனமொழி மெய்களுக்கு எட்டாதவர் கடவுள்’ என இவ்வாறு அறிதற்கு முன்னமே கொண்டதொரு பழம் கொள்கை சிறிது அசைவுற்று ‘உலகில் தோன்றும் விளக்கினை ஒத்த [illegible]

187515

யவர் கடவுள்' எனக் கொள்ளும் கொள்கைக்கும் உடன் இடன் தருதல் மன இயற்கையே யாகும். ஆகையால் இப்படிப்பட்ட சிறிய குறைபாட்டையும் உண்டாக்காத வண்ணம் உவமை கூறி முடித்தலே உத்தமக் கவிகட்கு இயற்கை. இதனை நம் கவிச் சக்கரவர்த்தி பால் இயற்கையொடு இயைந்த பெருங்குணம் என்பதை நாம் தொட்ட தொட்ட இடந்தோறும் மலையிலக்கென இலங்கக் காணலாம். மற்று நடுத்தரம் உடைய கவிகளோ எனின் இக் குற்றம் உளவாதலை அறிந்து, பின் நீக்கும் பொருட்டு "அறையாத மிகு பெருங்காற்று அடித்தாலும் அசையாதே அவியாதே விளங்குகின்ற சோதி மணி விளக்கு"—'கோடாத மணி விளக்கு'—என இவ் வண்ணம் எல்லாம் சில அடை மொழிகளைக் கூட்டி வேற்றுமை காட்டி உலக விளக்கினும் கடவுளாம் விளக்கு வேறுபட்டு உயர்ந்தது என விளக்கிச் செல்வர். ஆயின் கருவிலே திருவுடைய கவிஞர் இஃதொப்பப் புரிவது இலர். உவமை தொடுக்கும் காலத்திலேயே இத்தகைய தாழ்ச்சியுணர்வு பிறக்க ஒண்ணாது மேன் மேலும் உயர்த்திக்கொண்டே போவர். இதன் உண்மையினைக் கம்பர் கூறியுள்ள உவமைகளுள் யாதேனும் ஒன்றிரண்டை ஆயும் முகத்தானே நாம் நன்கறிதல் கூடும். இதுவே யான் பிறரிடம் இன்றிக கவிச் சக்கரவர்த்தியாரிடம் மட்டும் சிறப்புரிமையாகக் கண்டதொரு காட்சி.

கம்பராமாயணத்து இராம லக்குமணரது பாலப்பருவ நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் பாலகாண்டப் பெரும் பகுதியுள், கையடைப்படலம் என்று தலைப் பெயருள்ளதொரு சிறுபாகம் உண்டு. இது அவ்விராம லக்குமணரைத் தயரதன் கோசிக முனியிடத்து அடைக்கலமாக ஒப்புவித்ததைப் பற்றிக் கூறும். இப் படல அமைப்பைப் பற்றிக் கம்பர் கையாண்ட முறையைச் சிறிது கூர்ந்து நோக்கின், அவர் அதனைத் தயரதன் கொலு விருக்கை, கோசிகன் வருகையும் வேண்டுகோளும், கையடையாக ஒப்புவித்தல் என மூச்சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு கதை நடத்திச் செல்லுகின்றார் என்பது நன்கு விளங்கக் கூடும். அதனுள் தயரதன் கொலுவிருத்தல் சிறப்புப்பற்றி நான்கு கவிகள் புனைந்து உள்ளார். அது பற்றி எழுந்ததே நமது ஆராய்ச்சி. தயரதனோ அறுபதினாயிரம் ஆண்டுகள் உலகு முழுவதும் உறுபகை இன்றி ஓம்பினோன்; சக்கரவர்த்தி; வள்ளல்; பொருள் போகம் அதிகாரம் என்றிவற்றான் தன்னோர் ஒப்பார் இம்பர் இல்லை என்னும் வண்ணம் நிமிர் கீர்த்தி உடையோன். இத்தகைய பேரரசனது இருக்கையை நமக்கு அறிவிக்க நினைக்கின்றார். உடனே யாம் அறியாத இதனை அறிந்ததொரு உவமை காட்டித் தெளிவு உறுத்துவான் வேண்டினார். இவ்வளவு பெருமையை உடையானுக்கு உலகத்துள்ள பொருள்களை உவமை கூறின், அது விலங்கினும் மிக்கது விண்ணவர் தரு என ஒப்புக் கூறலின் வேறல்ல. ஆகையால் பொருள் போகம் அதிகாரம் என்றிவற்றான் மிக்குடையனாய்க் கருதப்படும் இந்திரனை உவமை கூறி முடிக்கின்றார். இவ்வாறு கூறுங்காலத்து யாம்

முற்கண்டபடி இந்திரனுக்குள்ள குற்றங் குறைகளும் உடன் சார்தல் கூடும். அன்றியும் 'இந்திரனை ஒத்தவன் தயரதன்' எனக் கூறின், 'தயரதனும் இந்திரனும் ஒப்பானவர்' எனக் கற்போருக்குக் கருத்துண்டாகி, இந்திரனினும் சிறந்தவன் தயரதன்' எனக் காவிய முறைக் கேற்ப எடுத்த தலைவனுக்கு ஏற்றம் கூறும் பாவம் குறைபடும். இவ்விதம் சிறிது தாழ்வுணர்ச்சி பிறத்தற்கு இடங்கொடுத்தலே இவ்வுவமையின் கண் உள்ள வேறுபாடு என முன்னர்க் கண்டோம். ஆனால் நம் கவிச் சக்கரவர்த்தியாரோ இவ்விரு குறையும் ஒருங்கு நீங்குமாறு முதன் மூன்று பாட்டுக்களின் நின்றே 'தயரதன் இந்திரனினும் சிறந்தவன்' என்ற எண்ணம் உடன் உடன் உதிக்குமாறு கவிகளை நன்கு நயம்படப் புணர்த்து, இறுதியாகக் கோசிக முனிவனைத் தயரதன் வணங்கி யுபசரித்தான் எனக் கூறவேண்டிய இடத்து,

"கந்தமலரில் கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக் கடிதுஎழுந்து அடிபணிந்தான்"

எனக்கொண்டு முடிப்பர். இப்படிக் காட்டிய உவமையுள் நாம் முற்கண்ட தாழ்ச்சி உணர்வு பிறவாமைப் பொருட்டுத் "தயரதன் வீற்றிருந்த மண்டபம் சுதர்மையினும் மிக்கது; தயரதன் இந்திரனினும் மிக்கவன்; ஆங்கு வந்த கோசிகன் பிரமனினும் உயர்வு பூண்டோன்" என உபமேயமாகிய கோசிக தசரதரது தோற்றமே அதனினும் சிறந்தது எனத் தோற்றுமாறு இப்படல முதற் செய்யுளின் நின்றே அடிகோலும் ஆசிரியர் தன்மை ஆய்ந்து ஆய்ந்து மகிழ்தற்குரியது.

"நனைவரு கற்பக நாட்டு நல்நகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும்; சிந்தையான்
நினையவும் அரியது; விசும்பின் நீண்டது; ஓர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தினன்"

என்பது இப்படல முதல் செய்யுள். அரும்புகள் அலரப்பெற்ற கற்பகவிருக்ஷத்தைத் தனக்குச் சிறப்புரிமையாகக்கொண்ட அமராவதிப் பட்டணத்தில் வசிக்கும் தேவரனைவரும் நம் இந்திரன் வீற்றிருக்கும் சுதர்மை இதுதானோ என்று ஐயுறும் வண்ணம் அழகு வாய்ந்ததாயும்; மனத்தினாலும் நினைத்தற் கரியதாயும், ஆகாயத்தை அளாவியதாயும்; தனது வருகை நோக்கி மணி முதலியவற்றான் அழகு செய்யப்பட்டதாயும் உள்ளதொரு மண்டபத்தைத் தயரதன் அடைந்தான் என்பது இதன் தெளிவான பொருள். பின்னர் இந்திரன் எனத் தயரதனை உவமிக்கக் கருத்துக்கொண்ட கம்பர் இச் செய்யுளிலேயே தயரதன் மண்டபம் தேவ இந்திரன் மண்டபத்தினும் பலவகைச் சிறப்புற் றிலகுவது என்பதனைக் "கற்பகநாட்டு நல்நகர் அனைவரும் அணைதர அயிர்க்கும்............மண்டபம்" என்ற சொற்கிடக்கையால் பெற வைத்தார். அன்றியும், புண்ணிய வினை மிகப் புரிந்து, தேவரானமையான் அயிர்த்தற்குக்

காரணமற்ற அறிவு மிக உடைய அவர்கள் அனைவருமே, ஒரு சேர தினந்தோறும் பழகிப் பயின்று அறிந்த மண்டபத்தின் இயலையும் மறந்ததோடு இன்றி, இதுதான் நம் மண்டபம் எனத் துணிந்தனர். என்னில் தயாதனது மண்டபம், அதனினும் மிக்கதொரு எழில் நலம் படைத்த தென்பதனை வற்புறுத்திய அழகின் இயலை நாம் குறிக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு இம் மண்டபம் சுதர்மையினும் அழகிற்று எனக் குறிப்பாற் காட்டிய இவர் கூறும் அடுத்த கவியின் அமைப்பையும் துருவி ஆராய்வோம்.

"தூயமெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்;
சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்
நாயகன் இவன்கொல்? என்றுஅயிர்த்து நாட்டம்ஓர்
ஆயிரம் இல்லைஎன்று ஐயம் நீங்கவே"

மிகப் பெரிய வானத்து இயங்கும் தேவ தூதர்கள் அனைவரும் நம் நாயகன் இந்திரன் இவன்தான் என்று சந்தேகித்துப் பின்னர் ஆயிரம் கண் பெற்றிலாமையின் அல்லன் எனத் தேறும்படி ஆதனத்து அமர்ந்தான் தயாதன் என்பது இதன் கருத்து. இதன் உள்ளும், முன், மண்டபத்தைத் தேவ மண்டபமாகிய சுதர்மைக்கு ஒப்பிட்டதற்கேற்ப, தயாதனை இந்திரன் என ஒப்பிடுதலோடு, இந்திரனினும் உயர்ந்தோன் தன் காப்பியத் தலைவனும் தயாதன் எனத் தொனிக்குமாறு அமைத்திருத்தல் கழிபேர் இன்பம் விளைப்பனவாகும். பிறிதும் பொதுவகையாய்த் தேவர்கள் அயிர்த்தனர் என்னாது சாரணராகிய தேவ தூதர்களை எடுத்தமைத்ததன் நயம் நாக்கொண்டு நவிலும் நடுத்தரம் உடையதன்று. தேவ ஒற்றராவார் தம் தாய் நாட்டிற்கும் நாட்டினையாளும் அரசற்கும் யாதொரு வகையிலும் இடர் உறுதவாறு நன்கு காத்துவரவேண்டி மாற்றாது புலம் சென்று அடிக்கடி உளவறிந்து அப்பொழுதைக் கப்பொழுது அரசனைக் கண்டு வந்து சொல்லும் தன்மையர். ஆகவே இவர்கள் எவ்வாற்றானும் தம் அரசனை மறக்கவோ அன்றி வேறு ஒருவரைத் தம் அரசர் என்று அயிர்க்கவோ இடம் சிறிதும் இல்லை. உதாரணமாக ஆண்டுகள் நாள் திங்களாய் உடன் மன்னி உறையும் தன் தகப்பனை உரு அறியாது வேறு ஒருவனைத் தன் தகப்பன் என ஒருவன் மயங்கிக் கண்டனன் எனில், தன் தகப்பனினும் அவ்வேற்றான் உரு ஒளி நலங்களால் மிக்கு இருப்பன் என்பது மறுக்க முடியாத உண்மையே அன்றோ? அம்முறையேயாண்டும் எப்பொழுதும் பழகிப் பழகிப் பயின்றறிந்த தேவதூதரும் மயக்குற்றார் எனின் தேவேந்திரனினும் தயாதன் உரு ஒளி நலங்களால் மிக்கு விளங்கினன்' என்பது சொல்லாமலே போதரும். இம்மட்டோ? 'நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினர்' என்பது அவர்கள் ஐயம் நீங்கித் தெளிதற்கோர் ஏதுவாய்பாடாக எடுத்துக் காட்டப்பட்டதாயினும், தொனி வகையானும் குறிப்பு வகையானும் 'இந்திரனுக்கு அகலிகை காரணமாக

எய்திய சாபங்கருதி ஆயிரம் கண் ஏற்பட்டது; அது குறையுடைமை; ஆயின் தயாதன் அக்குறையும் இன்றி இந்திரனினும் சிறந்தோன்' எனத் தெரிவித்து நின்றமையையும் நுதலிற்று. என்னே கம்பர் கவிப் பெருமை! கல்வியே கம்பரால் அன்றோ சிறப்பெய்தியது!

இனி, இதனை அடுத்த கவி கோசிகன் வருகையைக் குறிப்பது.

"மடங்கல்போல் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு
இடங்கொள் நான்முகனையும் படைப்பன் ஈண்டு எனாத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினான்"

இக்கவியினுள் விசுவாமித்திர முனிவன் வந்தான் எனக் கூறலந்தவர், திரிசங்குவிற்காக உலகம் படைக்கப் புகுந்ததொரு வரலாறு குறிக்கும் அடைமொழியுட் சில புணர்த்துக் கூறுகின்றனர். இங்ஙனம் கொண்டதும் தாம் பிற்கூறப்புகும் உவமையினுள் யான் முற்கூறிய வேறுபாடு உறுமைப் பொருட்டே என்க. முன் இரு கவியால் தயாதன் தேவேந்திரனினும் பொலிவுற்று விளங்கினன் என்பதைத் தெரிவித்த கம்பநாடர் இங்கு தேவேந்திர சபைக்கு அடிக்கடி வரும் பிரமனை ஒப்ப, அவனினும் சிறந்த விசுவாமித்திரன் வந்து சேர்ந்தான் என்பார், "மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு இடங்கொள் நான்முகனையும் படைப்பன் ஈண்டு எனாத் தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினான்" என்றார். சத்திய லோகத்தில் உள்ள தேவகணங்களையும் பிரமனையும் ஒரு சேர இவ்வுலகிலே யுண்டுபண்ணத் தொடங்கிய முனி எனவே, பிரமனினும் முனி உயர்ந்தவன் என்றதொரு தன்மை துளக்கமற விளக்கமாகும்.

இவ்வாறாக 'தேவலோகத்தில் உள்ள சுதர்மையினும் அழகொடு விளங்கிற்று தயாதனது மண்டபம்; தேவேந்திரனினும் அழகொடு விளங்கினன் தயாதன்; ஆங்கு வரும் பிரமனினும் பெருமை படைத்தான் ஈண்டுப் போந்த கோசிகன்' என உவமையைத் திறம்பட எடுத்து நாட்டி இறுதியில்,

"வந்தமுனி எய்துதலும் மார்பில் அணிஆரம்
அந்தரநிலத்து இரவி அஞ்ச ஒளிவிஞ்சக்
கந்தமலரில் கடவுள்தன் வரவு காணும்
இந்திரன் எனக்கடிது எழுந்து அடிபணிந்தான்"

எனக் கூறிப்போகும் நயம் நன்கமைந்த தொன்றும்.

இப்படிக் கண்ட உவமையில் யான் முற்கூறியபடி யாதொரு குற்றமும் ஏற்பட இடம் இன்றி ஒழிவதோடு காவிய முறைக்கேற்ப தான் எடுத்த தலைவனுக்கு ஏற்றம் இட்ட நிலையும் நன்று வீறி விளங்குதல் கண்கூடு.

ஈழவர்

(பண்டித-இராம சுப்பிரமணிய நாவலர்.)

ஈழவர் என்பார் இக்காலத்து மலையாளத்துப் பல பாங்கரினும் வரும் இழிவகுப்பினராவர். இவர் சூத்திரர் முதலினோராலும் இழிக்கப்பட்டு வருகின்றனர். கோயில்கள் முதலியவற்றினும் தெருக்களினும் இவர்க்குப் புகுதை தவிர்க்கப்பட்டுள்ளது. தீண்டப்படாத வகுப்பினரைப்போல அத்துணைக்கு இவரை 'உயர் வகுப்பினர்' ஒதுக்கா விடினும், பெரும்பாலும் அவரைப்போலவே பல்வகைச் சடங்குகளினும் கடிந்து வைத்தனர்.

இவ்வகுப்பினருடைய ஒழுக்க வழக்கங்களும் மொழியும் இன்னின்னவாகும் என இக்கால நிலைமையான் ஒருவாறு கூறப்படினும், அவை முற்காலத்து எந்நிலைய வெனவும் எத்தகைய வெனவும் துணிந்து கூறுதற்கண் பலரும் ஐயப்பாடு உறுகின்றனர். திருவாங்கூர் கொச்சி முதலிய இடங்களில் இவ்வகுப்பினர் உழவு, சோதிடங் கூறல், மருத்துவம், ஏவல் முதலிய தொழில்களை யுடையவராய் வாழ்கின்றனர். திருவாங்கூரின்கண் தமிழுலவும் பாங்கரின் முதுகுடிகளாய் வாழும் இவருட் சிலர் தமிழையே தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். வடதிருவாங்கூரினும் கொச்சியினும் வாழ்வார் மலையாள மொழியினைத் தாய்மொழியாக உடையவராவர். தமிழ் நவலும் இவருட் பெரும்பாலாரும் மலையாள நயம் கலந்த தமிழ்ச்சொற்றொடர்களையே வழங்குகின்றனர்.

இவர் வழி வழிச் சூத்திரர்க்கு அடியராவ ரெனவும் அவர்க்கு இன்னோர் பலவாற்றானும் உரிமைப்பட்டு வாழ்ந்து வந்தனர் எனவும் சில மலையாள வெளியீடுகள் கூறுகின்றன. இவர்க்குச் "சேவகர்" என ஒரு பெயர் வழங்குவ துண்டெனவும் அப்பெயர் அவர் சூத்திரர்க்கு அடிமை யானமையைத் தெரிக்குமெனவும் கூறுவாருளர். இவரிடை 'ஆலமுட்டிற் சானார்' (சான்றோர்) 'கய்யாலைக்கட் சானார்' (சான்றோர்) முதலாக வரும் பல வகுப்பினர் உளர். ஆகலின் 'சானார்' என்னும் பெயரானும், இவர் அடிமைகளாவர் என்பதை வற்புறுத்தப் பலரும் முனைகின்றனர். கால்ட்வெல் துரை மகனார் 'சான்றோர் என்னும் வகுப்பினரால் ஈழவர் கொழும்பில் நின்றும் கொணரப்பட்டவராவர்' என்பர். என்னணமேனும் இவரை இழி வகுப்பின ராக்குதலையே பல்லோர் உரைகளும் நோக்கு உடையனவாக வுள. சிலர், 'இழிவானவராகலின் ஈழவ

ராயினர்' எனக் கூறுவர். இங்ஙனம் பலபட்ட ஆராய்ச்சிகட்கு இடனாகிற்கும் இவ்வகுப்பினரது வரலாற்றை ஈண்டு இலக்கிய நெறியால் சிறிது ஆராய்வாம்.

'ஈழம்' என்பது கொழும்பின் ஒரு பகுதியாகிய சிங்களம். [கொழும்பு என்பாரு முளர்] ஈழவர் என்னும் சொல் ஈழம்+அர் எனப் பிரிந்து ஈழத்தை உடையவர், ஈழத்தில் வாழ்பவர் என்று பொருள் படும். ஈழத்தவர் என்பது வழக்காயினும் இழுக்கின்றாம். இடைக்கண் வந்த 'அத்து'ச் சாரியை எனப்படுமாகலின். 'இழிவு' என்னும் சொல் ஈழமாயிற்று என்பது, அன்னதோர் வழக்கின்றாதலால் பொருந்தாது என்க. ஈழவர் என்பார் ஈழதேயத்திலிருந்து திருவாங்கூர் முதலிய விடங்களில் தொன்று காலத்துக் குடிபுக்கவராவர் எனக் கொள்வதே சொன்முறைக்கும் நிகழ்ச்சி முறைக்கும் சிறக்கற் பாலது. ஒரு நாட்டிலிருந்து பிறநாடுகட்கு மக்கள் யாதேனும் காரணம் பற்றிக் குடிபுகுதல் இயல்பாதல்போல ஈழவருட் சிலர் தந்நாடு நீங்கிப் பிறநாடு புக்கனர் என்க. அங்ஙனம் புக்கவரை ஈண்டைய மக்கள் ஈழதேயத்தவர் என்பது கருதி 'ஈழவர்' என அழைக்கத் தலைப்பட்டனர். பாண்டியினின்று மலையாளம் புகுவாரை அந்நாட்டார் பாண்டிநாடர் எனவும் மலையாள மிருந்து பாண்டி நாட்டுப் புகுவாரை அந்நாட்டார் மலையாளிகள் எனவும் அழைப்பது போன்று இவ்வழக்குங் கோடற்பாற்று. ஈழவரின் முற்குலத்தவர் இப்போழ்தும் ஈழத்தின் கண்ணே இருப்பக் கூடும். ஆயின், அவரை ஈழவர் என்னாதது என்னை எனின், ஈழநாட்டாரை அந்நாட்டார் தாமே அழைக்க விரும்பார், தாம் உணர்வாராகலி னென்க. 'ஈழம்' என்பதொரு நாடெனவும் அந்நாட்டுமக்கள் சிறப்புற்று வாழ்ந்தன ரெனவும் 'ஈழத்துணவும் காழகத் தாக்கமும்' எனவரும் பட்டினப்பாலை அடியான் அறியலாகும்.

ஈழமிருந்து குடியேறிய அன்னோர் தாம் தாம் சென்று உறைந்த விடத்து வழங்கும் மொழியைக் கற்றுப் பற்பல தொழிலினும் பயில்வாராயினர். திருவாங்கூரின் வடபாலாராகிய ஈழவர் மலையாளமும் தென்பாலார் தமிழும் வழங்குவதற்கு இதுவே சிறந்த காரணமாம். இருபாலார்க்கும் உறவு உண்டெனவும் சில ஈழவர் தாமே கூறவும் கேட்டுளேம். ஆகலின், இவர் ஒரு நாட்டினர் என்பதூஉம் ஒரு குடியினர் என்பதூஉம் பெறப்படும். இவரது ஒழுக்க வழக்க முறை நோக்கியோ தொழின்மரபு நோக்கியோ தாம் சென்ற விடத்து அடிகோலி வாழ்ந்த 'உயர்சாதி'யரான் இவர் தாழ்த்தப்பட்டனர். இவர் அடிமைகளாக வாங்கப்பட்டனர் என்றேனும் இவர்கள் அடிமைகளாயினர் என்றேனும் கொள்வதற்கு யாதொரு சான்றாய், இதுகாறும் ஒப்பப்பெறுந் தகுதியுடையதாய்ப், போதாவில்லை. இவருட் சிலர் தம் வறுமை கருதிப் பிறர்க்குத் தொண்டு செய்து வாழ்ந்திருப்பக் கூடும் என்பதொன்று பற்றி இவரை வழிமுறை யடியவர் எனக் கோடல் ஒரு நோக்காய உள்ளத்தின் பயனன்றிப் பிறிதன்று என்பேம்.

இனிச் ‘சேவகர்’ என்னும் பெயரான் இவரை அடியவர் என்னலாகாதோ வெனின், அது நேரிதின் முடிவு போவதொன்றன்று. அப்பெயர் இவரை ஒதுக்கி யடக்கவேண்டும் என்னும் நினைவினராய சிலரான் ஏற்பட்டிருப்பவும் அமையும். ‘சேவகர்’ என்பது வடசொல்லாகலின், பார்ப்பாரானும் இடத் தகும். உயர் சாதியர் எனக் கொண்டு வீறு உற்றவர் பிறர்க்கு அளிக்கும் பெயர்களான் உண்மை கடைபோக்க எண்ணுதல் அவம்படுவதாகும். ‘சேவகர்’ என்பது ‘வீரர்’ என்னும் பொருளையு முடையதாகலின், ஈழவரது வீரத்தன்மை கருதி அப்பெயர் வழங்கப் படவும் பெறும். சிங்களம் என்னும் ஈழதேயத்தார் இற்றைநாளிலும் தறுகண்மை படைத்தவரென்பதை ஒப்பாதார் அரியரே யல்லரோ? குடிபுக்க ஈழவரும் பலர் கடவுளர்க்கு உயிர்ப்பலி செய்தல் ஊணின்பொருட்டு உயிர்க்கொலை புரிதல், மந்திர நெறிகளின் பொருட்டுப் புலைத்தொழிலும் கொலைத் தொழிலும் ஆற்றல் முதலிய அஞ்சா ஒழுக்க முடையவரா யிருத்தல் மேற்போந்ததை வலியுறுத்து மென்க. அவரது வீரத்தன்மை ஈண்டு இற்றைநாளிலும் விளங்கக் காணலாம். ஆகலின், ‘சேவகர்’ என்பது இவரது வீரம்பற்றி எழுந்த பெயர் எனக் கோடலே சிறப்புடைத்தாகின்றது. கால்ட்வெல் துரைமகனார் கூறியவாறு, இவர் சான்றார்க்கு அடியவராகக் கொணரப்பட்டனர் என்பது பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. ஈழவர் வகுப்பின் கண்ணும் சான்றார் என்னும் வகுப்பு இருக்கு மிடத்து அவரான் அவர் அடிமை கோட்படல் எவ்வாறு என்று அறியகில்லேம்.

இக்காலத்து ஈழவர் சிலர் சூத்திரர்க்கு அடிமையா யிருப்பது கருதிப் போலும் ‘அவர் சூத்திரர் அடிமைகள்’ என்று சிலர் கூறுவது? பிறசாதியார்க்கும் அவர் அடிமையா யிருப்பக்கண்டும் அவ்வாறு கூறப்படுவதென்னையோ? அவர் சூத்திரர்க்கு அடியர் என்பதற்குச் சான்றுகள்தாம் யா? அவர் முற்றொருங்கு அடிமைகளா? அவருள் ஒரு சாரார் மட்டும் அடிமைகளாயினரா? அவர் எவ்வகையான் எதன்பொருட்டு அடிமைக ளாயினர் என்றற்றொடக்கத்துக் கேள்விகட்கு யாரையும் மாற்றிறுப்பக் காணேம், யாம். ஆகலான், வகுப்புப் பேய்களான் ஆட்டி யலைக்கப்பெற்று இவ்வாறான கூறுவதைப் பொது நோக்குடையார் கொள்ளாரென்க. இயற்கை வீரமுடையரும் எத்தொழிலினும் வல்லவருமாகி எழில்கொண்டு ஓங்கும் ஈழவரிடத்து வேற்றுமை பாராட்டாது, பிறநாட்டார் என்னும் நோக்கை விடுத்து, ஒப்பக்கொண்டு ஒழுகற்பாலதாம் காலமன்றோ, இஃது?

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

இந்திர விழா

பண்டிதர்-ஆர். பஞ்சநாதம் பிள்ளை.

இந்திரவிழா என்பது இந்திரனைப்பற்றிய திருவிழா என்று பொருள்படும். இது இந்திரகோடனை என்றும், தீவகச் சாந்தி என்றும் பெயர் பெறும். விழா, உற்சவம், பண்டிகை, திருநாள் என்பன ஒரே பொருளைத்தரும் சொற்களாம்.

ஒரு நாட்டின் நாகரிகத்தை அளந்து அறிதற்குரிய பொருள்களில் அந்தந்தக் காலங்களில் நிகழ்ந்து வந்த திருவிழாக்களையும் ஒன்றாகக் கொள்ளலாம். மாந்தர்கள் வழிபட்டு வந்த தெய்வங்களின்மீது காட்டிவந்த பக்தி காரணமாகவே திருவிழாக்கள் பழங்காலத்தில் நடைபெற்றுவந்தன, பக்தியின் வெளிப்பொருளாகவே உற்சவங்கள் நிகழ்ந்து வந்தன. கண்ணுக்கு இனிய காட்சிகளும், செவிக்கு இனிய கீதங்களும், பக்தியை உண்டாக்கும் பரவச மொழிகளும், சரீரத்துக்குரிய சமயச்சின்னங்களும் ஆகிய பஞ்சேந்திரியங்களுக்குரிய பக்திச் செயல்கள் திருவிழாக்களில் பொலிவுடன் விளங்கி வந்தன.

இவ்வாறு நடைபெற்று வந்த திருவிழாக்கள் நாளடைவில் காலப்போக்காலும், மக்களின் பழக்க வழக்கங்களாலும், மற்றும் பலவேறு காரணங்களாலும் பழைய முறைகளிலிருந்து மாறிப் புதிய புதிய முறைகளில் வெளி ஆடம்பரங்களுடன் நடைபெற்று வருகின்றன. எனினும் பக்தி என்பது சிறிது குறைவாகவே காணப்படுகின்றது.

முற்காலத்தில் திருவிழாக்கள் எவ்வாறு நடைபெற்று வந்தன என்பதைத் தமிழ் நூல்களில் மிகவும் விளக்கமாய்க் காணலாம். அவைகளுள் தமிழ் நாட்டார் அனைவர்க்கும் பொதுவான இந்திர விழாவின் வரலாற்றை ஆராய்வோம்.

முதலாவதாக, இந்திரன் யாவன்? இவனுக்குள்ள வேறு பெயர்கள் என்னென்ன? இவனுக்குள்ள தகுதிகள்யாவை? இவனுக்கு விழாச்செய்ய வேண்டிய காரணம் யாது? முற்காலத்தில் எவ்விதம் கொண்டாடப் பட்டது? தற்காலத்தில் எவ்விதம் நடைபெறுகின்றது? என்ற பாகுபாடுகளாகப் பிரித்துக்கொண்டு ஆராயலாம்.

இந்திரன் யாவன்? இவன் வானுலகத்திலுள்ள அமராவதி நகரத்தில் தேவர்களுக்குத் தலைவனாக இருந்துகொண்டு அவர்களது துன்பத்தைப் போக்கி, ஆங்குள்ள நானாவித இன்பங்களை இமையா நாட்டத்துடன் அனுபவித்து வருவான் என்பர்.

வேறு பெயர்கள்:—இவனுக்கு மேக வாகனன், வேள்விக்கு வேந்தன், வச்சிரபாணி, போகி, வாசவன், புரந்தரன், புருகூதன், சசீமணாளன், ஆகண்டலன், வலாரி, சதமகன், ஆயிரங்கண்ணோன் முதலிய பெயர்களும் உண்டு. இப்பெயர்கள் எல்லாம் இவனுக்குப் பற்பல காரணங்களால் ஏற்பட்டன.

தகுதிகள்:—எவன் ஒருவன் நூறு அசுவமேத யாகங்கள் செய்து முடிக்கின்றானோ, அவன் விண்ணுலகத்திலுள்ள இந்திர பதவியை அடைவான் என்பது நூற்கொள்கை. இதன்பொருட்டே இவன் சதமகன் என்றும் அழைக்கப்படுவான். தமிழ் நூல்களில் இந்திரர்கள் பலரைப் பற்றிய வரலாறுகள் காணப்படுகின்றன.

இன்பப் பொருள்கள்:—அங்குச் சிந்தித்தவற்றைத் தரவல்ல சிந்தாமணி என்னும் சிறந்த ரத்தினம் உண்டு. நினைத்தவற்றைக் கொடுக்க வல்ல சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம் என்னும் ஐந்து மரங்கள் உள்ளன. அழகு மிக்க ஐராவதம் என்னும் வெள்ளையானை ஊர்ந்து செல்வதற்கு உள்ளது. தெய்வத்தன்மை வாய்ந்த உச்சைசிரவம் என்னும் குதிரை உண்டு. எண்ணிய பொருள்களை ஈயவல்ல காமதேனு என்னும் பசு உண்டு. கூடாரை அழிக்கவல்ல குலிசப்படை உண்டு. ஆடலிலும் பாடலிலும் வல்ல அரம்பையர்கள் உளர். உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை அவ்வப்போது அசைவினால் அறிவிக்கும் வெண்மை நிறமுள்ள பாண்டு கம்பளம் உண்டு. இவைகளையல்லாமல் உண்டாரை உயிர்ப்பிக்கவல்ல சாவாமருந்தாகிய அமுதமும் உண்டு.

விழாச் செய்யவேண்டிய காரணம். இந்திரனுக்குள்ள பல பெயர்களில் மேகவாகனன் என்பது ஒன்றாகும். மழை பெய்கின்ற மேகத்தை வாகனமாகக் கொண்டு உலாவுதலாலும், மழைக்குக் காரணனானதாலும், இப்பெயர் ஏற்பட்டது. மழை இல்லாமல் மாநிலத்தார்க்கு உணவில்லை. ஆதலாலும், "வானின் றுலகம் வழங்கி வருதலால், தானமிழ்தமென் றுணரற் பாற்று" என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி உயிர்களை உய்விக்க வல்ல அமுதமாக மழை விளங்குவதாலும், மழை இன்றி ஓரறிவுயிராகிய புல்லும் தலைகாட்டாது ஆதலாலும், மழைக்காலத்தில் தோன்றும் வான வில்லுக்கு இந்திர தனுசென்று பெயர் வழங்குவதாலும், இடி இடிக்குங் காலத்தில் இந்திர குமாரனான அர்ச்சுனனது பெயர் சொல்லப்படுவதாலும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களில் மருத நிலத்துக்கு இந்திரன் தெய்வமாயிருப்பதாலும் இந்திரனுக்கு மக்கள் திருவிழாச் செய்து வழிபடலானார்கள்.

விழாவின் பூர்வ வரலாறும் முறையும் பழந்தமிழ்ப் பனுவல்களாகிய சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களில் இதன் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனை நோக்குவோம்.

சோழநாட்டுத் தலைநகரங்களுள் ஒன்றான காவிரிப்பூம் பட்டினத்தை ஆண்டுவந்த சோழ அரசர்களுள் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்பவன் அகத்திய முனிவரை அணுகித் தன் நாடு மேம்பட்டு விளங்குமாறு அருள்புரிய வேண்டினன். அவர் அரசனிடம் இந்திரனுக்கு விழா நடத்தி மகிழ்விக்கும்படிக் கட்டளையிட்டார். அவ்

வாறே செம்பியனும் இந்திரனுக்கு விழாச் செய்து வழிபடலானான். விழாவும் பரம்பரையாக நடத்தப்பட்டு வரலாயிற்று. மற்றைக் கோவில்களுடன் இந்திரனுக்கும் ஓர் கோவில் அவ்விடத்தில் ஏற்பட்டது. அது வாசவன் கோவில் என வழங்கும்.

இந்திர விழா சித்திரை மாதம் பௌர்ணமி திதியில் தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் வரை நடைபெற்று அடுத்த பௌர்ணமி திதியில் முடியும். விழாக் காலங்களில் நகரமாந்தர்கள் தங்கள் இருப்பிடங்களை மாசு நீக்கித் தூசு செய்வார்கள். வாசல்களில் பூரண கும்பங்களையும், பாவை விளக்குகளையும் வைத்து அணி செய்வார்கள். தூண்களில் வாழை மரங்களையும் பாக்கு மரங்களையும் கட்டுவார்கள். வீதிகளிலும் மன்றங்களிலும், தோரணங்களையும் துகிற் கொடிகளையும் நாட்டுவார்கள். பழைய மணலைப் போக்கிப் புது மணலைப் பரப்புவார்கள். இந்திரனுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் அந்தந்தக் கோவில்களில் பூசைகள் நிகழும். ஒரு புறத்தில் அறிஞர்கள் பலர் கூடி அம்பலங்களிலும், பந்தல்களிலும் கடவுளரைப்பற்றியும், விழாக்களைப்பற்றியும் சமயச் சார்பான பிரசங்கம் செய்வார்கள். மற்றொருபுறத்தில் நாட்டியமும் இசைக் கீதங்களும் நிகழும். வீரர்கள் பலவகைப் பலிகளைக் கொடுத்துத் தெய்வங்களை வழிபடுவார்கள். சிலர் தங்கள் தலைகளை அரிந்து பலிகொடுப்பார்கள். சிறைப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள். வேறு பலவகையான காட்சிகளும் நடைபெறும். இவ்வாறே நகரம் முழுதும் விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவார்கள்.

விழாவின் கடைசி நாளில் அரசன் முதல் குடிகள் ஈறாக அனைவரும் புறப்பட்டுக் கடற்கரைக்குச் சென்று கடலாடுவார்கள். அன்று கடற்கரை கண்ணைக் கவரத்தக்க அலங்காரங்களுடன் நகரம்போல விளங்கும். பலர் பலவிதமான படவீடுகளை, அதாவது கூடாரங்களை அமைத்துக்கொண்டு அறுசுவை உண்டியுடன் ஆடிப்பாடி இன்புறுவர். பின்பு எல்லோரும் தங்கள் தங்கள் இல்லங்களுக்கு ஏகுவர். இவ்விதமாக இந்திர விழா நடைபெறும். இவ் விழா நீண்டகாலம் வரையில் நடைபெற்று வந்து நெடுமுடிக் கிள்ளி என்னும் சோழ அரசன் காலத்தில் நின்றுவிட்டபடியால், காவிரிப்பூம் பட்டினம் கடலாற் கொள்ளப்பட்டது.

விழாவின் தற்கால முறை. மக்களுடைய வாழ்க்கைமுறை நாளடைவில் மாறுபட்டதுபோலவே, திருவிழாக்களும் வேறுபட்டு நிகழத் தலைப்பட்டன. சித்திரை மாதத்தில் நடைபெற்றுவந்த இந்திரவிழா இக்காலத்தில் நடைபெறுவதில்லை. ஆனால் பொங்கல் பண்டிகைக்கு முதல்நாள் வரும் போகி பண்டிகைக்கும் இந்திர விழாவுக்கும் சிறிது சம்பந்த மிருப்பதாகத் தோன்றுகின்றது.

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் பெரும் பண்டிகைகளில் பொங்கல் பண்டிகையும் ஒன்றாகும். இப் பண்டிகை மூன்று நாட்கள் வரை கொண்டாடப்படுகின்றது. முதல்நாள் போகி பண்டிகை என்றும், இரண்டாவதுநாள் பொங்கல் பண்டிகை என்றும், மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல் என்றும் பெயர் பெறும். தாங்கள் அடைந்த நன்மைகளுக்கு நன்றியாகவே இப் பண்டிகையைத் தமிழ்மக்கள் கொண்டாடுகிறார்கள். தமக்கு வேண்டிய உணவுகளை உண்டாக்குதற்கு இன்றியமையாததாகிய மழைக்கும், அடுத்துத் தனது

கிரணங்களால் உதவிசெய்யும் சூரியனுக்கும், உணவைப் பெறுதற்குத் துணையாக உழுது உதவுகின்ற மாடுகளுக்கும் முறையே மூன்று நாட்களிலும் பண்டிகை கொண்டாடுகிறார்கள்.

இவற்றுள் போகி பண்டிகை என்பது, போகமுடையவனான அதாவது இன்பமுடையவனான இந்திரனைக் குறித்துச் செய்வது. இது மார்கழிமாதக் கடைசி நாளில் கொண்டாடப்படுகின்றது. அன்று எல்லோரும் எண்ணெய் ஸ்நானம் செய்து புதிய ஆடை உடுத்தி நல்லுணவுகளை உண்டு மகிழ்கின்றனர். ஆனால் அன்று இந்திரனுக்குரிய பூசை எதுவும் நடைபெறுவதில்லை.

ஆகவே, சித்திரை மாதத்தில் இருபத்தெட்டு நாட்கள் வரையில் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றுவந்த இந்திரவிழா நின்றுபோய் யாது காரணத்தாலோ மார்கழிமாதக் கடைசியில் ஒரே நாளில் நேர்மாறான முறையில் நடைபெறுகின்றது.

இதுபோன்ற மாறுபாடுகளுக்கெல்லாம் காரணம், பழையன கழிதலும் புதியன புகுதலுமோ? மக்களுடைய பக்தி குறைவோ? காலச் சக்கரத்தின் சுழற்சியோ? விஞ்ஞான சாஸ்திரத்தின் விந்தையோ? யாதோ?

"Funny" Magzin of India.

(Bi-monthly) Published on the 5th & 20th.

GIVES THE BEST OF EVERYTHING

Jokes, Stories, Serials, Humorous articles, Cartoons of great events and Competitions.

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE OUR ADDITIONAL FEATURES.

Price As. 1-6.

AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.

or Apply to:—

The "Funny Magzin" Office,

No. 6, Lawyer Chinnathambi Mudali St.,

Sowcarpet, MADRAS.

நன்றியறிவின்மை

(ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை)

நாடகமேடை போன்ற இந்நானிலத்திலே, அறியாமை காரணமாகவும் அகங்காரம் காரணமாகவும் உண்மையன்பின்மையாலும் சுயநல நோக்கத்தினாலும் பிறர் செய்த நன்றியை மறப்போர், இறைவனது தண்டனையை இறுதியில் தவறாமல் பெறுவது உறுதி என்பதை அறநூல்கள் யாவும் வற்புறுத்துகின்றன. மண்ணுலகில் மற்றோர் செய்த நன்றியை மறப்போரே எத்தகைய பிராயச்சித்தத்தினாலும் நீங்கிக்கொள்ள முடியாத கொடிய பாவத்திற்கு ஆளாவாரானால், ஆன்ம உய்வுக்கு ஏற்ற அறிவையும் அவயவங்களையும் அளித்து மனிதப் பிறவி வழங்கியருளிய தடங்கருணைப் பெருங்கடலாகிய இறைவன் செய்த பெருநன்றியை மறப்போர் எத்தகைய பாவத்திற்கு ஆளாவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆழிசூழ் உலகம் முழுதும் மறைந்து எங்கும் பெருவெள்ள மயமாய் விளங்கிய ஊழிக் காலத்திலே, கருவிலிருக்கும் சிசுவைத் தாங்கும் அன்னையைப் போல் உயிர்களனைத்தையும் உலகங்களனைத்தையும் திருவயிற்றில் தாங்கிக் காத்தருளிய இறைவனது ஒப்புயர்வற்ற பெருநன்றியை மறந்து, அப் பரமனைப் பழிப்போர் பிறவிப் பயனைப் பெற இடலாது பெரும் பாவத்திற்கு உள்ளாவார் என்பதில் ஐயமும் உண்டோ? "செய்ந்நன்றி குன்றேன்மின்! தொண்டர்காள்! அண்டனையே ஏத்தீர்களே!"—எனும் திருமங்கையாழ்வார் அருள் மொழியை மறப்போர் உண்மையன்பர் ஆவரோ? மனிதப் பிறவியில் பெறத்தக்க சரீர பயன், இறைவன் செய்த பெருநன்றியை என்றும் மறவாமை ஒன்றேயன்றோ! "கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன்றாகி—உருவாகிப் புறப்பட்(டு) இங்(கு) ஒருத்தி தன்னால் வளர்க்கப்பட்டாருயிரும் கடைபோதாரால்—மருவாகி நின்னடியே மறவேன் அம்மான் மறித்தொருகால் பிறப்புண்டேல் மறவாவண்ணம்—திருவாரூர் மணவாளா! திருத்தெங்கூராய்! செம்பொனே கம்பனே! திகைத்திட்டேனே!" எனும் திருநாவுக்கரசர் அருள் மொழியைச் சிந்தியாமல், இறைவன் செய்த பெருநன்றியைச் சிறிதும் எண்ணாமல் வாழ்வோர், மனிதப்பிறவியின் பயனைப் பெற்றுய்யக்கூடுமோ?

இருவினைப் பயன்களைக் கழித்து, 'என்றும் குன்றாப் பேரின்பம் எய்துவிப்பது இறைவனது இன்னருள் ஒன்றே'—என்னும் உண்மையை உணர்ந்து அத் திருவருளைப் பெற்று உய்வதற்காகவே இம் மனிதப் பிறவியை அருட்பெருங்கடலாகிய ஆண்டவன் நமக்கு அளித்துள்ளார். 'கல்லைப் பிசைந்து கனியாக்குவது' போல, உண்மையன்பினால் ஊனையும் உயிரையும் உள்ளத்தையும் உருக்கி அதனால் விளையும் பேரின்பத்தைப் பெருக்கி நம்மை உய்வித்தருளத் திருவுள்ளம் பற்றியே, தனது அருளுருவங்களையும் மெய்யன்பர்களையும் கண்டு

களிக்கக் கண்களையும்; அகத்தை உருக்கும் அன்பு கனிந்த அருட்பாக்களை இருவிழிகளிலும் இன்பக் கண்ணீர் சொரிந்து இழியப் பாடி மகிழ வாயையும்; திருவருட் சிறப்பைக் கேட்டு ஆனந்திக்கச் செவிகளையும்; வணங்கியும் பூசித்தும் இன்புறக் கைகளையும் அருட்பெருங்கடலாகிய ஆண்டவன் நமக்கு வழங்கியுள்ளார். ஒப்புயர்வற்ற அப் பெருங்கருணையைச் சிறிதும் சிந்தியாமல்—நெக்குருகும் நெஞ்சொடும் இன்பக் கண்ணீர் பெருகும் விழிகளொடும் அன்பு கனிந்த அருட்பாக்களை ஓதி மகிழாமல்—மாயையின் கொடுமையால் மதியை மயக்க வரும் ஐம்புல வேடர்களாகிய உட்பகைவர்களைக் கண்டு கதறிப் பதறி கருணைக் கடலாகிய கடவுள் திருவடிகளில் சரணமடையாமல் மனித உடலைத் தாங்கி வாழ்வோர், பிறவியின் சீரிய பயனைப் பெற்றுய்யக் கூடுமோ?

அறியாமை காரணமாகவும் ஆணவ மிகுதியினாலும் மனிதர்கள் செய்யும் பாவங்கள் பலவகைப்பட்டன. அறிந்தோ அறியாமலோ புரிந்த பாவங்களுக்காகப் பெரிதும் இரங்கி உண்மையில் உள்ளம் குமுறி நிற்போர்க்கு, அறநூல்கள் சில பிராயச்சித்தங்களையும் தெரிவித்திருக்கின்றன. ஆனால், செய்ந்நன்றி மறந்த பாவத்திற்கோ எப் பிராயச்சித்தமும் எந்நூலும் கூறவில்லை. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை—செய்ந்நன்றி கொன்ற மகற்கு"—என்பது பொய்யாமொழி. "ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்—மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்—பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்—வழுவாய் மருங்கில் கழுவாயும் உள என—நிலம் புடைபெயர்வதாயினும் ஒருவன்—செய்தி கொன்றோர்க்(கு) உய்தி இல்லென அறம் பாடிற்றே'—என்பது புறநானூறு.

"சிதைவகல் காதற்றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவி அந்தணரை ஆவைப் பாலரைப் பாவைமாரை
வதை புரிகுநர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல்; மாயா
உதவி கொன்றார்க்(கு) என்றேனும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?"—

என்பது கம்பராமாயணம்.

* * *

அறநெறி துறந்த தனது தமையனின் புன்செயலின் இழிவைக் கும்பகர்ணன் நன்கு உணர்ந்தவனாக இருந்தும், வீபீடணனது வேண்டுகோளுக்கு இணங்கி—உயிர் வாழ்க்கையில் ஆசை கொண்டு—இராவணன் தனக்குச் செய்த நன்றிகளை மறந்து—தன்னைப் பெரிதும் நம்பியிருந்த அவனைத் துறந்து இராமபிரானது இணையடிகளில் சரண்புக இசைந்தானா? நன்றியறிவை வெளியிடுவதற்காக உயிரையும் தியாகம் செய்ய உற்சாகத்துடன் ஒருப்பட்டு நின்ற தனது மனநிலையை,

"நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்னை
போர்க்கோலம் செய்து விட்டார்(கு) உயிர்கொடா(து) அங்குப் போகேன்"—

என்றன்றோ கும்பகர்ணன் வெளியிட்டு நின்றான்!

"தம்பியர் ஐந்து பேரும் தனித்தனி ஏவல் செய்ய
வம்பவிழ் அலங்கலோடு மாமணி மகுடம் சூடி
அம்புவி முழுதும் நீயே ஆளலாம் வருக"—

என்று அன்னையாகிய குந்தி தேவி ஆர்வத்துடன் அழைத்தபோது, நன்றி மறவாத வெற்றி வீரனாகிய கர்ணன் என்ன விடையிறுத்தான்?

"இடம் படுத்திடுவேல் இராசராசனுக்குச்
செருமுனை சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்(கு) இனிப்
புகழும் கருமமும் தருமமும்"—

என்றன்றோ கர்ணன் தனது நன்றியறிவை வெளியிட்டான்! விதியின் கொடுமையால் கொடியவர்களிடையில் வசிக்க நேர்ந்தாலும் எதனாலும் கலக்கப்படமுடியாத தமது நன்றியறிவின் உறுதியை வெளியிட்டதனாலன்றோ, இவ்விரு பெரும் வீரர்களும் என்றும் அழியாப் புகழுக்கு உரியவர்களாகி உயர்வு பெற்றனர்!

* * *

"உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்"—என்று இறைவனை வேண்டினார் இராமலிங்க சுவாமிகள். உள்ளத்தில் ஒன்றை ஒளித்து வைத்துக்கொண்டு—வெளியில் வேறு ஒன்று கூறி மயக்கி உண்மையன்புடையவர்களைப்போல நடிப்போர், இக்காலத் தமிழ்நாட்டிலே பல்லவர் இருந்து வருகின்றனர். அத்தகையவர்களது 'உள்ளம் வேறு; வெளிப் பேச்சு வேறு' எனும் உண்மையை உணர்ந்துகொள்ளாமல், அவர்களது பேச்சின் அழகிலும் எப்பொழுதும் புன் சிரிப்புடன் கூடி விளங்கும் மோகன முக வசீகரத்திலும் ஈடுபட்டு மதி மயங்கிப் பேரன்பு பூண்டு பெரிதும் மகிழ்ந்தோர், முடிவில் அவர்களது நன்றியறிவின்மையைக் கண்டு பெரிதும் உள்ளம் குமுறி ஏமாந்து ஏங்கித் தவித்து நிற்க நேர்ந்து விடுவதும் உண்டு. அவ்வாறு மனச்சாட்சிக்கு மாறுபடாமல் பூர்ண நம்பிக்கையுடனும் பேரன்பு பாராட்டி பெரிதும் மகிழ்ந்திருந்த கபடறியாத உண்மையன்பர்கள் திடீரென்று திடுக்கிட்டுக் கலங்கிக் குமுறி நிற்குமாறு ஏங்கி நிற்கச் செய்யத் துணிவு கொண்டுவிடும் நன்றியறிவற்றோரை, அனைவர் உள்ளத்திலும் அமர்ந்திருக்கும் ஆண்டவன் ஒருவனே தண்டிக்க வேண்டும். தனது அன்பில் பேரார்வம் கொண்டு நிற்கும் ஒருவனை நேரில் காணும்போது பிரமாதமாக முகஸ்துதி செய்துவிட்டு, தன்னை மனமார்ந்த உண்மையன்புடன் நேசிக்கும் தூய நெஞ்சுடைய அவன் எதிரில் இல்லாதபோது—தனது மனத்தில் அவனைக்குறித்து தோன்றிய சந்தேகங்களைத் தகுந்த முறையில் களைந்தெறியக் கூடாதவாறு அவன் வேறிடத்தில் தங்கியிருக்கும்போது—அவனை தன் மனம் போனவாறெல்லாம் மிக மிகக் கேவலமான முறையில் பழித்துப் பேசவும் எழுதவும் துணிந்துவிடும் 'மகானுபாவர்கள்', இக்காலத் தமிழ் நாட்டிலே பலர் இருந்து வருகின்றனர். நேரில் பழிசாற்றித் தூற்றினால் தக்கபடி பதிலளித்து வாயடக்கிவிடக் கூடியவனை, அருகில் இல்லாத போது இறந்துவிட்டவனைப் போலும் நினைத்துக்கொண்டு—தன்மேல் அவன் கொண்டிருந்த உண்மைப் பேரன்பைச் சிறிதளவும் சிந்தித்துப் பாராமல் மனம்—போனவாறெல்லாம் கேவல முறையில் பழித்துப் பேசவும் எழுதவும் துணிந்துவிடும் 'மகானுபாவர்க'ளால், இன்றைய தமிழ் நாட்டில் எவ்வளவுபேர் நெஞ்சம் குமுறிக்கொண்டிருக்கின்றனரோ ஈசனே அறிவன்!

* * *

"அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்(கு)—என்புதோல் போர்த்த உடம்பு"—என்பது பொய்யாமொழி. சூழ்ச்சிகளும் துன்பங்களுமே நிறைந்

துன்ப இவ்வுலகிலே, சோதனைகளின் கொடுமையால் உள்ளம் குமுறி நிற்கும் உண்மையன்பர்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்து வருவது உத்தமர் நட்பு ஒன்றே. உண்மை நண்பர்களது உத்தம அன்பு ஒன்றினாலேயே, ஒருவன் எத்தகைய சோதனைகளையும் சகித்துக் கொள்ளக்கூடிய சக்தியைப் பெற்றுக் கொண்டுவிடுகிறான். தன்னிடம் மனமார்ந்த உண்மைப் பேரன்பு கொண்டிருந்த உத்தம நண்பனது உள்ளத் தூய்மையை உணர்ந்து கொள்ளாமல்—கேவலம் அற்பத் தவறுகளுக்காக—தவறுகளென்று தனக்குள் தானே எண்ணிக்கொள்பவைகளுக்காக—முன்பு பழகி உணர்ந்தவை எல்லாவற்றையும் மறந்துவிட்டு, அவன் தன்னிடம் காட்டிய பேரன்புக்காக சிறிதளவும் நன்றியறிவின்றி—அவன் அருகில் இல்லாமல் மிகுந்த தூரத்தில் இருக்கும்போது அவனது கபடறியாத தூய உள்ளம் புண்பட்டுக் கலங்கிப் பெரிதும் குமுறக் கூடியவாறு அவனைக் கேவலமுறையில் மனம்போனவாறெல்லாம் பழித்துரைக்கத் துணிபவர், அறிவிற் சிறந்தவரென்று புகழப்படுபவராக இருந்தாலும் அனுபவத்திற் சிறியவரே ஆவர் என்பது உறுதி.

குறைவிலா நிறைவுடையவன் இறைவன் ஒருவனே. மனித உடல் தாங்கிய எவரும் அறிந்தோ அறியாமலோ சில சமயங்களில் தவறு செய்துவிட நேர்ந்துவிடுவதுண்டு. எவ்வாறோ தவறிழைத்துவிட்டபின் அத்தவறை உணர்ந்து—அதன் பொருட்டு பெரிதும் இரங்கி—அதன் பின் அத்தகைய தவறு எதுவும் நேர்ந்து விடாதவாறு கூடிய வரையில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள முயல்வதே உண்மையன்பர் இலக்கணம். அவ்வுண்மையைச் சிறிதும் சிந்தித்துப் பாராமல்—தன் மனத்தில் தோன்றிய சந்தேகத்தைத் தானே உறுதிப்படுத்திக்கொண்டுவிட்டு-கடந்த காலத்தில் அன்ப குலாவிய நாட்கள் பலவற்றையும் ஒரே நாளில் மறந்துவிட்டு-சிறிதும் நன்றியறிவின்றி-அன்புக்காகவே அன்பு செலுத்திய கபடற்ற குழந்தைமனம் படைத்த உண்மையன்பர் உள்ளத்தைப் புண்படுத்தத் துணிவோர், உண்மையன்பின் சிறப்பை உள்ளபடி உணராதவர்களேயாவர். "கொன்றன்ன இன்னா செயினும், அவர் செய்த-ஒன்று நன்று உள்ளக் கெடும்"—எனும் தமிழ் மறை அத்தகைய நன்றியறிவற்ற சந்தேகப் பிராணிகளுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தவல்லதாகும்.

நெல்லுக்கு உமி உண்டு; நீருக்கு நுரை உண்டு; மலருக்கு புறவிதழ் உண்டு; சந்திரனுக்கும் களங்கம் உண்டு. அச் சிறு குறைகளைக் கண்டு அவற்றை வெறுத்துப் பழித்து விலக்கத் துணிவோர், பித்தர்களேயாவரன்றோ! அடைக்குந்தோறும் உடைத்துக்கொண்டு வெளிப்படும் வெள்ளப் பெருக்கின் மேல் கோபித்துக்கொண்டு, அணை கட்டும் முயற்சியைக் கைவிட்டுவிடுவது அறிவுடையோர்க்கு அழகாகுமா? கையைச் சுட்டுவிட்டதென்று சினந்து வீட்டில் தீயை மூட்டாமல் பட்டினி கிடப்போர், பரிகசித்தற்கு உரியவரேயாவரன்றோ! தவறிக் கண்ணைக் குத்திவிட்ட கையை வெட்டி எறிந்துவிட எவரேனும் துணிவாரோ?

"இலங்கு நீர்த்தண் சேர்ப்ப! இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
தீமை எடுத்துரைக்கும் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரிற் கடை"—

என்ற நாலடியார்க்கிணங்க, அன்பரின் குற்றங்களை வெளியிட்டுப் பழிப்போர்

குற்றம் செய்தவர்களைக் காட்டிலும் கடையாவரன்றோ! அவ்வுண்மையை உணராது-குணங்கள் பலவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு-சிறுபிழையை ஒன்றுக்குப் பத்தாக பெருக்கிப் புனைந்து கேவலமுறையில் தூற்றத் துணியும் வன்னெஞ்சர் உத்தம நண்பர்களாவரோ? "நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது-அன்றே மறப்பது நன்று"—எனும் அருள்மொழியைச் சிறிதும் சிந்தித்துப் பாராமல்-நன்றிகள் பலவற்றையும் மறந்துவிட்டு-சந்தேக மிகுதியினாலும் விபரீத கற்பனைகளாலும் சிறு தவறுகளை பன்மடங்கு பெருக்கி இல்லாத பழிகள் பலவற்றையும் சேர்த்துக்கொண்டு-உண்மையன்பு கொண்டு அலையும் உத்தம உள்ளம் உடையவர்களை இழிந்த முறையில் பழித்துரைக்கத் துணிவோர், மெய்ந்நட்பின் சிறப்பை உணராத கோழைகளேயாவர்.

நகைமுகமும் நயமொழிகளும் எளிதில் பிறரை வசீகரித்து விடக்கூடியனவாக இருக்கின்றன. அவற்றின் அபார வசீகர சக்தியினாலே, ஒருவரிடம் ஒருவர் என்றும் மறக்கமுடியாத பேரன்பு கொண்டுவிடுகின்றனர். அத்தகைய அன்பர்களுக்கு தம் மனத்தைக் கவர்ந்தோர் பேசும் மொழிகளும் எழுதும் உரைகளும் எப்பொழுதும் இன்பம் பயப்பனவாகவே தோன்றுகின்றன. அத்தகைய கள்ளமற்ற உள்ளத்தினர், நகைமுகத்தாலும் நயமொழிகளாலும் தமது மனத்தைக் கவர்ந்து கொள்பவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, சலிப்பென்பதே இன்றி-நேரம் கழிவதே தெரியாமல்-பரவசமடைந்து விடுகின்றனர். அவர்களோடு உரையாடுவதில் கொள்ளும் இன்பத்தினாலும் உற்சாகத்தினாலும் தூக்கத்தையும் துறந்து குலாவி நிற்கின்றனர். அத்தகைய சம்பாஷணையிலே, அவர்களது அன்புப் பித்து பன்மடங்கு அதிகரித்துவிடுகின்றது. அதன்பயனாக, தமது மனத்தைக் கவர்ந்தோர் உறங்கிக்கொண்டிருக்கும்போதும், கன்னக் காதலியைப்போல் மெள்ள நெருங்கிவந்து தட்டியெழுப்பி-சம்பாஷணைக்கு அவசியமான விஷயங்கள் இல்லாதபோதும் அவற்றை உண்டாக்கிக்கொண்டு-நள்ளிரவிலும் உறக்க மயக்கமின்றி அவர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கத் துணிந்துவிடும் உத்தம நண்பர்களும் இக்காலத்தில் சிலரேனும் இல்லாமலில்லை. இரவிலும் தூக்கம் பிடிக்காமல்-பொழுது போக்குக்கு வழியறியாமல்-பொருளற்ற-பயனற்ற-வீண்வம்புகளையெல்லாம் பேசிப் பெருந் தொந்தரவுசெய்யும் அற்பத் தோழர்களை இங்கு குறிப்பிடுகின்றேனில்லை. வருஷத்தில் சில தினங்களே வந்திருந்து-கலையின்பம் பக்தியனுபவம் பரோபகாரப் பணிப் பித்து முதலிய சிறந்த விஷயங்களைப்பற்றியே உரையாடி-இருவரும் பெருமகிழ்வு பெறக் கூடியவாறு ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்மிகுந்த நல்வழியிலேயே செலவழிக்க விரும்பி நிற்பவர்களான-எளிதில் வெல்லமுடியாத நித்திரா தேவியையும் வெற்றிகொண்ட-உத்தமத் தோழர்களையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

அத்தகைய உத்தம அன்பினர், நகைமுகத்தாலும் நயமொழிகளாலும் தமது மனத்தைக் கவர்ந்துகொண்டு விட்டவர்களிடமிருந்து வரும் ஒவ்வொரு கடிதத்தையும் எவ்வளவோ ஆர்வத்துடன் பெற்று ஒரு முறைக்குப் பன்முறை படித்து, எக்காலத்திலும் இன்பூட்டக்கூடிய சிறிய நூல்களைப் போன்றே அக் கடிதங்களும் எக்காலத்திலும் இன்பூட்டக்கூடியவை என்று பெருமதிப்பு வைத்து அவற்றை மிகுந்த ஆசையுடன் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விடுகின்றனர். தங்களது மனத்தைக் கவர்ந்துகொண்டு விட்டவர்களிடமிருந்து தாங்கள் எதிர்பார்க்கும் பதில் கிடைக்கச் சற்று தாமத

மானால், அவர்களிடமிருந்து அப் பதில் கிடைக்கும் வரையில்-ஒன்றன்பின் ஒன்றாக நான்கைந்து கடிதங்கள் எழுதியாவது பதில் பெறும்வரையில்-அமைதி அடையாத கள்ளமற்ற உள்ளத்தினர் இக்காலத்திலும் சிலர் உண்டு. அத்தகைய பேரன்புடையோர், இறைவனது திருவிளையாட்டின் பயனாகவும் விதியின் கொடுமையினாலும் தம்மைச் சூழ்ந்து வருத்தும் கொடிய துன்பங்களைக் கண்டு நெஞ்சு குமுறி நிற்க நேர்ந்துவிடும்போது-அத்துன்பங்களைத்தையும் விவரித்தெழுதிப் பிறரைச் சலிப்புறச்செய்ய விருப்பமின்றி ஒருமாத காலம் மௌனமாக இருந்துவிடுவாரானால்-அதை ஊகித்து உணராமல், பழைய அன்பு முழுவதையும் மறந்துவிட்டு காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காக கடிதமெழுதிக் கொஞ்சவரும் 'பணக்காட்டு நரி' என்று அத்தூய மனத்தினரை ஒருவர் தூற்றத் துணிந்துவிடுவாரானால், அத்தகைய நன்றியறிவற்ற வன்னெஞ்சரை நண்பராகக் கொண்டவர்களது மனம் எவ்வளவு குமுறக்கூடும்? எழுதிய கடிதத்திற்குப் பதில் கிடைக்காவிடில் ஒரு மாதத்திற்குள் நான்கைந்து கடிதங்கள் எழுதிவிடும் இயல்புடைய ஒருவனே, சில நாட்கள் ஒரு கடிதமும் எழுதாதிருந்து விடுவானானால், அதற்குத் தகுந்த காரணம் இல்லாமலிராது எனும் உண்மையை உத்தம நண்பர்கள் எளிதில் உணர்ந்துகொண்டு விடுவார்களன்றோ! பலமாத அனுபவத்தை ஒருமாத காலத்திற்குள் மறந்துவிடக்கூடியவராக ஒரு நண்பர் இருந்தாரானால், அத்தகைய நன்றியறிவற்ற நண்பரின் அறியாமையை எண்ணி உத்தம அன்பன் அழுவனோ? சிரிப்பனோ?

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசிரியராகிய துரோணர் பாண்டவர்களின் தலைவரான தருமபுத்திரர் இயல்பையும் கௌரவர்களின் தலைவனான துரியோதனன் இயல்பையும் பீஷ்மருக்கு விளக்கிக்காட்ட விரும்பினார். அவ்வாசிரியர் பெருமான், ஒருநாள் காலையில் தருமபுத்திரரை அழைத்து 'நகருக்குள் பொல்லாதவர்கள் எவ்வளவுபேர் இருக்கின்றனர்' என்பதைப் பார்த்துத் தெரிந்துகொண்டு வருமாறும்; துரியோதனனை அழைத்து 'நகருக்குள் நல்லவர்கள் எவ்வளவு பேர் உளர்' என்பதைக் கண்டு குறித்துக்கொண்டு வருமாறும் கட்டளையிட்டார். நகர் முழுதும் திரிந்து பார்த்த தருமர் மாலையில் தம் ஆசிரியரிடம் மீண்டுவந்து, "ஐயனே! இந் நகருக்குள் ஒரே ஒரு நன்மைகூட இல்லாத முழுதும் பொல்லாதவன் ஒருவனைக்கூட என்னால் காணமுடியவில்லை; ஒவ்வொருவனிடமும் ஒரு நன்மையேனும் இல்லாமலில்லை"—என்று விண்ணப்பித்து நின்றார். அதன் பின்பு வந்து சேர்ந்த துரியோதனன் தனது ஆசிரியரை நோக்கி, "ஐய! இப் பட்டினத்திற்குள் ஒரே ஒரு தீமைகூட இல்லாத முழுவதும் நல்லவனாக ஒருவனையேனும் என்னால் காணமுடியவில்லை; நல்லவனென்று புகழப்படும் ஒவ்வொருவனிடமும் ஒரு தீமையேனும் இல்லாமலில்லை"—என்று கூறி நின்றான். இக் கதையிலிருந்து நாம அறியத்தக்கதென்ன? 'ஒவ்வொரு மனிதனும் தன் மனப்போக்குக்கு ஏற்கவே மற்றவனை மதிக்கிறான்'—எனும் பேருண்மையை உணர்ந்துகொண்டு விடுகிறோமன்றோ?

எப்பொழுதும் சிற்றின்பப் பிரியனாகவே இருக்கும் ஒருவன்—சிற்றின்பப் பித்தர்களுடனேயே பெரிதும் நெருங்கிப் பழகிய ஒருவன்—இறைவன் ஒருவனையே தனது இன்னுயிர்த் தலைவனாகக் கொண்டு, ஆண்டவனது திருவருளைப் பெறுவதிலேயே ஒவ்வொரு நிமிஷமும் விருப்பம்கொண்டவனும்

மனமார்ந்த உண்மைப் பேரன்புடன் அம் முயற்சியில் ஈடுபட்டு, சுய நலத்தைக் கவனிப்பதையும் மனமாரத் தியாகம் செய்துவிட்டு உலக ஆசைகளில் உள்ளத்தைச் செலுத்தாமல் ஒதுங்கி நிற்கும் உண்மையன்பன் ஒருவனை, தன்னைப் போன்ற சிற்றின்பப் பித்தனாகவே நினைத்துக்கொண்டு கேவல முறையில் பழித்துரைக்கத் துணிந்துவிடுவதும் உலக இயல்பேயன்றோ! இருதயகமலத்தில் எழுந்தருளியிருந்து ஒவ்வொரு செயலையும் ஒவ்வொரு நினைவையும் கவனித்துக்கொண்டிருக்கும் கடவுளறிய தன் மனத்தை ஒருவன் தூய்மையாக வைத்துக்கொண்டு விடுவானானால், மற்றவர்கள் தன்னைப் புகழும்போது கர்வமும் இகழும்போது கோபமும் கொள்ளமாட்டான் என்பது உறுதி. 'இன்னருள் வடிவினனாகிய இறைவன் உறையும் இன்பக் கோயிலே இருதய கமலம்'—என்னும் உண்மையை ஒருவன் உணர்ந்துகொண்டுவிடுவானானால், அத்தகைய ஆலயத்தைக் கபட எண்ணங்களினாலும் கள்ள நினைவுகளினாலும் வஞ்சக தந்திர சூழ்ச்சிகளினாலும் களங்கப்படுத்திக்கொண்டுவிட துணிவுகொண்டு விடுவானா?

உலகமாகிய நாடக மேடையிலே-லீலாவினோதனாகிய ஆண்டவனால் ஆட்டிவைக்கப்படும் அன்பர்கள்-எவ்வளவோ எச்சரிக்கையுடன் நடந்துகொள்பவர்களாக இருந்துங்கூட, உண்மையன்பின் இயல்பை உணராத நன்றியறிவற்ற நண்பர்களாலும் குணங்கள் பலவற்றையும் தள்ளிவிட்டு சிறு தவறைப் பன்மடங்கு பெரிதாக்கி இழிந்தமுறையில் பழிக்கத் துணிந்துவிடும் 'மகானுபாவர்க'ளாலும் பெரிதும் நெஞ்சு குமுறி நிற்க நேர்ந்துவிடுவது இக்காலத் தமிழ்நாட்டில் சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது. ஆயினும், தமது இருதயத்தில் கோயில் கொண்டுள்ள இறைவன் அரிய வஞ்சக தந்திரங்களிலும் நன்றிமறந்துவிடும் இழிந்த தன்மையிலும் சிக்கிக்கொண்டு விடாதவாறு மிகுந்த கவனத்துடன் தமது மனத்தின் தூய்மையைக் காத்துக்கொண்டிருக்கும் வரையில், மற்றவர்கள் பழிப்பதைப்பற்றி உண்மையன்பர்கள் வருந்துவானேன்? கண்ணீர் சொரிந்து கலங்குவானேன்? ஆழ்ந்து கூர்ந்து ஆலோசித்துப் பாராமல் நெடுநாளைய பேரன்பைச் சிலநாட்களில் மறந்துவிடும் நன்றியறிவற்றவர்கள் இழிந்த முறையில் பழிப்பதைக் கண்டு உண்மையன்பர்கள் பதிலுக்குப் பதிலாகப் பழித்துரைக்கத் துணியார் என்பது உறுதி. அதற்குப் பதிலாக அவர்களது அறியாமைக்கும் அவசர புத்திக்கும் பெரிதும் இரங்கி, அவர்களது நன்றியறிவற்ற கொடிய பாவத்தை மன்னித்தருளுமாறு ஆண்டவனை வேண்டிநிற்பதே உண்மையன்பர்களது இலக்கணம். அத்தகைய மெய்யன்பர்களுக்குப் பெருமகிழ் ஊட்டக்கூடிய இரு பெரியோரின் மணி மொழிகளைக் குறிப்பிட்டு இக் கட்டுரையை முடித்துக்கொள்ளுவேன்.

“புல்லைவிடத் தாழ்ந்தவனாயும், மரத்தை ஒத்த சகிப்புத்தன்மை கொண்டவனாயும், தனக்குக் கீர்த்தியைத் தேடாமல் யாவருக்கும் நன்மையைச்

செய்பவனே பகவானுடைய நாமத்தைப் பஜிக்க யோக்கியதை யுடையவன். தன்னலம் கருதாதவன் ஏன் அஞ்சவேண்டும்? உனக்கு உதவிபுரிய எவரையும் லட்சியம் செய்யாதே! மனிதரின் உதவியைக் காட்டிலும் பகவானது அருள் எவ்வளவோ மடங்கு மேன்மையானதல்லவா? புனிதமாக இரு; பகவானை நம்பியிரு. புகழ்ச்சி-இகழ்ச்சிகளையும், மற்றவர் என்ன சொல்கின்றனர்-என்ன செய்கின்றனர் என்பதையும் கவனியாதே! முன்னோக்கிச் செல்; திடமாக நட; புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் நீ கலங்காமல் இரு. உனது இஷ்ட தெய்வத்தின் பொருட்டு, சந்தோஷமாகவும் உறுதியாயும் கவலையற்றும் இருப்பதே ஒரு மஹத்தான-தன்னலமற்ற செய்கையாகும். அவ்வளவு தன்னலமற்றவனாக உழைப்பதால், ஒவ்வொரு தினமும் அதிகமான தூய்மையையும் பலத்தையுமே பெறுவாய். சுயநலப் பற்றின்றி, ஹிருதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் பிரார்த்தனைக்குச் செவி கொடுக்க இறைவன் தவறமாட்டான்."

(ஸ்ரீமத் ஸ்வாமி பரமானந்தர்)

"ஒருவர்மேலும் குறைகூருதே! திரு
உளச் செயற்காப் பிறரைச் சீருதே!
பொறுமை எக்காரியமும் சாதிக்குமே—அதைப்
பூண்டவர்க்கே சுகம் ஆதிக்கமே;
மறுமையின் துயரத்தைப் பேதிக்குமே—மிக
மகிழ்ந்தபோதிலும் துயர் நிகழ்ந்த போதிலும் பிறர்
புகழ்ந்தபோதிலும் உனை இகழ்ந்தபோதிலும் நீ
ஒருவர் மேலும் குறைகூருதே!—திரு
உளச் செயற்காப் பிறரைச் சீருதே!"

(திரு. வேதநாயகம் பிள்ளை.)

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

ஜனநாயக அரசியல் முறை

(கோ. ஸ்ரீ. இராமன்., எம். ஏ.)

[மார்க்விஸ் ஆவ் லோதியன் அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில வியாசத்தைத் தழுவி வரையப்பட்டது.]

ஜனநாயக அரசியல் முறை (Democracy) தற்காலத்தில் திருப்திகரமாக வேலை செய்ய முடியாமற் போவதால், அந்த அரசியல் முறையைச் சிலர் குற்றங் குறைகள் கூறி வேறு அரசியல் முறையை வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அத்தகைய பழி கூறுபவர்களுடன் நாம் சேருமுன்னர் ஜனநாயக அரசியல் எத்தகைய கஷ்டங்கட்கு ஆளாயிருக்கிறதென்பதை ஆராய்வோம். ஜனப் பிரதிநிதிகள் பார்லிமெண்டு சபையில் கூடி நடத்தும் அரசாட்சி (Representative Government) தற்காலத்தில் சரிவர நடவாது முறிந்து போய்விட்டதா? அல்லது வேறு ஏதாவது புதிய—நூதனமான—கொள்கைகளும் விஷயங்களும் எல்லா வகைப்பட்ட அரசியல் முறைகட்கும் முட்டுக்கட்டைகள் போட்டிருக்கின்றனவா?

இரண்டாவதாகச் சொல்லிய கேள்வி உண்மையை உரைக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். தற்காலத்தில் புதிதாகத் தோன்றியிருக்கும் சர்வாதிகார அரசியல் முறை (Government by dictatorship) ஏதாவது சமூக விஷயங்களை ஜனநாயக அரசியல் முறையைக் காட்டிலும் திருப்திகரமாகச் சாதித்துவிட்டதா? தரித்திரம், வேலையின்மை, (Unemployment) ஜனசமூக அதிருப்திகள் (Social Discontents) முதலான விஷயங்களில் சர்வாதிகார அரசியல் என்ன மாறுதல்களை ஜன சமூக முன்னேற்றத்தைக் கருதி செய்துவிட்டது? இதாலி தேசத்தில் மட்டும் சர்வாதிகார அரசாட்சி முஸோலினியின் வன்மையினாலும் புத்தி சாதுரியத்தினாலும் மிகவும் திருப்திகரமாக நடந்து வருகிறது. ஏனைய சர்வாதிகார அரசாட்சிகள் யாவும் ஜனநாயக அரசாட்சி முறைக்குக் கீழ்ப்பட்டதாகவே தோன்றுகின்றன. அப்படியானால் சில நாடுகளில் மட்டும் சர்வாதிகார அரசாங்கம் ஏன் உண்டாக வேண்டும் என்று நீங்கள் யோசனை செய்யலாகும். அத்தகைய நாடுகளில் ஜனநாயக அரசியல் முறை சரிவர ஏற்படாமல் இருக்கவேண்டும்: இரண்டாவதாக அந்த நாடுகளில் ஜனநாயக அரசியல் கொள்கைகளை அநுசரணை செய்யாமல் ஆங்காங்குள்ள மன்பதைகள் யோசனையற்று சர்வாதிகார அரசியலில் சமூகக் குறைகள் தீர்ந்துவிடும் எனும் மூட நம்பிக்கை கொண்டு சர்வாதிகாரத்தையும்

தனிப்பட்ட ஒரு மனிதரிடம் கொடுத்து சர்வாதிகார அரசாங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மற்றும் அத்தகைய அரசாட்சி நிரந்தரமாக நிலைக்குமெனும் கருத்து அவர்களிடம் சிறிதும் இல்லை. நாட்டின் முன்னேற்றத்திற்கு சர்வாதிகார அரசியல் முறை சில வருஷங்கள்வரை இருந்தால் அது நன்மைகளைக் கொடுக்கும் என்பது சில ஜனங்களுடைய கருத்தாகும்.

ஆனால் ஜன நாயக அரசாட்சிக்கு இடையூறு செய்வது பல ராஜ்யங்களுடைய அராஜரீகம் (International Anarchy) என்று மார்க்விஸ் லோதியன் அவர்கள் சொல்லுகின்றார்கள். அதாவது யுத்தக் கடன்கள், ஒவ்வொரு தேசமும் பிற நாட்டுச் சாமான்கள்மீது விதிக்கும் தீர்வைகள், (Tariffs) யுத்தக் கடன் ஈடுகள், (Reparations) பண நிர்வாக காரியத்தில் செய்யும் அசட்டுத்தனம், (Monetary mismanagement) முதலானவைகள் உலகத்தில் ஜன சமூக வாழ்க்கைக்கும் பொருளாதார க்ஷேமத்திற்கும் (Economic Welfare) இடையூறுகளாக நின்றுவிட்டிருப்பதால் திருப்திகரமாக ஜன நாயக அரசியல் முறையை நடத்துவது எப்படி சாத்தியமாகும்? நீங்களே சிறிது யோசனை செய்து பாருங்கள். மேற் கூறியனவே உலக சமாதானத்திற்கும் (World Peace) வேலையின்மைக்கும் போர் ஆயுதம் அதிகரிப்பதற்கும் காரணமாகும். சர்வதேச சங்கம் பல திருப்திகரமான செய்கைகளை உலகப் பொருளாதார, சமூக சமாதான முன்னேற்றங்களுக்குச் செய்திருந்தும், மேற்சொன்ன "இன்டர் நேஷனல்' கஷ்டங்கள் அல்லது கொடுஞ்செய்கைகள் அவைகளைக் கெடுத்துக்கொண்டிருக்கின்றன. பொருளாதாரச் சுயநல தேசாபிமானம் (Economic Nationalism) தேசங்களுள் இருக்கும் வரையில் உலகில் சமாதானம் ஏற்படாது: போர் எனும் வார்த்தை எங்கணும் முழங்கிக் கொண்டிருக்கும். அத்தகைய ஸ்திதியில் ஜனநாயக அரசியல் முறை எங்ஙனம் திருப்திகரமாக வேலை செய்யும்? சர்வாதிகார அரசாட்சி ஜனங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் அது குழப்பத்தையும் தேசங்கள் போருக்கு ஆயத்தம் செய்து கொள்ளும் மனப்பான்மையையும் கொடுக்கிறது. நமது தேசிய முன்னேற்றத்திற்கு இடையூறாக நிற்பது சர்வதேச அராஜரீகச் செய்கைகளே. அவைகளை விலக்கினால் ஜனநாயக அரசியல் முறை ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்பு எவ்வளவு உன்னதமாக இருந்ததோ அவ்வளவு உன்னதமாக இப்பொழுதும் ஆகிவிடும்.

எந்த வழி வகைகளைக் கையாடவேண்டும்? சர்வதேச சங்கம் மட்டும் தனது செய்கைகளைச் செய்தால் போதுமா? சர்வதேச அராஜரீகத்தை ஒழிக்க ஒரு புதிய வழி வேண்டும். அரசாதிகாரம் (Sovereignty) சரிவர நிலைநிறுத்த ஒரு புதிய வழி ஏற்படவேண்டும். சர்வதேச சங்கம் பொருளாதாரம், சமூக முன்னேற்றம், சமாதானம் முதலான விஷயங்களில் தலைசிறந்து இலங்க சர்வ தேசங்களும் தமது அரசாதிகாரத்தை அச்சங்கத்திற்கு உதவவேண்டும். அப்பொழுது தேசங்களுடைய சுயநலக் கொள்கைகள், வேலையின்மை, போர்மனப்

பான்மை முதலாயின தொலைந்து உலகத்தில் ஜன நாயக உணர்ச்சியும் அதற்கு அநுசரணையான அரசியலும் செழித்தோங்கி வளர முடியும். ஆனால் சிலர் மேற்கூறிய நன்மைகள் சர்வாதிகார அரசியலில் கிடைத்துவிடும் என்று சொல்கின்றார்கள். அது மிகவும் தவறான எண்ணம்.

ஜனநாயக அரசியல் முறை நன்றாக என்றும் நிரந்தரமாக வேலை செய்வதற்குச் சில முக்கிய அம்சங்கள் கவனிக்கப் படவேண்டும். ஒன்று பேசும் சுயாதீனம், (Freedom of speech) மற்றொன்று ஆட்சேபித்துக் குற்றங் குறைகளை வெளியிடுதல் அல்லது சொல்லுதல்: மூன்றாவது அரசியல் பொருளாதாரத் துறைகளில பிரஜைகள் தமக்குத் தோன்றியவாறு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்ய அநுமதிக்கப் படவேண்டும். நான்காவது அவ்வப்போது ஹிம்சை இல்லாமல் துரைத்தனம் எல்லா மனிதர்களுடைய விருப்பத்தின்படி மாற்றப்படுவதற்கு வசதி தரவேண்டும். ஜனநாயக அரசியல் முறை நல்ல துரைத்தனத்தைக் கொடுக்கிறது. அதற்கு ஜனங்கள் கல்வி அறிவு பெற்றிருத்தல் வேண்டும. ஜனநாயக அரசியலில் ஆணும் பெண்ணும் நல்ல பிரஜைகளாகி, சர்க்கார் விஷயங்களில் சிரத்தை யெடுத்துக்கொள்ளும் அற்புத சக்தியைப் பெறுகின்றார்கள். அதனால் அவர்கள் பிறருடைய கட்டளைகளைச் சரியென்று கொள்ளாமல் சிந்தனை புரியும் அபூர்வ சக்தியை அடைகின்றார்கள்.

ஜனநாயக அரசியல் முறையைப் பெடரல் அரசியல்முறை வாயிலாக தேசங்கள் காப்பாற்றலாகும். மிஸ்டர். H. C. வெல்ஸ் அவர்கள் எழுதியிருக்கும் "வருங்கால வஸ்துக்களின் உருவம்" (The Shape of Things To Come) எனும் நூலில் தேசியப்பற்றும் அரை குறைவான முதலாளித்துவமும் ஒன்று சேர்ந்து நாகரீகத்தையே நாசம் செய்து விடுமென்றும் அதனால் உலகில் ஜனத்தொகை பாதியாகி விடுமென்றும் கூறி ஒரு விசனகரமான கொள்கையை எடுத்துக் காண்பிக்கிறார்கள். அது நேராமல் இருக்க ஜனநாயக உணர்ச்சியில் பற்றுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ஜனநாயக அரசியலை நடத்த வேண்டும். சரித்திரங்களை ஆராய்ந்து பார்த்தால், ஜனநாயக அரசியல் அவ்வப்போது தோன்றித் தோன்றி மறைந்துவிட்டது தெரியவருகிறது. கிரேக்கர்களுடைய நகர ராஜ்யங்கள் எதிரிகளுக்கு ஒரு ராஜ்யமாக நின்று சமர் செய்ய மறுத்தமையினால் மேஸிடான் ஆட்சிக்கு வரவேண்டியதாயிற்று. ரோமர்களுடைய குடியரசு (The Roman Republic) பிரதிநிதிகள் சபையை ஏற்பாடு செய்யத் தவறியதால், அது ரோமர்களுடைய சாம்ராஜ்ஜியம் உண்டாவதற்குக் காரணமாகிவிட்டது. ஆதலால் நாம சரிவர ஜனநாயக அரசாட்சியை நடத்துவோமானால் அது தழைத்து வளரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஐரோப்பிய மதச் சீர்திருத்தம்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

இங்கிலாந்து ஐரோப்பிய இயக்கங்களில் பலவற்றிலும் சம்பந்தப்பட்டும் முக்கிய சில அம்சங்களில் தனியே பிரிந்தும் இருக்க இயற்கையமைப்பின்படி சில சாதனங்கள் அதற்குண்டு. அதை ஒட்டி முந்தின வியாஸத்தில் சொல்லப்பட்ட நவீன, மத்திய கால லக்ஷணங்கள் இங்கிலாந்திலும் உண்டு. கல்வியின் மறு பிறப்பின் சௌகரியம் இங்கிலாந்துக்கும் உண்டு. இந்த வியாஸத்தில் எழுதப்படும் மதச் சீர்திருத்தத்திலும் இங்கிலாந்து பங்கு பெற்றதாக விருந்தும், அதனுடைய போக்கே தனியாக உள்ளதென்பது தெரியவரலாம்.

ஆதியில் இயேசு கிருஸ்துநாதர் தன்னுடைய சொந்த கஷ்டங்களின் மூலம், தன் எண்ணங்களையும், கொள்கைகளையும், உபதேசங்களையும் தன்னைச் சுற்றியுள்ளவர்களின் மனதில் படச் செய்து, பிறகு தன்னை ஹிம்சித்தவர்களும் தன் வழியில் வரச்செய்து, ஆரம்பித்த கிருஸ்துவமதம், அக்காலத்தில் செல்வாக்குள்ளவர்களும், சாம்ராஜ்யாதிபதிகளுமான ரோமானியரிடமும் பரவியது. அந்த ரோமானியர் மூலம் அவர்களுடைய ஆக்ஷிக்கடங்கியவர்களிடையிலும், கிருஸ்துவ மதம் அபிவிருத்தியடைந்து இங்கிலாந்து, ஸ்காட்லந்து, ஐர்லந்து முதலிய பாகங்களிலும் பரவியதென்பது முன் ஒரு தொடர்ச்சியில் சொல்லப்பட்டது. ரோமானிய சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்த அநாகரீகர்களுங்கூட சீக்கிரத்தில் கிருஸ்துவர்களானார்கள். ஏனெனில் அப்பொழுது இருந்த மதத் தலைவர்களும் அவர்களைச் சேர்ந்த இதரர்களும் "சொல்லொன்று செய்வதொன்றாக" இல்லாமல் மகாப்பரிசுத்தமான வாழ்க்கையை நடத்துபவர்களாகவும், பாரமார்த்திக புத்தியுள்ளவர்களாகவும், அன்பே உருவானவர்களாகவும், பிரிய வசனமே பேசுபவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், தீங்கே செய்தவர்களுக்கும் நன்மையையே செய்பவர்களாகவும், இயேசு நாதரின் உபதேசங்களில் ஒன்றெனச் சொல்லப்பட்டபடி "உன் வலது கன்னத்தில் அறைபவருக்கு இடது கன்னத்தையும் காட்டு" என்றதை அனுஷ்டானத்தில் கொண்டவர்களாகவும், சமயம் வாய்த்த காலத்தில் உயிரையும் இழக்கத் தயாரானவர்களாகவும் இருந்து வந்தனர் என்பது சரித்திர வாயிலாகத் தெரிந்த ஓர் உண்மை. ஆகவே ஐரோப்பா பூராவிலும் கிறிஸ்துவ மதம் வெகு சீக்கிரத்தில் பரவியது.

மேலே சொல்லப்பட்டபடி கிறிஸ்து மதம் பரவியதன் பயனாக அநேக ஜனங்கள் சாந்தசுவபாவமுள்ளவர்களாக மாறியதுடன், கடவுள் பக்தியுமுள்ளவர்களாகி, அருட்பணி செய்யவும் ஆனார்கள். பலர் உலக வாழ்க்கையை நீத்து துறவிகளும் ஆனார்கள். அத்திறத்தவர் ஆண்பாலாரிலும் பெண்பாலாரிலும் பலர் ஏற்பட்டனர். அவர்களுக்கு முறையே (சந்நியாசி) Monks என்றும்

(சந்நியாசினி) Nuns என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இத்தகையவர்கள் மதகுருமார்களுக்கு அனுசரணையாகவிருந்து, பாமரர்களிடம் மத உபதேசம் செய்தல் கல்வி கற்பித்தல், ஏழைகளின் பசிப்பிணியை ஆற்றுதல், வைத்தியம் செய்தல் ஹிதோபதேசம் செய்தல் முதலிய சாத்வீக காரியங்களில் ஈடுபட்டு ஊரூராய்ச் சென்று கிராமவாசிகள் கொடுத்ததையுண்டு உண்மைத் துறவிகளாயிருந்தனர். இம்மாதிரியான அருட் பணிகளை ஆற்றியவர்களின் தன்மையைக் கண்ட பல தர்மசிந்தனையுள்ள அரசர்களும், பிரபுக்களும் இதரர்களும் அவர்களுக்குத் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவிகளைச் செய்யலானார்கள். ஏனெனில் இம்மாதிரியான தேச நன்மைக்குரிய பொதுஜன சேவைகளுக்கு அத்தியாவசியமானது பொருள் என்பது யாவரும் அறிந்த விஷயம். மேலும் துறவிகளில் பலர் தங்கள் தங்கள் வசமிருந்த உடைமைகளையும் அர்ப்பணித்து அருட் பணிகளில் இறங்கியதைக்கண்ட பலருக்கும் அவர்களிடம் மதிப்பேற்படுவது சகஜமேயன்றோ? நாளடைவில் இத்துறவிகள் தங்குவதற்கு மடாலயங்கள் தேசத்தின் பலபாகங்களில் ஏற்பட்டன. அதனால் ஆங்காங்கு ஏற்பட்ட மாதாக்கோயில்களுக்கும் மடாலயங்களுக்கும் சொத்துக்கள், பொருள்கள், திரவியங்கள் போன்ற பல அம்சங்கள் மான்யங்கள் விடப்பட்டன. மானிய சொத்துக்களும், உடைமைகளும் அதிகமாக, மதத்தலைவர்களுக்கும் மடாதிபதிகளுக்கும் செல்வாக்கும் நிர்வாகத்திறமையும் அதிகமாயின. ஆடம்பரங்கள், மதத்தலைவர்கள் மடாதிபதிகள் முதலிய ஸ்தானங்களுக்குப் போட்டிகள் அதிகமாயின. ஆக ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்த ஆஸ்திக புத்தி அருட்பணிக்குள்ள மனப்போக்கு ஆகியவைகள் எல்லாம் "ஆற்றிலே விடப்பட்டன." வெறும் உலகாயதர்களாகி, உத்தியோகவேட்டை உலக சௌகரியங்களில் இச்சை, உற்றார் உறவினர் பற்று முதலியவைகளில் உழலலாயினர். துவண்டு கிடக்கும் நூலிழையில் கொஞ்சம் கஞ்சிப்பசை ஏற்படும்போது அது விரைப்பாவது சகஜம்போல், ஆகாராதி விஷயங்களில் ஈடுபட்ட மானுட ஜன்மங்களும் விரைக்க ஆரம்பித்து, தங்கள் நிலைமைகளையும் செய்யவேண்டிய காரியங்களையும் மறப்பதுடன் அஹம்பாவமும் ஏற்பட்டது சகஜமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

மதகுருமார்களுக்குச் சொத்துக்களும் செல்வாக்கும் ஆடம்பரங்களும் வளர்வதற்கு புண்ணிய க்ஷேத்திரங்களில் நடந்த சிலுவையுத்தங்கள் உதவிசெய்தன. கிருஸ்துவமதம் பரவி கொஞ்சகாலமே ஆயினமையால், மதப்பற்றும் அதிகமுள்ளவர்களான பாமரர்களும் இதரர்களும் தங்கள் தங்களாலியன்ற உதவி செய்தே தீரவேண்டும் என்று நினைத்தார்கள் "தொண்டமான் முதல் தோட்டி வரையில்" என்றபடி பெரிய பெரிய சக்ரவர்த்திகள் முதல் வெகு சாதாரண ஜனங்களும், நேரில் சண்டை செய்யத் தயாராகவோ, சண்டைக்கு ஆட்களை தயாரித்தனுப்பவோ, சண்டையில் சேர்ந்தவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுப்பதோ, அப்படியல்லாத முறையில் அச் சௌகரியங்களைச் செய்துகொள்ள ஹேதுவான பொருள்களைக் கொடுத்துவிடுவதோ போன்றநிலை ஏற்பட்டது. அதையொட்டி நிலங்களை மாதாக்கோவில்களுக்கும் மடாலயங்களுக்கும் மத குருமார்களுக்கும், துறவிகளுக்கும் மானியங்களாக விடுவதும், ஆயுதங்களைச் செய்து கொடுப்பதும், உடைகளைச் சேகரித்துக் கொடுப்பதும், ஒன்றும் முடியாதவர்கள் பொருள்களைத் திரவிய ரூபமாக கொடுப்பதும், அல்லது சரீர உதவியாக தாங்களே போய் சண்டை செய்தோ அல்லது இதர விஷயங்களில் உதவி செய்வதுமாக ஆனார்கள். பாவம் செய்த

தாகக் கருதியவர்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளவும், வருங்காலத்திற்குப் புண்ணியத்தைச் சேர்த்துக் கொள்ளவும் மேற்கண்ட முறைகளைக் கையாடினார்கள். ஏனெனில் புண்ணிய யுத்தத்தில் கலந்துகொள்ள முடியாத பாவம் என நினைத்தார்கள்! ஆக அப்பாவத்தைத் துலைத்துக்கொள்ளவென மதசம்பந்தப்பட்டவர்களிடம் பணத்தைக் கொடுத்து "பாவநிவாரணப்பத்திரிகை"களைப் பெற்றுக் கொண்டார்கள். இன்னும் சிலர் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொண்டதாக எண்ணிப் பணத்தைக் கொடுத்துப் "புண்ணியப் பத்திரிகை"களைப் பெற்றுக் கொண்டார்கள். முன் சொல்லப்பட்டபடி மத குருமார்கள் பணம் சேர்த்த வழிக்கு, "The Sale of Dispensations" என்றும், பின் சொன்னதற்கு "The Sale of Indulgences" என்றும் சரித்திரங்களில் பெயர்கள் வழங்கப்படும்.

இந்த விவரத்தைத் தவிர, "இயேசு கிறிஸ்துவின் இரத்தம்" என்றபடியாக, சிறு சிறு அளவுகள் பாமர ஜனங்களிடம் விற்கப்பட்டு, அந்த திரவம் 'பஞ்ச கவ்யம்' போன்று, சகல பாவ நிவாரணியாகவும், சகலரோக நிவாரணியாகவும், சிறந்த மாந்த்ரீக சக்தி அல்லது ரக்ஷாமிருதமாகவும், பாமர ஜனங்களால் கருதப்பட்ட ஏராளமான பணங்கள் மத சம்மந்தப்பட்டவர்களின் ஆதரவில் வசூலிக்கப்பட்டனவாம். நாளடைவில் பணத்தாசை அதிகமாகி, மத சம்பந்தங்களிலும், ஆலய வழிபாட்டு முறையிலும், சடங்குகளிலும், காணிக்கைகளிலும் எண்ணிக்கைகள் அதிகமாகி ஏழை ஜனங்கள் அதிகத் தொந்தரவுகளுக் குள்ளாயினர். ஆக செல்வம் வளர, வளர புதிய முறைகளும், புதிய சடங்குகளும், புதிய காணிக்கைகளும் அதிகமானதுடன், மாதாக் கோவில்கள் மடாலயங்கள் முதலிய தர்ம ஸ்தாபனங்களுக்கு விடப்பட்ட மானிய நிலங்களின் வரும்படிகளும் கூடின அளவு மீதப்படுத்தப்பட்டு ரோமில் உள்ள பிரதம மதகுரு போப்புக்கு அனுப்பப்பட்டனவாம்! ஆங்காங்கு என்னென்ன கஷ்ட நிவாரண வேலைகளுக்காக நிலங்களும் சொத்துகளும் மானியங்கள் ஏற்பட்டனவோ அக்காரியங்கள் நடைபெறாது போயினதுடன் ஜனங்களுக்கும் வறுமை யதிகரித்தது! இம்மாதிரி சொத்துகளின் வரும்படிகளைச் சுருட்டி யனுப்பும் மதகுருமாரகளே பெரும்பாலும் நியமித்தனுப்பப் பட்டனர்! அவர்களும் அந்நியர்களாக இருந்ததால் அத்தேச ஜனங்களின் கஷ்டங்களைப் பொருள் படுத்துபவர்களாக இல்லை. "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கும்" நிலைமாறியது. தவிரவும் காணிக்கைகளில் "First fruits" முதல்பலன், என்றும், "Tithes" பத்தில் ஒருபாகம் என்றும், "Annates" வருஷாந்திரக் காணிக்கை என்றும் எண்ணற்றவை ஏற்படலாயின! ஆகவே பெரிய போப்புகள் சாம்ராஜ்யாதிபதிகளாகி. விண்ணரசர் நிலைமாறி, கேவலம் மண்ணரசர்களாகி, அவர்களைப் போலவே, யுத்தம் நடத்துதல், சமாதானங்கள் செய்து கொள்ளுதல் ராஜ்யங்களைப் பிடித்துக் கொள்ளுதல் போன்றவைகளில் சிறந்த ராஜதந்திர நிபுணர்கள் ஆனார்கள் என்பது சரித்திர வாயிலாக விளங்கும் மறுக்கமுடியாத உண்மை!! இவ்வாறு இருந்த நிலையைச் சீர்திருத்தவென பல பல இயக்கங்கள் அப்போது அப்போது ஏற்பட்டும் அவைகள் ஆதியில் சொல்ப பலனளிப்பதும், நாளடைவில் தேய்ந்து, மதகுருமார்களின் செல்வாக்கே தாரகிருதமானதும், கொடுமையானதுமான பல முறைகளைக் கொண்டு ஸ்திரப்படவும் ஆயிற்று. இந்த நிலையைச் சீர்திருத்த முயன்ற பலரைக் குறிப்பிட்டு அவர்களில் முக்கியமான இருவரையும் இங்கிலந்தில் சீர்திருத்தம் நுழைந்த விபரமும் அடுத்து எழுதப்படும்.

மேட்டூர் அணைக்கட்டு

(M. S. பால்.)

இந்தியா தேசம் நீர்வளம் நிலவளம் பொருந்திய பூமியாகும். இந்நாட்டு நதிகள் விவசாயத்திற்கு அதிக உபயோகமாயிருக்கவேண்டிய. ஆனால் 100-க்கு 15 பாகந்தான் சாதாரணமாய் உபயோகப்பட்டு வருகிறது. மீதியுள்ளவை வீணில் சமுத்திரத்திற் சேருகின்றது. இந்திய நதிகளில் காவேரியானது தென்னிந்தியாவுக்கோர் கண்போன்றது. பல பண்டைக்கால அரசர்களின் முயற்சியாலும், தற்கால இயந்திரச் சகாயங்களினாலும் பற்பல ஏற்பாடுகள் செய்து இந்நதியின் நீரில் 100-க்கு 60 பாகம் உபயோகிக்கக் கூடியதாயிருக்கிறது. மைசூரில் உள்ள கண்ணம்பாடி அணை 1926-ல் முடிவுபெற்றது. 1933ல் மேட்டூர் என்ற ஓர் பெரிய அணைக்கட்டு இதே நதியின் நீரை 100-க்கு 80 பாகம் உபயோகமாகும்படி நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

காவேரி மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டிலுள்ள மர்காராவில் உற்பத்தியாகிறது. இங்கு தென்மேற்குப் பருவக்காற்று அபரிமிதமான மழையைக் கொடுக்கிறது. காவேரியின் உற்பத்தி முதல் அதன் டெல்டா வரை 26,000 சதுரமைலுக்குமேல் இதன் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இதன் டெல்டா திருச்சிக்கு மேற்கே 10 மைலில் ஆரம்பமாகிறது. இங்கு இது இரண்டு கிளைகளாகப் பிரிகின்றது. வடக்குக் கிளைக்குக் கொள்ளிடமென்றும் தெற்குக் கிளைக்குக் காவேரி என்றபெயரும் வழங்கி வருகிறது. காவேரியின் டெல்டாவைச் செழிப்பிக்கக்கூடிய பல கிளை நதிகள் இதிலிருந்து பிரிந்து நாலாபக்கங்களிலும் ஓடுகின்றன.

ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாதம் ஆரம்பத்தில் தென்மேற்குப் பருவக் காற்று வீசி நதிகளில் பிரவாஹம் ஏற்படும். ஆற்றில் தண்ணீரைக் கண்டவுடன் விவசாயிகள் வேளாண்மைத் தொழிலை ஆரம்பித்து விடுவதில்லை. தண்ணீர் வரத்து ஒழுங்குபடும் வரை காத்திருந்து நெற்பயிருக்கு நாற்று விடுவார்கள். இவர்கள் தண்ணீர் வரத்து ஒரே மாதிரியாய் வரும் வரை காத்திருக்கும்பொழுது ஏராளமான தண்ணீர் சமுத்திரத்திற்கு வீணில் போய்ச் சேர்ந்துவிடுகிறது. காற்றுப் பிடுங்கி நடுதல் ஜூலை முடிவிலிருந்து செப்டம்பர் வரை நடைபெறும். ஆனால் செப்டம்பரில் தென்மேற்குப் பருவக் காற்றும் நின்றுவிடுகிறது. ஆகையால் பயிர்களுக்குத் தண்ணீர் அத்யாவசியமாயிருக்கும் காலத்தில்தான் ஆற்றில் நீர் வற்றிப் போகிறது. ஆகவே புரட்டாசி மாதம் பயிர்களும் வயல்களும் காய ஆரம்பிக்கின்றன. கடவுள் அருளால் அக்டோபர் 15உக்குப் பிறகு வடகிழக்குப் பருவக் காற்று வீச ஆரம்பித்துப் பயிர்களுக்குச் சற்றுப் புத்துயிர் அளிக்கின்றது. இப்பருவக் காற்றும் டிசம்பரில் நின்றுவிடும். அப்பொழுதும் தண்ணீர்க் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் முதல் முதலில் வீணாகப் போக்கிய ஜூலை மாதத்துத் தண்ணீரை ஓர் இடத்தில் சேகரித்து வைத்துத் தண்ணீரின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்திப் பத்திரிகைகள் மூலமாய்த் தண்ணீர் விடும் தேதியை விளம்பரம் செய்து ஏழை விவசாயிகள் 'இலவு காத்த கிளிபோல்' ஏமாறாது செய்வது தங்கள் தொழிலைக் காலக்கிரமத்தில் நடத்த ஏதுவாயிருக்கும். இவ்வித ஏற்பாட்டைச் செய்யவே கவர்ன்மெண்டார் முன்வந்திருக்கின்றனர். ஜூலை மாதத் தண்ணீரைச் சேகரித்து வைக்க ஏற்ற இடம் மேட்டூர் தான் என்று கண்டனர். ஏனெனில், மேட்டில் சேகரித்த தண்ணீர்

தான் சற்று மேடாயிருக்கும் இதர விடங்களுக்குப் பாயும். இவ்விதம் கட்ட வேண்டிய அணை பிரமாண்டமானதா யிருக்கவேண்டும். மேட்டூர் சேலத்திற் கருகிலிருக்கிறது. இவ்வணை மேட்டூரிலிருந்து ஒரு மைல் தூரம் இருக்கும். இங்கு மேட்டூர் கிராமத்தைச் சுற்றிலும் பல குன்றுகள் இருக்கின்றன. இவைகளுள் இரண்டு குன்றுகளுக்கிடையில் காவேரி தெற்கு வடக்காய் ஓடுகிறது. ஆதலால் இந்த அணை அவ்விரண்டு குன்றுகளுக்கிடையில் கிழக்கு மேற்காய் 1-மைல் நீளமும் 160-அடி அகலமும் 180 அடி உயரமும் உள்ள ஒரு பெரிய சுவர். இதில் தாழ்ந்த பூமிகளுக்குத் தண்ணீர் விடும் வழியொன்று இருக்கிறது; இதில் 5 கண்கள் உண்டு. உயர்ந்த பூமிக்குத் தண்ணீர் விடும் வழியில் 8 கண்கள் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அதிகப்படியான தண்ணீரை வெளிப் போக்குவதற்கு ஓர் பெரிய கடைப் (வடிகால்) போக்கும் கட்டப்பட்டிருக்கிறது. இங்கே தேக்கப்பட்டிருக்கும் தண்ணீர் 59¼ சதுர மைல் விஸ்தீரண முள்ளது. இவ்வணையைக் கட்டுவதற்குக் கரடுமுரடான பாறாங்கற்களும், சிமண்ட் மணல் முதலியவைகளே முக்கியமாய் உபயோகமாகின்றன. இதுவரை சுமார் 1,70,000 டன் சிமெண்ட் செலவாயிருக்கிறது. சிமெண்டின் விலை மட்டும் 90-லக்ஷம் ரூபா யாகும். இதற்கு வண்டிச் சத்தம் மட்டும் 36 லக்ஷம் ரூபாயாகிறது. இவ்வணையைக்கட்ட மிகப் பெரியதும் இதுவரை இந்தியாவுக்குக் கொண்டுவரப் படாததுமான இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஒரு நாளில் 1000 ஆட்கள் செய்யும் வேலையை ஒரே இயந்திரம் செய்கின்றது. கருங்கற்களை மிகச் சிறிய பொடியாக அரைப்பதற்கு ஓர் இயந்திரமுண்டு அது ஒரு நிமிஷத்திற்கு 2 டன் நிறையுள்ள கருங்கற்பொடி அரைக்கின்றது. சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தி இங்கு கொண்டுவரப்பட்டு இந்த இயந்திரங்கள் யாவும் அச்சக்தியினாலேயே வேலை செய்கின்றன. கடந்த 6-வருஷ காலங்களாக ஒவ்வொரு நாளும் 10,000 ஜனங்கள் இதில் வேலை செய்து வருகின்றனர். இது 1924-ல் ஆரம்பமாயிற்று; 1927-ல் அஸ்திவாரம் போடப்பட்டது. இப்பெரிய அணைபோல் இந்தியாவில் வேறெங்கு மில்லை எனலாம். இது மைசூரிலுள்ள இதே நதியின் அணையைவிட இரண்டு மடங்கு பெரிதாயும், ஆப்ரிக்காவிலுள்ள நைல் நதியின் அஸ்வான் என்ற விடத்து அணையை விட 2½-மடங்கு பெரிதாயு மிருக்கிறது.

இவ்வணையிலிருந்து பல கால்வாய்கள் மேட்டுப் பிரதேசங்களுக்கும் இதுவரைப் பாஸன வசதிகளில்லாத விடங்களுக்கும் செல்லுவதால் பல புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாறிவிடும். சுமார் 3,00,000 ஏகரா நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சலாம். அணைக்குத் தெற்கில் உள்ள நாடுகளுக்கு 1924-ம் வருஷம் ஏற்பட்டதுபோல் வெள்ளத்தினால் சேதம் ஏற்படாமல் காக்கிறது. இப்பொழுது சேகரித்திருக்கும் தண்ணீர் விழும் வேகத்தினால் மின்சாரமும் கிடைக்கலாம்.

அணையைக் கட்டி முடிக்கச் செலவு மொத்தம் 737 லக்ஷம் ரூபாயாகிறது. இதில் அணைக்கு மட்டும் 509 லக்ஷம் ரூபாயும் கால்வாய்களுக்கு 228 லக்ஷமும் ஆகிறது. இது இப்பொழுது ஏறக்குறைய பூர்த்தியாகிவிட்டதெனலாம். தஞ்சாவூர் ஜில்லாவும், திருச்சியின் சிலபாகமும் முன்னிருந்த நிலைமையைவிட இனிமேல் சற்று அதிகமான செழிப்புள்ளதாக விளங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடமாடும் கோவில்

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

(462-ம் பக்கத் தொடர்ச்சி.)

"கடவுள் கொள்கை யுடையோரனைவர்க்கும் அக் கடவுளை வழிபடுதற்குரிய இடம் தேவை. அதுவே கோவிலெனப்படும். இந்துக்கள் கோவில்களில் படமோ விக்கிரமோ பிரதிஷ்டை செய்து வழிபடுவர். இக் கோவில்கள் படமாடும் கோவில்களெனப்படும். நடமாடும் கோவில் என மற்றோர் வகை கோவிலுண்டு. அது மனிதனே. எல்லாவிடத்தும் எள்ளினுள் எண்ணெய்போல அந்தர்யாமியாயிருக்கும் ஈசுவர சாந்நித்யம், மற்றெல்லாவிடங்களினும் ஆறறிவுடைய மனிதனிடத்திலே மிகுதியாய் விளங்கும்; அறிவு சொரூபமாய் கடவுள் விளங்குவார். ஆகவே, படமாடுங் கோவில்களினும் நடமாடும் கோவில்களே சிறந்தவையாகும். அவற்றை இழிவு படுத்துதலோ அவமானப் படுத்துதலோ கூடாது. அவ்வாறு செய்வது கடவுள் ஆலயத்திற்குச் செய்ததுபோலவே யாகும். "படமாடும் கோவில்களிலுள்ள பரமனுக்கு ஒன்று செய்தால், நடமாடும் கோவில்களிலுள்ள பரமனுக்கு ஒன்றும் பயனில்லை, ஆனால் நடமாடும் கோவில்களிலுள்ள பரமனுக்கு ஒன்று செய்தால் அது படமாடும் கோவிலிலுள்ள பரமனுக்குச் செய்ததாகும்" என்பது கடந்த மாத இதழில் எழுதப்பட்ட விஷயத்தின் சங்கிரகமாகும். இனி, இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் பெரியார் எழுதிய சிறு கதையை எடுத்துக் காட்டுவோம்.

ஓரூரில் குப்பன், பெரியசாமி என்னும் இரு சிநேக ரிருந்தனர். அவ்விருவரும் தனித்தனி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு மனைவியரும் பிள்ளைகளும் மருகியரும் பேரன் பேத்திகளு முண்டு. குப்பன் பெரியசாமியைப் போல பணக்காரனல்ல.

அவ்விருவரும் தங்கள் ஊருக்குச் சுமார் 80 மைல் தூரத்திலுள்ள ஓர் புண்ணிய ஸ்தலத்திற்குச் சென்று, சுவாமிக்கு அபிஷேகம் செய்வதாக எப்பொழுதோ ஒரு சமயத்தில் பிரார்த்தனை செய்துகொண்டார்கள். பிரார்த்தனை செய்துகொண்டு பல வருடங்களாகியும் பல காரணங்களால் அதனை நிறைவேற்றக் கூடாதவர்களாயிருந்தனர். குப்பனுக்கு அதனை விரைவில் நிறைவேற்றிவிடவேண்டுமென்னும் ஆவல் அதிகமிருந்ததால், பெரியசாமியை அடிக்

கடி தொந்தரை செய்வான். "நான் போய்விட்டால் வீட்டில் ஒரு வேலையும் நடவாது. பயிர் பச்சைகளெல்லாம் பாழாய்ப் போகும். என் பிள்ளைகள் புத்திசாலிகளல்ல. அடுத்த சித்திரை மாதம் போகலாம்" என்றும், சித்திரை மாதம் கேட்டால், "தைமாதம் போகலா"மென்றும் குடும்பக் கவலையிற் பெரிதும் ஆழ்ந்தவனுய்க் காலங்கடத்திக்கொண்டே வந்தான் பெரியசாமி. ஒரு முறை குப்பசாமி "மனித வாழ்க்கை அநித்தியமானது; அடுத்த சித்திரை வரையில் நாம் உயிரோடிருப்போமென்பது என்ன நிச்சயம். நாம் இறந்து பட்டால் அப்போது பயிர் பச்சைகள் பாழாகாதவாறு பாதுகாப்போர் யார்?" என்று பல நீதிகளைக் கூறி வற்புறுத்த, பெரியசாமி ஒருவாறு உடன்பட்டான். இருவரும் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற பணம் சேகரித்தெடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். "அதை அப்படிச் செய்யுங்கள், இதை இப்படிச் செய்யுங்கள், அது பத்திரம், இது சாக்கிரதை" என்று இப்படிப் பலவாறுக எச்சரிக்கைகள் செய்துவிட்டுப் புறப்பட்டான் பெரியசாமி. பிரயாண காலத்தில் அவன் மனம் முழுவதும் வீட்டிலேயே இருந்தது. குப்பன், வீட்டுக் கவலை சிறிதுமின்றிக் கடவுள் நினைப்புடன் சென்ருன். பாதி வழி சென்றுவிட்டார்கள்.

வழியில் குப்பனுக்கு நீர்வேட்கை உண்டாயிற்று. "அதோ இருக்கும் கிராமத்திற் சென்று தண்ணீர் குடித்து வா. அது வரை நான் இங்கே இருக்கிறேன்" என்று குப்பனை அனுப்பிவிட்டு பெரியசாமி சாலையிலிருந்த விருட்சத்தடியில் தங்கினுன். குப்பன் ஊருக்குள் சென்ருன். ஊர் சந்தடியற்றிருந்தது. எங்கும் எவரையும் காணவில்லை. ஒரு வீட்டினருகில் சென்ருன். கூப்பிட்டான். பதிலில்லை. உள்ளே யாரோ பெரிய வேதனைப்பட்டுக்கொண்டிருப்பதாக உணர்ந்தான். கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்ருன். ஓர் கிழவி சுவரின்மேல் சாய்ந்து கிடந்தாள். "அம்மா! தாகத்திற்குச் சிறிது தண்ணீர் வேண்டும்" எனக் கேட்டான் குப்பன். "அப்பா! உனக்குத் தண்ணீர் தரக்கூடியவர்கள் இங்கே ஒருவருமில்லை. அதோ கயிறும் பாத்திரமும்; எடுத்துச் சென்று கிணற்றில் நீர் முகந்துக் குடி" என்ருள் அக்கிழவி. குப்பன் அவ்வாறே செய்தான். அப்போது அவன் அங்குக் கண்ட பரிதபிக்கத்தக்க காட்சி சொல்லவொண்ணுததாயிருந்தது. மெல்ல கிழவியினருகில் வந்து உட்கார்ந்து உற்றதை உரைக்குமாறு கேட்டான்.

அவ்வூரில் கொடிய பஞ்சம் உண்டானதாயும், எளிய ஜனங்கள் பலரிறக்கப் பலர் வேற்றூர்களுக்குப் பிழைக்க ஓடிவிட்டதாகவும், தங்களிடமிருந்த தானிய தவசங்களைக் கொண்டு காலக்ஷேபம் செய்து வந்ததாகவும், அவைகளனைத்தும் சிறுகச் சிறுகக் குறைந்துகொண்டே வந்து முடிவில் அனைத்தும் செலவாய் விட்டதாகவும், ஒரு வாரமாய் தகுந்த ஆகாரமில்லாமலிருந்து கடைசியாகக் கடந்த நான்கு நாட்களாய் ஒன்றுமேயில்லாமல் போய்விட்டதாகவும், தன் மகன் சுரத்தால் பிடிக்கப்பட்டு எழவும் முடியாமல் தெருவில் கிடப்பதாகவும், மருமகள் உள்ளே காதடைக்கக் கண் பஞ்சடையக் கிடப்பதாகவும், குழந்தைகள் குரலும் நாடியற்றுக் கூக்குரலிட்டுப் புரண்டுகொண்டிருப்பதாகவும் அக்கிழவி கூறினுள்.

குப்பன் அவர்களது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு கண்ணீர் விட்டான். தெருத் திண்ணையில் வைத்திருந்த தன் மூட்டையைக் கொணர்ந்து அவிழ்த்துத் தனது வழிக்காக வைத்திருந்த ஆகாரத்தை எடுத்து ஒவ்வொருவரையும் எழுப்பிச் சிறிது சிறிதாக உண்பித்துத் தண்ணீர் குடிப்பித்

தான். அவர்கள் உண்டு களை தீர்ந்தபின், எழுந்து உட்காரத் தக்க சக்தி பெற்று அவனைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். அந்த நிலைமையில் அவர்களை விட்டுச் செல்ல குப்பன் மனம் இசையவில்லை. அன்றிரவும் தன்னிடமிருந்திருந்த ஆகாரத்தைக் கொடுத்துத் தானும் சிறிது உண்டு அங்கேயே படுத்துக்கொண்டான். பிறகு பெரியசாமியைக் குறித்துச் சிந்தித்தான். விடியற் காலையில் எழுந்து ஒருவரோடும் சொல்லாமல் போய்விடலாமெனத் தீர்மானித்தான். "போய்விட்டால் அவர்கள் கதி யாது. பழையபடி பட்டினி கிடந்து சாகவேண்டியதுதானே" என்று நினைத்துக் கவலையுற்ருன். "கடவுள் சித்தம் எப்படியோ அப்படி நடக்கட்டும். இவர்களை நல்ல நிலைமையில் சேர்த்து முன் போகலாகா"தெனத் தீர்மானித்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் எழுந்து வேற்றூருக்குப் போய் ஒரு வாரத்திற்குத் தேவையான அளவு போசன பண்டங்களை வாங்கி வண்டியில் போட்டுக்கொண்டு வந்து இறக்கினுன். தினமும் அவர்களுக்கு வேண்டிய உபசாரஞ் செய்து வந்தான். கிழவியின் மகன் சுரம் நீங்கியது. சிறிது சக்தியும் சரீரத்தில் உண்டாயிற்று. அவன் மனைவியும் எழுந்து நடமாடவும் வேலைகளைச் செய்யவும் ஆரம்பித்தாள். குழந்தைகள் "தாத்தா, தாத்தா" என்று குப்பனிடத்தில் அன்புடன் விளையாட ஆரம்பித்தார்கள். குப்பன் அவர்களைப் பிரிந்து யாத்திரை போக நினைத்தான். ஆயினும் "இப்போது நாம் வாங்கிக்கொடுத்திருக்கும் உணவுப் பொருட்கள் செலவாய்விட்டால் அதன்பிறகு இவர்கள் என்ன செய்வார்கள்?" என்ற எண்ணம் தோன்றி பிரயாணத்தைத் தடைப்படுத்திவிட்டது. பின்னரும் இரண்டொரு நாட்கள் தங்கி, பயிரிடுதற்கேற்ற சில கருவிகள் ஒரு சோடி மாடுகள் முதலியவற்றையும் வாங்கிக் கொடுத்தான். மேலும் கொஞ்சம் உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தான். தன் கையிலிருந்த பணம் கொஞ்சம் குறைய எல்லாம் செலவாய்விட்டது. யாத்திரை போகவும் முடியாது. அங்குத் தங்கியிருப்பதும் அவசியமில்லை. ஆகவே ஒரு நாள் காலையில் ஒருவர்க்கும் சொல்லாமல் பிரயாணப்பட்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

தான் யாத்திரைபோக முடியவில்லையென்றும், தன் பணமெல்லாம் செலவழிந்துவிட்டதாகவும், பெரியசாமியைத் தான் பிரிந்து விட்டதாகவும், அவன் சுவாமி தரிசனம் செய்துவிட்டுச் சுகமாகத் திரும்பி வருவானென்றும், தனக்கு அந்தப் பாக்கியம் கிட்டவில்லை என்றும், தன் வீட்டார் பெரியசாமி வீட்டார் முதலியவர்களிடத்தில் சொல்லிவிட்டான் குப்பன்.

பெரியசாமி குப்பன் வருமளவும் சிறிதுநேரம் படுத்துறங்கலாம் என்று மரத்தடியிற் படுத்தவன் நெடுநேரம் நித்திரை செய்துவிட்டான். விழித்துப் பார்த்தான். குப்பனைக் காணுமையால் ஒருகால் தன்னைக் கவனியாமல் முன்னேறிச் சென்றிருப்பான் என்று கருதி விரைந்து நடந்தான். வழியில் விசாரித்துக்கொண்டே போனுன். ஒருவரும் குப்பனைக் கண்டதாகக் கூறவில்லை. அப்படியே சென்று முடிவாகச் சேரவேண்டிய விடத்தை யடைந்தான். அவ்வூரெங்கும் சத்திரம் சாவடி குளக்கரை முதலிய எல்லா இடங்களிலும் தேடினுன். அடையாளங் கூறிப் பலரை விசாரித்தான். ஒன்றும் பயனில்லை. தான் ஒரு சத்திரத்தில் தங்கினுன். தன் நண்பனைப் பிரிந்தது அவனுக்குப் பெரிய விசனமாயிருந்தது.

அங்கே ஓர் சன்னியாசி அவனுக்கு நண்பனாகச் சேர்ந்தான். தான் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்விப்பதாக அச் சன்னியாசி சொன்னான். குப்பனைப் பிரிந்து அலையும் அவனுக்கு ஓர் துணைவன் கிடைத்தது மிகவும் ஆறுதலாக இருந்தது. அவனோடு ஆலயத்திற்குப் போனான். ஒருகால் குப்பனை அங்கே கண்டு பிடிக்கலாமென்ற தைரியம் அவனுக் கிருந்தது. சனக்கூட்டம் அசாத்தியமா யிருந்தது. கோயிலின் வாயிலைக் கடப்பது பகீரதப் பிரயத்தனமாயிற்று. "உள்ளே போனவர்கள் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வந்துவிடட்டும்; பிறகு நாம் போகலாம்" என்று துணைவனாக வந்த சன்னியாசி கூறலும், அதன்படி ஓரிடத்தில் ஒதுங்கி நின்றான். சிறிது நேரம் கழித்துப் பார்த்தபோது உடன் வந்த சன்னியாசி காணப்படவில்லை. மடியில் வைத்திருந்த பணப்பை அடியோடு காணோம். திருட்டுப் பயல் அச் சன்னியாசி செய்த வேலையே இது! நாலாபக்கமும் தேடினான். அவன் எங்கும் கிடைக்கவில்லை. அங்கிருக்க அவனுக்கென்ன பைத்தியமா? என்ன செய்வான். நல்ல வேளையாக பாதிப் பணத்தைத் தான் தங்கியிருந்தவிடத்தில் வைத்திருந்தான்.

சனக் கூட்டம் கலைந்தபாடில்லை. மூலஸ்தானத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். "ஆ. ஆ. என்ன ஆச்சரியம்! குப்பன் சுவாமிக்குப் பக்கத்தில் நின்று சுவாமி தரிசனஞ் செய்துகொண் டிருக்கிறான். குப்பனே சந்தேகமில்லை. கண்களை மூடித் துதிக்கிறான். இவன் எப்படி இங்கே வந்தான்? எப்படியும் இவனைப் பிடிக்கவேண்டும்" என்று பெரியசாமி வாயிலில் காத்துக் கிடந்தான். சனங்களெல்லோரும் போய்விட்டார்கள். குப்பனைக் காணோம். "எப்படிப் போயிருப்பான்? நாளையதினம் எப்படியாவது பிடித்தே தீருவேன்" என்று கூறிக்கொண்டே போனான். ஊர் முழுவதும் தேடினான். மறுநாள் முன்னாடியே வந்து கோயிலின் வாயிலில் நின்றுகொண்டான். குப்பன் வரவில்லை. இன்று அவன் வரவில்லைபோ லிருக்கிறது" என்றெண்ணிக்கொண்டு சுவாமி தரிசனம் செய்ய உள்ளே போனான். "அதோ! அதோ!! அவனே! அவனே!! குப்பனே! சுவாமியின் சமீபத்தில் கூட்டத்தை விலக்கிக்கொண்டு போய்ப் பார்த்தான் பெரியசாமி. குப்பன் காணப்படவில்லை.

பெரியசாமி ஊருக்குத் திரும்பினான். போகும் வழியில் குப்பன் சென்ற கிராமத்திற் சென்று விசாரித்தான். குப்பன் செய்த காரியங்களை அறிந்தான். வியர்த்தான். கண்ணீருகுத்தான். ஊர் போய்ச் சேர்ந்தான். குப்பனைக் கண்டான். குப்பன் பெரியசாமியைப் பார்த்து, "அப்பா! நீ பாக்கியசாலி. நான் சுவாமி தரிசனம் செய்யத்தக்க புண்ணியம் செய்யவில்லை. திரும்பிவிட்டேன்" என்றான். பெரியசாமி தான் குப்பனைக் கோவிலில் சுவாமிக்கருகில் இருமுறை கண்டதையும் பிறகு வழியிலுள்ள கிராமத்தில் தான் கேட்டதையும் நவின்றான். குப்பன், "அவற்றையெல்லாம் சொல்லாதே. அவை சுவாமி விஷயம். கடவுள் சித்தத்தின்படி யாவும் நடந்தன" எனக் கூறிவிட்டு பேச்சை வேறு வழியில் மாற்றிவிட்டான். பெரியசாமி வியப்புற்றவனாய் வீடு திரும்பினான்.

ரஷியா தேசத்தில் பெரிய ஞானியாக விளங்கிய மகான் டால்ஸ்டாய் அவர்களால் எழுதப்பட்ட இச் சிறுகதை,

படமாடும் கோயில் பரமர்க்கொன் றீயின்
நடமாடும் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங் காமே."

என்னும் திருமந்திரச் செய்யுளுக்கு ஓர் உதாரணமாக விருக்கின்றதல்லவா?

குப்பன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் செய்தவை யனைத்தும் கடவுளால் எவ்வளவு சந்தோஷத்துடன் அங்கீகரிக்கப் பட்டன! பெரியசாமி சுவாமியின் ஆலயத்திற்குச் சென்றும், சுவாமியைத் தரிசித்தும், மிகுந்த பணச் செலவு செய்தும் பெற்ற பலன் யாது? இக்கதையின் கருத்தைக் கூர்ந்து சிந்திப்போமாயின் நடமாடும் கோயில்களைப் பூசிக்கும் முறையும் அவ்வாறு பூசித்தலால் அடையப்படும் பயனும் இத்தன்மையான தென்பது தெளிவாகப் புலப்படும். தவிர,

வேதமானது ஈசுவரனுடைய வடிவத்தைப் பின்வருமாறு கூறுகின்றது.

"சீவர்களுடைய சரீரம் வியஷ்டி (அதாவது ஒரு சரீரம்) ஈசுவரனுடைய சரீரம் சமஷ்டி (அதாவது எல்லாச் சரீரங்களும) எனவே, எல்லாத் தூல சரீரங்களும் ஈசுவரனுக்குத் தூல சரீரமாம். இதனால் அவன் விராட்டு எனப்படுகிறான். இப்படியே மற்ற சூக்கும காரண சரீரங்களும்" எனக் கொள்க. பகவத்கீதையில் கிருஷ்ணன் விசுவரூபங் காட்டியபோதும், கந்தபுராணத்தில் குமாரப் பெருமான் விசுவரூபங் காட்டின போதும் உலகங்களெல்லாம் அவ்வடிவங்களிருந்ததாகக் கீதையும் கந்தபுராணமும் இப்படியே ஏனைய புராணங்களும் இதிகாசங்களும் கூறக் காண்கின்றோம்.

"கீதம்இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம்இரண் டும் வினவில் பாதாளம ஏழினுக் கப்பால்
சோதிமணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுண மொன்று மில்லான் அந்தமிலான் வரக்கூவாய்!"

என்னும் மணிவாசகப் பெருமான் மணிவாக்கு விராட்டு சொரூபத்தின் தன்மையை நன்கு விளக்கி நின்றது.

"வாரணங்க ளெட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியும் நின்று சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தினா லடித்த
புண்வாயி லீமொய்த்த போது."

என்ற தனிப்பாடலும் காண்க.

கண்ணன் மண்ணைத் தின்றானென்று யசோதைப் பிராட்டியார் அதட்டி வாயைத் திறக்கச் சொல்லிப் பார்த்தபோது, உலகங்க ளெல்லாம் அவன் வாயி லிருக்கக் கண்டாள்.

"கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்

ஐயன் நாவழித் தாளுக் கங்காந்திட
வையமேழும் கண்டாள் பிள்ளை வாயுளே."

என்று பெரியாழ்வார் பாசுரம் பகர்கின்றது. ஆகவே, எல்லாச் சரீரங்களும் சேர்ந்ததே ஈசுவர சரீரமென்றும், அவன் உலக வடிவமாக விருக்கின்றானென்றும், எல்லா உலகங்களும் அவனுருவத்தில் அடங்கி யிருக்கின்றனவென்றும் அறியக் கிடக்கின்றது.

நடமாடும் கோயில்களுக்குச் செய்வனவெல்லாம் இறைவனையே சேரும். இவர்களை விட்டுத் தனியாக இறைவனுக்கு ஒன்றும் யாரும் யாதொன்றும் செய்ய வியலாது. அவரைத் தனியாக எங்கே காண்பது? எல்லாமா யிருக்கும் அவருக்கு என்ன செய்வது? கடவுளை வழிபட விரும்புவோர் உலகத்தையே அவர் வடிவமாகக் காண்பதும் எல்லாவற்றையும் அவர் வடிவமாகக் காண்பதும் அத்தியாவசியமாகும். அங்ஙனம் காணப் பழகிய பின், வழிபடும் முறை எளிதில் விளங்கும். கபீர்தாச ரென்னும் மகான் நாயையும் ஈசுவர சொரூபமாகக் கண்டு, அது ரொட்டித் துண்டைத் தூக்கிச் சென்றபோது, "சுவாமி! பகவானே! அது உலர்ந்திருக்குமே. இதோ சர்க்கரையும் நெய்யும் சேர்த்துப் புசியுங்கள்" என்று அவற்றைத் தூக்கிக்கொண்டு ஓடினாராம். சக்தி உபாசகன் ஒருவன் தன் வயலில் மேய்ந்து கொண்டிருந்த எருமையைக் கல்லால் அடித்தான். அக்கல் எருமையின் நெற்றியில் பட்டது. மறுநாள் தேவி அவனெதிரில் நெற்றிக் காயத்துடன் பிரசன்னமாயினள். "தேவி! என்ன உமது நெற்றியில் அடிபட்டிருக்கிறதே?" என்று அவன் கேட்க "அப்பா! நீயே என்னைக் கல்லால் அடித்தனை" என்றாள் தேவி. "அம்மணி! அடியேன் உம்மை என்று அடித்தேன்?" என்றான் பக்தன். "நேற்று அடிக்க வில்லையா! எருமையை அடித்தா யல்லவோ! அது என் சொரூபமே யன்றோ?" என்று தேவி கூறினள் என்று ஓர் சரிதை சாற்றுகின்றது.

இதனாலும் மக்கள் பணியே மகாதேவன் பணி என்பது விளங்குகின்றது. உண்மை இங்ஙனமாகப் பலர்—தங்களைக் கற்றோரெனக் கருதிக் கொண்டிருப்போர்—இதனை யறியாமல் மக்களுள் ஒரு சாராரை—ஈசுவர சரீரத்தின் ஒரு பகுதியை—நடமாடும் ஆலயங்களை—அவமதித்து, இழிவு படுத்தி, அடக்கி ஒடுக்கி தாழ்த்தி, "தீண்டப்படத் தகாதவரென்றும், தொட்டால் தீட்டு வந்து விடுமென்றும் சொல்வதும், ஆலயங்களுக்குள் பிரவேசிக்கலாகாது, பிரவேசிக்க அவர்களுக்கு உரிமையே யில்லை. அப்படி நுழைந்தால் கடவுள் கோவிலை விட்டு ஓடியே போய்விடுவா" ரென்று சாதிப்பதும் என்ன மதி கொண்டோ! என்ன மறைமொழி கொண்டோ? யாதோ அறியோம்.

எத்தனையோ ஏழைமக்கள் இக்காலத்தில் இத்துர்திருஷ்ட நாட்டில் ஒரு வேளை உணவுக்கும் கதி யற்றுத் தவிக்கிறார்கள். சென்னையில் பத்தாயிரம் பேர் வீடு வாசலின்றித் தெருவில் படுத்துறங்குவோரா யிருக்கின்றனர் என்று சென்னை கார்ப்பரேஷன் கணக்கெடுத் திருக்கின்றது. இதனைக் கேட்கும் எவர் மனம்தான் எரியா திருக்கும்! இந்த நிலையில்,

"ஆடெரி படர்ந்த கோடிய டுப்பில்
ஆம்பி பூப்பத் தீம்பசி யுழல
இல்லி தூர்த்தனள் பொல்லா வறுமுலை

சுவைதொறும் சுவைதொறும் பால் காணமல்
குழவி தாய்முக நோக்க
மனைவி என்முகம் நோக்க யானும்
நின்முகம் நோக்கி வந்தனன்."

என்னும் பாட்டிற் கிலக்கியமாக எத்தனை பச்சைப் பசுங்குழவிகள் தாய்ப் பாலின்றித் தவிக்கின்றன. மூலை முடுக்குகளில் சந்து பொந்துகளில் ஓலைக் குடிசைகளில், பணமிகப் படைத்தோர் பசும்பால் வாங்கி அப்பாலர்களுக்குப் பரிவுடனளித்தல் பகவானுக்கு விருப்புண்டாகாதோ? குடம்குடமாகப் பாலைக் கொண்டுபோய் கோவில்களில் கொட்டி அபிஷேகம் செய்தால்தானா சுவாமிக்குப் பிரியமாகும்? "எனக்குக் கொடாமல் அக் குழந்தைகளுக்கு ஏன் கொடுத்தீர்கள்?" என்று கடவுள் கோபித்துக் கொள்வாரோ? ஆயிரக்கணக்கான மக்கள் இருட்டில் பேய்போல அலைகின்றார்களே! எண்ணெய்க்குக் காலணா வில்லாமல் கதி கலங்கி நிற்கின்றார்களே! அவர்களுக்கு எண்ணெய்த் தானம் செய்யும் புண்ணியவான்களை யாவருமில்லை. பேரொளிப் பிழம்பா யொளிர்வோனும் சந்திர சூரியாக்கினிகளைக் கண்களாகக் கொண்டிருப்போனுமாகிய பகவானுக்கென்று ஓர் கோவிலில் லட்சம் விளக்குகளேற்றுகின்றார்களே! அது எந்தப் பகவானுக்குப் பிரீதி! கோவிலுள்ள சுவாமிக்குக் கண் தெரியாதென்றோ? அன்பின் அறிகுறியாகப் பக்தர்கள் செய்யும் இக்கைங்கரியங்களை நாம் தடுக்கவில்லை. "மாதா வயிறெரிய மாகேசுவர பூசை" செய்வதேன்? என்பதே நமது கேள்வி.

அவ்வேழை மக்களுக்குச் செய்வதெல்லாம் பகவானுக்குச் செய்வதே யாகும் என்பது முக்காலும் சத்தியமாம். இது எல்லா நூல்களின் சம்மதமாகும். அவர்கள், நடமாடும் கோவில்களென்பதை முன்பே பல நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு விளக்கி யிருக்கின்றோம். ஆகவே, அவர்களுக்குச் செய்வதே கடவுளுக்குப் பிரீதியாகுமன்றி நடமாடாக் கோவில்களுக்குச் செய்வது அவருக்குப் பிரீதியாகாது. இதனால் கோவிலுக்குப் போகலாகாதென்றோ, அங்கே சென்று பகவத்தியானம் செய்யலாகாதென்றோ கூறியதாக அர்த்தம் கொள்ளாதிருக்குமாறு நண்பர்களை வேண்டுகின்றோம்.

"ஆனந்தன்" வாசகர்கள் இவ்வுண்மையை நன்கறிவார்க ளென்பதே எமதபிப்பிராயம். ஏனெனில் "ஆனந்தன்," தோன்றிய காலந்தொட்டு இத்தகைய உண்மைகளைப் பலமுறையும் எடுத்துக்காட்டி வருகின்றதையும், இத்தகைய சீர்திருத்த தொண்டையே தன் கடமையாகக் கொண்டிருத்தலையும் உலகம் அறியு மன்றே. ஆகவே, ஆனந்தன் வாசகர்கள் மேற்காட்டிய காரியங்களைக் கைக்கொண்டிரா ரென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆயினும், தங்களோ டமைந்திராமல் இவ்வுண்மைகளைச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் தங்கள் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டி, அவர்களையும் சீர்திருத்துதல் வாயிலாக, நாட்டிற்கும் மதத்திற்கும் அரிய சேவை செய்யுமாறு பிரார்த்திக்கின்றோம். நாமும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் இது போன்ற பல உண்மைகளை விளக்கப் பல பிரபல நூல்களின் உண்மைப் பொருள்களை—கருத்துக்களை—வெளியிட்டு வரத் தயங்க மாட்டோம்.

பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

பிராட்டியாரின் கலங்கா வுறுதியையும் அஞ்சா ஆண்மையையும் விளக்குவதாகிய

"என்னையுங் கொல்லா பின்னே பிவனையுங் கொல்லா பின்னு
முன்னையுங் கொல்லாய் மற்றிவ் வுலகையுங் கொல்லா யானே
இன்னுயிர் நீங்கி யென்றும் கெடாப் புகழெய்து கின்றேன்
பின்னையு மெங்கோ னம்பிற் கிளையொடும் பிழையாய்"

என்னும் உரைகளைக் கேட்ட அரக்கனுக்கு எழுந்த கோபத்தைத் தணிப்பவன்போல் மகோதரனாகிய மந்திரி, "அரசே இந்த ஜனகன் நமக்காக வேண்டினே யல்லது யாது பிழை செய்தான். போரில் நீ வெற்றி பெற்றால் இம்மாது உன் வசமாகத் தடை பிராது. அதுபோது தன் தந்தையைக் கொன்ற கொடுமைக்கு வருந்த நேரும். ஆதலினால் இந்திர செல்வம் துய்க்கும் நீ இந்த அற்ப காரணத்திற்காகக் கொல்வது சிறப்பன்று" எனப் புகன்று விலக்குகின்றான். இத்தகைய தருணத்தில் போர்க்களத்தில் இராம லட்சுமணர்களின் வில்லோசையும் வெற்றிச் சங்க முழக்கமும் வானரர் ஆரவாரமும் செவியிற் புகுந்தது. தம்பிக்கு அபாயம் எய்தியதாக ஐயுற்றுச் சோலையினின்று மீண்டு இருக்கை சேர்கின்றான். இராமபாணத்தினால் உனது தம்பி இறந்தான் என்னும் செய்தியைத் தூதுவர் ஓடி வந்து மெல்லச் செவியிற் கூறினர். உண்மையில் பிராட்டியாரின் கடுஞ் சினமே கும்பகருணன் வதத்திற்குத் துணை நின்றதாக எண்ணுவது தவறாகாது. மாசற்ற கற்பரசிகளின் மனக்கொதிப்பு கொலைக் கருவிகளினும் கூரியதன்றோ?

இனி நமது கவியரசர் பிராட்டியாரைப் பின்னால் இந்திரசித்து விடுத்த பிரமாத்திரத்தினால் செயலற்று உணர் வொழிந்து போர்க் களத்தில் சாய்ந்துவிட்ட இளையவனையும், அதுகண்டு ஆற்றாது துன்பத்தால் உயிர் சாம்பின பான்மையில் அவசமுற்றிருந்த இராமனையும் இறந்தவர்களாக மதித்து ஒற்றர் வந்து கூறக் கேட்ட அரக்கர் வேந்தன் உவகை பொங்கித் தனது வெற்றியையும் அன்புக்குரியவர்களின் நிலைமையையும் பிராட்டியாரே காணும்படி கொண்டு

சென்று காண்பிக்கும் சந்தர்ப்பத்தில் தான் சந்திக்கின்றார். அப்படலத்திற்கு பிராட்டி களன்காண் படலம் என்பது பெயர்.

பிராட்டியாருக்கு அடுக்கடுக்காகத் துன்பங்கள் வந்ததாயினும் இத்துயர் அதற்கு மேல் ஒரு படியும் இல்லை யென் றெண்ணும் முடிவிடத்தை எட்டியதென்று சொல்லலாம். முதலில் மாய மானை விடுத்தது முதலிருந்தே தங்கள் செய்கையிலும் சொல்லிலும் ஜானகிக்கு நம்பிக்கை கிடையா தென்பதை அரக்கன் உணர்ந்திருந்தா னாதலின் பிராட்டியாரைப் புட்பக விமானத்தில் ஏற்றுவித்துப் போர்க்களத்தில் கொண்டு காட்டச் செய்கின்றான். இதனைக் கவி,

தெய்வமானத் திடையேற்றி மனிசர்க்குற்ற செயலெல்லாம்
தய்யல்காணக் காட்டுமின்கள் கண்டாலன்றித் தனதுள்ளத்
தய்யநீங்கா ளென்றுரைப்ப வரக்கர்மகளிர் இரைத்தார்ப்ப
உய்யுமுணர்வு நீத்தாளை யொடும்போர்க்களத்தி னிடையுய்த்தார்.

என்னும் செய்யுளால் உணர்த்துகின்றார். இருவரும் போர்க்களத்தில் இறந்துபட்டாரென்று அரக்கியர் புகலக் கேட்டதும், அஃது உண்மையோ, அன்றோ என்னும் ஐயப்பாட்டிலேயே பிராட்டியார் உய்யும் உணர்வு நீத்தார் என்று தெரிகிறது. இச்செய்தி புகன்றவர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக இருந்திருப்பின் பிராட்டியாரின் நிலைமை யாதாய் முடிந்திருக்குமோ? அறியோம். எனினும் உண்மையில் இராமன் உயிர்த்திருந்தா னாதலின் அவருடைய இன்னுயிர் நிலையாகிய பிராட்டியார் எங்ஙனம் உயிர் இழந்தவராகக் கூடும்? இன்றேல், "எனக்குயிர் பிறிதும் ஒன்றுண்டு என்றிரேல், எனக்கு மன்றித் தனக்குயிர் வேறிலாதவர்" எனப் பிராட்டியார் முன்பு இராவணனிடம் கூறிய மெய்யுரை பொய்யுரையாக வன்றோ முடியும்? ஆதலின் இராகவனுக்கு ஆவி அடங்கி உணர்விழந்து அவசம் எய்திய அளவே, ஈண்டு தேவியாரும் உணர்வொடுங்கி இனி பிழைத்த லரிதென்னும் நிலையை அடைந்தார். அத்தகைய நங்கையை மன்னர் ஆணைப்படி மகிழ்வுடைய அரக்கியர்கள் புட்பகவிமானத்திலேற்றிக்கொண்டு போர்க்களம் சென்று இருவரும் வீழ்ந்து கிடந்த இடத்தில் இறக்கிக் காண்பித்தனர்.

அங்கு கணவ னுருவன்றி யொன்றும் காணாதாள் என்று பிராட்டியாரைக் கவிவேந்தர் போற்றுகின்றார். இயல்பாகவே கற்புடைய மங்கையர்க்கும், கடவுள் அன்பர்கட்கும் தமது உள்ளங் கவர்ந்து நிற்கும் உருவமன்றிப் பிற தோன்று உளத்தில் இடம் பெறாது. கற்பருங் கலமாகிய பிராட்டியாருக்கு பிறவடிவம் எங்ஙனம் புலனாகும்! தனது வேந்தன் படுகளத்தில் சாய்ந்திருக்கும் தன்மையைச் சிறிது உணர்வு பெற்றுக் காண்கின்றார்; மீட்டும உணர் விழக்கின்றார். இந்த நிலையினைக் கவி,

"தண்டாமரைப்பூ நெருப்புற்ற தன்மையுற்றான் தரியாதாள்
பெண்டாணுற்ற பெரும்பீழை உலகுக்கெல்லாம் பெரிதன்றோ"

என்று ஆற்றா திரங்குகின்றார் எனில் பிறர் வெளியிட மொழியு முண்டோ? இடையிற் சிறிது உணர்வு பெறுங்கால் பெண்ணியல்புக் குரியதாகிய உண்ணெகிழ்ச்சியால் வாய் திறந்தாற்றியதாகவும் கவி எடுத்துக் காட்டியுள்ளார். இன்ப துன்பம் ஆகிய இருவகைப் பண்பும் பொங்கி எழுங்கால், ஆடவரைப் போல் அகத்திலடக்கும் மனவுரம் பெண்பாலார்க் கமைவதன்று. ஆகவே

இனத்தியல்பாகப் பிராட்டியார் வாய் திறந்து கதறக் கேட்டபோது, ஏனைய சக்திகளும் தேவ மாதரும் பிறரும் கன்னெஞ்சுடைய அரக்கியர்களும் அழுதனர் என்பதை அடியில் வரும்,

“மங்கை யழலும் வானாட்டு மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கி லுறையுங் குயில் அழுதாள் பதும மலர்மேல் மாதழுதாள்
கங்கை யழுதாள் நாமடந்தை யழுதாள் கமலத் தடங் கண்ணன்
தங்கை யழுதாள் இரங்காத அரக்கிமாருங் கரைந்தழுதார்”
“பொன்றாழ் குழையா டனையீன்ற பூமாமடந்தை புரிந்தழுதாள்
குன்றா மறையுந் தருமமுமெய் குழைந்து குழைந்து விழுந்தழுத
பின்றா துடற்றும் பெரும்பாவம் அழுத தென்னென் பிறர் செய்கை
நின்றார் நின்றபடி யழுதார் நினைப்பு முயிர்ப்பும் நீத்திட்டாள்”

என வரும் செய்யுள்களினால் விளக்கி யுள்ளார்.

இவற்றுள் முதலாக வானாட்டு மயில்கள் அழுதார் என்று தொடங்கியிருக்கின்ற நுட்பமானது, இடைபறாது இராவணனுடைய அந்தப்புரத்தில் பலதிறப்பட்ட குற்றேவல்களையும் அல்லும் பகலும் (தமது மென்மை மேன்மைகளை மறந்து) புரிந்து துன்பக்கடலில் தோய்ந்திருப்பவர்கள் தேவ மாதர்களே யாதலின், அன்னார் அனைவர்க்கு முன்னால் (தங்கள் தங்கள் துயரினையும் அடக்க முடியாமல்) அழுதது பொருத்தமாயிற்று—உலக அநுபவத்திலும் துன்பமுடையவர்களுக்கே துயரப்படுபவர்களைக் காணுங்கால் தங்கள் துன்பமும் பன்மடங்காகப் பெருகுவ தியற்கை. இரண்டாவதாக மழவிடையோன் பங்கிலுறையும் குயில் அழுதாள் என்றார், பிராட்டியின் அவதாரம் அரக்கர் வதத்திற்கே யென்பதும், திருமகளே பிராட்டி யென்பதும், திருமாலே இராமனென்பதும், இத்துயரம் தாற்காலிகமே யென்பதும், நன்குணர்ந்த தலைமைச் சக்தியாகிய உமாதேவியாரும் பின்னால் விளைவது இதுவென உணர முடியாமல் அழுகின்ற பிராட்டியின் சோகத்தின் மிகக் கொடுமை காணச் சகியாமல் இனத்தார் ஒற்றுமை பற்றித் தன்னை யறியாமல் அழுதனள். ஒரு கண்ணில் ஊறுகாணின் மறு கண்ணிலும் நீர் பெருகுதல் இயல்புபோலத் திருமகளார்க்குற்ற உள்ள நெகிழ்ச்சி, வரைமகளார்க்கும் எழாதொழியுமோ? ஆகவே, இதுவும் இயல்பாயிற்று எனலாம். மூன்றாவதாகப் பதுமமலர்மேல் மாதழுதாள் என்றனர். இதன் பொருள்,

பதுமமலர் மேல் வதியும் இலக்குமிக்குத் தனது கலையே பிராட்டியாரென்பதும் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலன நிமித்தமே இத்துயர் மேற்கொள்ளத்தக்க தென்பதும் தெரியும். என்றாலும், தனது பிரதி பிம்பமாகிய பிராட்டியாருக்குற்ற துன்பம் தன்னையும் பற்றிப் பீடிப்பது இயல்பாயிற்று. ஆதலின் அதுவும் ஓர் வியப்பன்று.

நான்காவது கங்கை யழுதாள் என்பது. கங்கை யென்பது நீர் மகளையே சுட்டும். ஏனையோர் அழுகையினால் கண்ணீரும் அந்நீர் வடிவமே. என்னில் அந்நீரின் தன்மையையுடைய கங்கைத் தெய்வம் மற்றவர்களைவிட விரைவாகவும் மிகுதியாகவும் அழுதது பொருத்தமுடையதேயாகும்.

ஐந்தாவதாக நாமடந்தை யழுதாள் என்றார் கவி. புராண இதிகாச முறையில் கலைமகளார் இலக்குமியின் மருமகளென்று மரபு. இதை நோக்க மாமியின் துயர் கண்டு மருகி அழுவது அபூர்வ சம்பவமாகும். ஆனால் உண்மை

யில் அறிவுத் தெய்வமாகிய நாமகள் தன்னை யடைந்தோர்க்கும் சுக துக்கங்களில் சமத்துவ நிலை வகிக்கும் அறிவாற்றலை யளித்து மேன்மைப் படுத்துதல் அநுபவம். அங்ஙனமிருக்கத் தானே அவ்வாற்றல் இழந்து துன்புற்றாள் என்பது வியப்பிற் குரிய தொன்றாகும். ஆறாவதாகக் கமலக்கண்ணன் தங்கையாகிய காளியும் அழுதாள் என்கிறார். வீர சக்தியாகிய காளி கடின சித்தம் வாய்ந்தவள். இவளே பிராட்டியின் துயரைக் கண்டு சகிக்கவில்லை என்றால் மற்றவர்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? ஏழாவதாக இரக்கம் என்பதே சத்துவ குணத்தைச் சார்ந்ததொன்று. அக்குணமே அரக்கியரிடம் தலைகாட்டக் கூடியதன்று; அன்றியும் பிராட்டியாரைச் சூழ்ந்து சதாகாலமும் கோரமான கொடிய வசனங்களைக் கூசாது புகன்று கொலைக் கருவிகளைக் காட்டி அச்சுறுத்தி அவரது தளர்ச்சி கண்டு பேரானந்தத்தில் திளைக்கும் தன்மையில் அநுபவம் பெற்றவர்கள் இவ்வரக்கியர். இவர்கள் அழுதனர் என்பதே அதிக அதிசயம். அவ்வழுகையும் போலி யழுகையாக இராமல், உள்ளம் நெகிழ்ந்து கரைந்து கரைந்து அழுதார் என்றார் கவி. இதுவே பரமாச்சரியமாயிற்று. உண்மையில் எல்லா உயிர்களுக்குள்ளும் ஊடுருவிக் கலந்து தோய்ந்துள்ள ஜகன்மாதாவே பிராட்டியாராதலின், இவரது நெகிழ்ச்சி கன்னெஞ்சுடைய அரக்கியருள்ளும் பரவித் தன்வயமாக்கிய தென்பதே கொள்ளத்தக்க உண்மைக் காரணமாகும். முதல் செய்யுள் இவ்வளவுடன் முடிவாகிறது. இனி இரண்டாவது செய்யுளில்

“பொன்றாழ் குழையாள் தனையீன்ற பூமாமடந்தை புரிந்தழுதாள்.”

என்று பிராட்டியாரைப் பெற்ற பெருந்தவத் தாயாகிய பூமிதேவி இவ்வலக்கண் கண்டு சகியாமல் புரிந்தழுதாள் என்றார். அகழ்வாரையும் தாங்கும் பொறைத் தெய்வமாகிய பூமிதேவி தன்னிடம் தோன்றிய கற்பரசியாகிய காதல் மகளின் துயரத்தினை எங்ஙனம் பொறுக்க முடியும்! வசாவியும் தன்னிடம் புழுத்த புழுவைக் கொல்லா தென்பர். ஆகவே இஃது இயற்கையே. பிறகு,

“குன்றாமறையும் தருமமுமெய் குழைந்து குழைந்து விழுந்தழுத”

என்றார். எக்காலத்திலும் குறைவுபடாத வேதங்களும், தருமதேவதையும் தனது தளர்வைப்போக்கி நிலைநாட்ட வந்த இராமர் நிலையினையும், பிராட்டியாரின் சோகத்தினையும் கண்டு குழைந்து குழைந்து விழுந்து அழுதன என்றார். இத்துன்ப நிகழ்ச்சியினால் காலற்றுப் போகக் கூடியது வேதமும் தருமமுமே யாதலினால், இவை குழைந்து குழைந்து விழுந்தழுத என்றார் கம்பநாடார். இவ்வளவிற்கு மேலாக பின்றாதுடற்றும் பெரும்பாவம் அழுத என்று மகுடம் அமைத்தார். திருமாலும், மலர்மகளும், தேவர் குலமும் முனிவர் கணங்களும் அறத்துறையாளரும சகிக்க முடியாத கஷ்டங்களில் ஈடுபடும்படி செய்த அப்பெரும்பாவமும் பிராட்டியாரைக் காணத் தரியாது அழுத தென்றார். அப்படியான கொடுமையை உண்டுபண்ணியது தானாக இருந்தும், தன்னிலைமறந்தோ தனது தவறுக் கிரங்கியோ? தானும் அழாமலிருக்க முடியவில்லை என்றால் பின்னென்? பிறர் செய்கை என்று கவியரசர் மேலும் சொல்லால் விவரிக்க முடியாமையைச் சுட்டுகின்றார். இவ்வாறு அழுது நினைப்பும் உயிர்ப்பும் அடங்கிய பிராட்டியாரை அரக்கியர் பலவாறு உபசரித்து உயிர்ப்புண்டாகச் செய்வதும், கண்கள் விழித்துப் போர்க்களத்தில் உயிர்ப்படங்கிக் கிடக்கும் காதல் மன்னனைக் கண்டு கதறிப் பின்னும் பின்னும்

சோர்வுறும் நமது பிராட்டியாரின் நிலையினைக் கவி, 'குடித்தான் துயரை உயிரோடும் குழைத்தான் உழைத்தான் குயில் அன்னாள்' என்ற அடியினால் நன்கு விளக்குகிறார். இவ்வாறு வருணிக்க முடியாத துயரத்தில் அதிக நேரம் ஈடுபட்டிருக்க முடியாமல் தனது நாயகனின் திருமேனி மீது விழுந்து தனது உயிரையும் தொடர்ந்துவரும் துயரினையும் ஒருங்கே போக்கிக் கொள்ளுவேன் எனத் துணிந்து அரக்கியரின் கைப்பிடிகளினின்றும் திமிறிக்கொண் டெழுகின்றார் பிராட்டியார். இக் கருத்தினை,

மழுவாள் வரினும் பிளவா மனனுண்
டழுவேன் இனியின் றிடர் ஆறிடயான்
விழுவே னவன் மேனியின் மீதினெனா
எழுவாளை விலக்கி யியம்பின ளால்.

பிராட்டியாருக்கு எப்போதும் மர்மங்களை எடுத்துணர்த்தித் துன்பமகற்றுவதே கடமையாகக் கொண்டிருக்கும் விபீஷண புத்திரியாகிய திரிசடை, பிறர் அறியாவண்ணம் தழுவி அணைத்துத் தடுப்பவள் போலக் கட்டிப் பிடித்துக் காதிற்படும்படி இராம இலட்சுமணர்கள் உண்மையில் இறக்கவில்லையென்பதையும், தற்போதுள்ள நிலை அவசமே யென்பதையும், அதற்குரிய இலக்கணங்களையும், அநுமனுக்கு இறப்பில்லை யென்பதையும், தேவர்கள் முகத்தோற்றம் கவலைப்படத் தக்கபடி இல்லை யென்பதையும் உணர்த்தியதோடு, பிராட்டியார் எல்லாத் துன்பமும் நீங்கித் தெளிவுறும் வண்ணம் இறுதியாக,

"மங்கல நீங்கினாரை ஆருயிர் நீங்கினாரை
நங்கை பிக்கடவுள் மானம் தாங்குறு நவையிற்றன்றால்
இங்கிவை யனவையாக இடர்க்கடல் கடத்தி யென்றாள்
செங்கைய ளாயதையல் சிறிதுயிர் தரிப்பதானாள்."

என்ற உண்மை வரலாற்றினை யுணர்த்தப் பிராட்டியாரும் அப்பெண்ணின் சொற்களிலுள்ள ஆழ்ந்த நம்பிக்கையினால் உயிர் நிலைப்பதாயினார் என்றார் கவி.

அமங்கலைகளை இப்புட்பக விமானம் சுமக்காதென்கிற இரகசியம் மறக்க முடியாததாதலின் பிராட்டியார் நம்பி யுயிர் தரிக்க இடந்தந்தது திரிசடை அரசபுத்திரியாயினும், அவள் கீழ் குற்றேவல் புரியும் அரக்கியர்களுக்கு அஞ்சியே பிராட்டியாரிடம் பேச வேண்டியிருந்த தென்பதை நன்றும் "அரக்கிமாரைப் பாடுற அற்றநோக்கி" என்னும் வாக்கியத்தினால் உணர்த்தியுள்ளார் கவியரசர். தனது பதவி பெரிதாயினும் தனது செய்கை இராஜதுரோக குற்றமாக சட்டப் பிரிவில் கொள்ளப்படு மாதலின் தனது செய்கை எவ்வளவு நயதாயினும் தன் கட்சிக்குப் போதிய ஆதரவில்லாத நிலையில் குற்றேவல் புரியும் காவல் அரக்கியருக் கஞ்சியே தனது கடமையைத் திரிசடை ஆற்றி வருகின்றமை பெரிதும் குறிப்பிடத் தக்கதாகும். தருமத்தைக் காப்பதிலும் தந்திரம் கைவிடற் பாலதன் றென்பதைக் கொள்ளவேண்டியதே.

இவ்வுரைகளைக் கேட்ட பிராட்டியாரும்,

"அன்னைநீ யுரைத்ததொன்றும் அழிந்தில தாதலானே
உன்னையே தெய்வமாகக் கொண்டிந்தனைகால முய்ந்தேன்
இன்னம் இவ்விரவு முற்றமிருக்கின்றேன் இறந்த லென்பால்
முன்னமே முடிந்ததன்றே என்றனள் முளரிவந்தாள்" என்றும்

நாணெலாம் துறந்தே னில்லின் நன்மையி னல்லார்க் கேய்ந்த
பூணெலாம் துறந்தேன் என்றன் பொருசிலை மேகந் தன்னைக்
காணலா மென்னு மாசை கடுக்க வென்னாவி காத்தேன்
ஏணிலா வுடலி னீங்கல் எளிதெனக் கெனவும் சொன்னாள்.

எனத் தாற்காலிகமாக இறப்ப தென்னும் எண்ணத்தைக் கை விட்டுச் சிறிது அமைதி பெற்றனர் பிராட்டியார். மேலே காட்டிய செய்யுளினால் இதுகாறும் இத்தகைய இடர்களுக்கிடையில் நாணத்தையு மிழந்து உயிர் காத்த காரணம் எனது காவலனைக் காணலாம் என்னும் காரணம் பற்றியதே யாகும்; அன்றி உயிரை நீக்கமுடியாமையினாலன்று. அஃது எனக்கு எப்போதும் எளிதே யென்னும் நிச்சயத்தையும் வெளியிடுகிறார். இத்தருணத்தில் அரக்கியர் பிராட்டியாரைப் பலவந்தமாக விமானத்திலேற்றி அசோக வனத்தில் சேர்ப்பிக்கின்றார். இதனைக் கவி,

மெய்யுயிர் உலகத்தாக விதியையும் வலித்து விண்மேல்
பொய்யுடல் கொண்டு செல்லும் நமனுடைத் தூதர் போன்றார்.

என்று மிகப் பொருத்தமாக உவமித்துள்ளார்.

ஆரம்ப ஆசிரியர்களும் அவர்கள் நிலைமையும்.

லோயர் கிரேடு ஆசிரியர்கள் தங்களை ஹையர் கிரேடாக உயர்த்திக் கொள்ள R. C. No. 2245 of 24 Dated 8-5-25 உத்திரவின்படி ஒரு பரீக்ஷை வைப்பது என்பதற்கிணங்க, தற்சமயம் G. O. M. S. No. 1581. Dated 4th September 1933 உத்தரவு கிடைத்திருக்கிறது.

அதன்படி 1915-ஞு முதல் ஹையர், லோயர் என்று பயிற்சிக்குத் தக்கவாறு, பாடங்களிலும் பரீக்ஷையிலும் சர்ட்டிபிகேட்டிலும் வித்தியாசம் காட்டியிருக்கிறது.

பொதுவாய் லோயர்கிரேடு ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஹையர் கிரேடாக உயர்த்திக்கொள்ள 1934-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடக்கிற பரீக்ஷைக்கு ஆஜராக உத்திரவு கிடைத்திருக்கிறது.

ஏற்கனவே முன்னாடியே ஹையர் கிரேடும் லோயர் கிரேடும் ஏகோபித்து பாஸ் செய்யப்பட்டவர்கள் பின் வருமாறு:—

1929-ம் வருஷம் பிப்பரவரி மாதம் 20-ந் தேதியில் ஆனந்தபோதினி வாரப் பத்திரிகையில் வெளியிட்டுள்ள Mr. M. P. சந்திரப் பிரகாசம் என்ற நண்பர் ஒருவர் ஆரம்ப ஆசிரியரும் எதிர்காலமும் என்ற தலையங்கத்தின் கீழ் வெளியிட்டபடி 1909-ம் வருஷம் முதல் 1914-ம் வருஷம் வரையில் லோயர் கிரேடு மாணவர்களின் பயிற்சி காலத்தை உயர்த்தியும் ஹையர் கிரேடு மாணவர்களின் பயிற்சி காலத்தைக் குறைத்தும் பாடங்களிலும் பரீக்ஷையிலும் சர்ட்டிபிகேட்டிலும் வித்தியாசமின்றி யிருக்க சமத்துவ யோக்கியதா பத்திரம் (சர்ட்டிபிகேட்) பெற்ற 1909ம் வருஷம் முதல் 1914ம் வருஷம் வரையில் எலிமெண்டரி கிரேடு என்று சர்ட்டிபிகேட் அடைந்த ஆசிரியர்களின் சர்ட்டிபிகேட்டுகளை ஹையர் கிரேடாக உயர்த்திக்கொடுக்க வேண்டுமாய் கனம் வித்தியா இலாகா அதிகாரிகளை வேண்டிக் கொள்ளப்படுகிறது.

கவிப்பித்தர்கள் இருவர்

(சிதம்பரம்-போன். குமாரவேற் பிள்ளை.)

"வெறி வெவ்விதாறு" (பைத்தியம் பலவிதம்) என்பதற்கிணங்க, பித்தர்கள் உலகத்தில் பலவிதப் பட்டோராவர். பணப்பித்து மணைப்பித்து நிலப்பித்து குலப்பித்து பொடிப்பித்து குடிப்பித்து என்பன பைத்திய வகைகளில் சிலவாகும். இவ்விதப் பித்தும் பிடித்தவர்கள் இக்காலத்தில் பல்லோராவர் என்பது சொல்லாமலே விளங்கும்; முற்காலத்திலும் பலவிருந்ததும் இயல்பே.

தற்காலத்திலும் முற்காலத்திலுமுள்ள இப் பித்தர்களல்லாமல் வேறொரு சாதிப் பித்தர்கள் முற்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்தார்கள். மருந்துக்கு ஒரு கால் உரைத்துக்கொள்ளத் தேடினாலும், அவர்கள் இப்பொழுது கிடைக்கவே மாட்டார்கள் ஆதலால், அன்னப்பறவை அசுணப்பறவை என்பன போன்று, இக்காலத்தில் கிடையாது ஒழிந்தவர்கள் கவிப் பித்தர்கள் என்பவர்களாவர். அவர்களுள் இருவர் சரிதத்தைக் கீழே கூறுவோம். இவைகள் வாசகர்களாகிய உங்களையும் பித்தர்களாக்காதிருக்கும் வண்ணம் பராசக்தியை வணங்குகின்றேன்.

நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை.

பல நூற்றாண்டுகட்கு முன்னே, பல்லவ ராஜ்யத்தை நந்தித் தொண்டைமான் என்னும் ஓர் அரசன் ஆண்டுவந்தான். இவன் தந்தைக்கு இவன், வைப்பாட்டி வயிற்றிற் பிறந்தோன் என்று கூறுவர். இவனுடைய சூழ்ச்சித்திறத்தையும், கல்விப் பெருக்கையும், அஞ்சா நெஞ்சத்தையும், மன்னுயிரெல்லாம் தன்னுயிர்போலக் கருதும் குணத்தையும் கண்ட இவன் தந்தை, தனது பட்டத்துத் தேவியின் புதல்வன் இருக்கவும், இவனுக்கே ராஜ்யத்தைத் தந்து பட்டாபிஷேகம் செய்தான். இவன் இராசதந்திரநெறி தவறாமலும் "வாராது போலவந்த மாமணியே" எனக் குடிகள் போற்றும் வண்ணமும் அரசியல் நடாத்தினான்.

இளமையிலேயே இவனைக் கவிப் பைத்தியம் பிடித்துக்கொண்டது. வைப்பாட்டி மகனாயிருக்கும் பொழுதே அரும்பிய இப்பித்து, வையங் காவலனாகியபோது அலராது வாளா இருக்குமா? ஓர் பாட்டுக்கு ஓராயிரம்; ஓர் பத்துக் கவிகளுக்கு ஒன்பதினாயிரம்; ஓர் நூறு செய்யுட்களால் ஆக்கப்பட்ட பிரபந்தமொன்றுக்கு நூறாயிரம்; இவ்வண்ணமாகப் புலவர் பெருமக்களுக்கு அள்ளிச் சொரியலாயினான். வாடி வதங்கி நின்ற புலவர்களும், அறுசுவை உண்டி அனுதினமும் தாங்களுண்பதுடன் நில்லாது, நந்தி வள்ளல் செவிக்

குணவாக, நல்ல தீங்கனிச் செய்யுட்களை மீட்டும், மீட்டும் செய்து அரங்கேற்றிப் பரிசு பெறலாயினர்.

இவ்வரசனுக்கு ஓர் சகோதரனிருந்தான். அவனே பட்டத்துத் தேவியின் புதல்வன். அவன் ஓர் மகா கவி. "யான் பட்டத்துக் குரியவன் சாதாரண ஜனங்களில் ஒருவர் போலிருக்க, வைப்பாட்டி மகனா அரசாள்வது? இவனைத் தொலைத்துவிட்டு, யானே அரசனாகின்றேன்" என்னும் எண்ணம் உடையவனாய், இவ் வரசிளந் தோன்றல், தன் தமையனாகிய நந்தியைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்துவந்தான். இவன் செய்த சூழ்ச்சிகள் எல்லாம் நந்தி மன்னன் முன் சூரியன்முன் பனி யெனச் சென்றன.

செய்த சூழ்ச்சிகள் பலவும் விழலானதைக் கண்ட பட்டத்துத் தேவி மகன், இறுதியாகத் தன் கவிதா சக்தியினாலேயே தன் தமையனுயிரைக் கவர எண்ணியவனாய், "நந்திக் கலம்பகம்" என்னும் ஓர் நூலைப் பாடினான். அந்நூலை அரசன் கேட்க அரங்கேற்றினால், அரசன் உயிர் துறப்பது நிச்சயம். நூல் பாடி முடிந்ததும், தன் நூலை அரசன் முன்னிலையில் அரங்கேற்றுவதற்காக, அரச சபைக்குச் சென்றான். இங்ஙனம் இவன் வந்திருந்ததை அறிந்த விவேகசாலியான மந்திரி இவனுடைய நூலை வாசித்துப் பார்த்துவிட்டு, நூலையும் பறிமுதல் செய்து, ஆளையும் சபையை விட்டு வெளியேற்றினது மல்லாமல், "நந்திக் கலம்பகம்" என்னும் நூலை யார் வைத்திருக்கிறார்களோ, அல்லது ஓதுகின்றார்களோ, அவர்களெல்லாம் சிறைக்கனுப்பப்படுவார்கள்" என்று பறையும் அறைவித்தான்.

இந் நிகழ்ச்சியை அரசன் அறியான். அவன் அறிவானேல் தன்னுயிரே போகினும் நூல் கேட்டே தீர்வன். அரசன் இத்தன்மையன் என அறிந்தே மறைத்தனன் மந்திரி.

ஓர் நாள் நள்ளிரவு. அரசிளங் குமாரனின் காமக்கிழத்தி ஒருத்தி தன் தலைவனைக் காணாதவளாய் மிகவும் துன்பத்துடன் தெருப்பக்கத்துள்ள சாளரத்தண்டை வந்து அதன்மீது சாய்ந்தவண்ணம் வழிபார்த்து நின்றாள். நின்றவள் அப்படியே உறக்கம் எய்தினள். இவள் இங்ஙனம் நின்றுகொண்டிருந்ததை அத்தெருவழியே நகர்காவலன் கண்டு காரணம் என்னென அறிவதற்காக அச்சுவரின்கீழ் மறைந்து நின்றனன்.

சற்று நேரத்தின் பின்னர் அரசிளந் தோன்றல் வந்தான். வந்தவன் தன் இன்பவூற்றுத் தன்னை நாடி சாளரத்தை யடைந்து பார்த்துக்கொண்டு நித்திரை செய்கின்றது என எண்ணிப் பேரானந்தம் மிக்கவனாய் அங்கேயிருந்த சந்தனக் குழம்பை வாரி அவள்மீது எறிந்தான். உடனே அவள் திடுக்குற்றவளாய், "யாரப்பா இது செய்தது" என, அரசகுமாரன், "செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சிதச்—சந்தனமென்றாரோ தடவினார்" என்று நந்திக் கலம்பகத்திலுள்ள ஓர் வெண்பாவின் முதலிரண்டடிகளையும் கூறினான். உடனே சுவர் மறைவிலிருந்த நகர் காவலன் அவனைப் பிடித்து, மறுநாள் அரசனிடம் கொண்டுபோய் ஒப்புவித்து, நிகழ்ந்தவை கூறினான். பாட்டைக் கேட்ட அரசன் மற்ற அடிகளையும் கூறும் வண்ணம் உத்தரவு செய்தான். "பைந்தமிழை—ஆராய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல்—வேகின்ற நெஞ்சே விளைந்து" எனத் தனிச் சொல்லையும் இறுதியடிகளையும் கூறினன் அரசிளம் புலவன்.

நீர் வழிச் சாய்ந்த புல்லென அரசன், கவியின் சுவைவழிச் சாய்ந்த மனத்தனாயினன். "இன்ன நாளில் உன்னுடைய நூலைக் கொண்டுவந்து என் முன்னிலையில் அரங்கேற்றுக" என அரசன் கூற, சிதை அடுக்கி அதன்மேலிருந்து கேட்க முடியுமானால்தான், தனது நூலைத் தான் அரங்கேற்ற முடியும் என அரசினம் புலவன் பதிலுரைத்தான். அவ்வண்ணமே செய்வதற்கு அருந்தமிழ்த் தாயின் அருமருந்தன்ன புதல்வனாகிய நந்தி பெருமான், "அப்படியே செய்கிறேன்" என்றான்.

குறித்த தினமும் வந்தது. புலவர் பல்லோர் அரச சபையில் குழுமினர். நூலும் வாசித்து அரங்கேற்றத் தொடங்கியாயிற்று. எல்லாப் பாட்டுகளும் கேட்ட பின்னர் இறுதியாக உள்ள செய்யுளும் பாடி முடிய அரசனும் உயிர்துறந்தான். இது யாம் கூறும் பித்தர்கள் இருவருள் ஒருவர் வரலாறு.

2

ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருமானைப் பற்றிக் கேள்விப்படாத தமிழரே இலர் என்று கூறலாம். இவ்வொட்டக் கூத்தர் வீட்டுக்கு ஓர் நாள் ஓர் சிவனடியார் வந்தார். வரும்பொழுது சுவை மிகுந்த தேவாரமொன்றைப் பண்ணோடும் இசைத்துக்கொண்டுவந்தார். அப்பொழுது புலவர் தலைவனான ஒட்டக்கூத்தர் சிவனடியாரை நோக்கி, "அடியாரே! இத்தேவாரத்துக்கு உரை சொல்லுவீரா? இயலுமேல் சொல்லுவீராக" என்றார். உடனே சிவனடியார்க்கு அளவின் மிஞ்சிய கோபம் வந்துவிட்டது. ஒட்டக்கூத்தரை நோக்கிக் கூறுகின்றார். "ஏ! ஒட்டக்கூத்தரே! உம்மைப் பெரும் புலவனென அரசரும் மற்றுமுன்னவர்களும் மதித்ததற்காக இவ்வளவு தலை தடுமாற்றமா? தேவாரப் பாட்டுக்களுக்கு உரை கூறவல்லவர்களும் இவ்வுலகத்தில் உளரோ? புலவர்களுக்கெல்லாம் புலவன் எனக் கூறப்படும் ஒருவராலும் கூட கூறமுடியுமா? ஏன்? மிகைபடக் கூறும் நீர் தானும் கூறுவீரா?" என்றார்.

"இராஜாதி ராஜாக்களும் புலவர் திலகங்களும் போற்றிப் பணிந்து புகழும் என்னை, நாள்தோறும் தெருத் தெருவாய்த் திரிந்து இரந்துண்ணும் இவ்வாண்டி இகழ்வதா" என்று கர்ச்சித்துக் கொண்டு எழுந்து, சிவனடியாரை ஓர் அறை அறைந்தார் ஒட்டக்கூத்தர்.

சிவனடியார் "அந்தோ!" என அலறிக்கொண்டு வீழ்ந்து உயிர் துறந்தார். சிவனடியார் திருக்கூட்டத்திற்கு இச்செய்தி எட்டியது. ஆயிரக்கணக்கான சிவனடியார்கள் கடல்போன்று பரந்து வந்து, "ஒட்டக்கூத்தன் எங்கே? எங்கே!" எனத் தேடியலைவாராயினர்; அரசனுக்கும் அறிவித்தனர்.

இவைகளைக் கண்ட புலவர் கள்ளவழியாக அரசனிடம் சென்று நிகழ்ந்தவை கூறினர். அரசன் "ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" என்று கூறி அந்தப்புரத்தில் மறைந்திருக்கச் செய்தான்.

சிவனடியார்கள் தேடாத இடமெல்லாம் தேடியும் காணாராய், கடைசியாய் அரண்மனையிலேயே யிருக்கின்றான் புலவன் என அறிந்து, அரண்மனையைச்சென்று வளைந்துகொண்டு, "ஒட்டக்கூத்தனை உடனே தரல்வேண்டும்" என அரசனுக்கு ஆளனுப்பினர்.

அரசன் செய்வதின்னது என்று அறியானாய்த் திகைத்தான். "செய்த குற்றத்திற்காக கூத்தரை ஒப்புவிக்கவேண்டியதே நீதி. தேன் போலவும்

அமிழ்தம் போலவும் தித்தித்தூம் செழுந்தமிழ்ப்பாக்களைப் பாடி என்னை இகலோகத்திலேயே பேரின்ப வீட்டில் இருக்கச் செய்யும் கவிஞனை இழந்து யான் என் செய்வது?" என்பனவாக யோசித்தான்.

தனது குமாரனாகிய இளவரசனைக் கூப்பிட்டான். "சம்பவம் இப்படித் தர்மசங்கடமாய் வந்திருக்கின்றது. என் அருமைக் குமாரனே! உன்னையே புலவருக்குப் பதிலாக, சிவனடியார்கள் வசம் ஒப்புவிக்க எண்ணுகின்றேன். அதற்கு உடம்பட்டு நம் குலப்பெருமையைக் காப்பாற்றுவாயாக" என்றான் வேந்தன். இளவரசன் மிகவும் சந்தோஷமுடையவனாய், "அதற்கு ஒருவிதமான தடையும் கிடையாது" எனக் கூறினன்.

அரசன் சிவனடியார்களை அழைத்து, "அடியார்களே! புலவனை ஓர் பெட்டியில் வைத்தே உங்களிடம் ஒப்படைப்பேன். நீங்கள் அவரைப் பொழுது பட்ட பின்னரே அவரைப் பாராது கொலை செய்தல் வேண்டும். அதற்குச் சம்மதமுண்டேல் இப்பொழுதே கூறுங்கள்" என்றான். அடியார்கள், "ஆம்" என்றனர்.

இருள் பரந்த பின்னர் புலவர் வைக்கப்பட்ட பெட்டியைச் சிவனடியார்களிடம் ஈந்தனன். சிவனடியார்கள் பெட்டியைக்கொண்டு மயானத்துக்குச் சென்று புலவரை வெட்டுவதற்கு ஆயத்தம் செய்தனர். சில சிவனடியார்கள், "அப்படிச் செய்யக்கூடாது" என மறிந்து, "அவர் புலவர்தானா என்பதைக் கூர்ந்து பார்த்தல் வேண்டும்" என்றார். மற்றவர்களும் ஒத்துக்கொண்டு அவ்வண்ணம் செய்தபோது, யாவரும் திடுக்குற்றனர்; "அரசிளங்குமரன்! அரசிளங்குமரன்!" என ஆர்ப்பரித்தனர். அப்பொழுது அரசிளந் தோன்றல் அவர்களை நோக்கி, "அடியார்களே! அஞ்சாது என்னைக் கொல்லுங்கள். யான் மனம் ஒத்தே வந்துளேன்" என்றான். "அப்படிச் செய்ய முடியாது" என்று கூறி, அரசகுமாரனை அழைத்துக்கொண்டு பின்னரும் அரண்மனை அடைந்தனர் அடியார்கள்.

அரசன் செய்த வேலைக்காக அரசனைக் காய்ந்து பேசியது மன்றி, "புலவனை இன்னே தரல்வேண்டும்" எனவும் வற்புறுத்தினர்.

இந்நிகழ்ச்சிகளைக்கண்ட ஒட்டக்கூத்தர் தானாகவே வெளிவந்து தான் அடியார்கள் சித்தப்படி செய்வதற்கு அவர்களுடனே செல்வதாகக் கூறினர்; அரசன் மறுத்தனன். புலவர் பிடிவாதமாகப் போவதாகக் கூறியமையாலும், அடியார்கள் நெருக்கியமையாலும், தான் செய்வதும் ஒன்று மின்மையாலும் புலவரை அரிதிற் பிரிந்தனன் அரசன்.

பின்னர் அடியார்கள் கூத்தரை அழைத்துக்கொண்டு போயினர். கூத்தர் அடியார் கூட்டத்தினின்றும் தப்பி யோடிக், காளிகோவில் ஒன்றுள் ஒளித்திருந்து, ஓர் இரவிலேயே "தக்கயாகப் பரணி" என்னும் நூலை இயற்றி, அடியார்கட்குக் காட்டி, அவர்களால் விடுவிக்கப்பட்டது மன்றிச், சன்மானிக்கவும் பட்டனர். இதுவே யாம் கூறிய பித்தர்களுள் இரண்டாவது பித்தர் வரலாறு. பெற்ற பிள்ளையைக் கொலைக்குக் கொடுக்கக்கூடிய கவிப்பித்தர் இவரன்றி வேறு முளரோ? இன்னும் பித்தர் பலருளர். அவர் சரிதங்களையும் சந்தர்ப்பம் வாய்க்கும் தோறும் கூறுவோம்.

சைக்கிளில் ஏறிப் போனவன், வழியில் முனிசிபல் உத்தியோகஸ்தரைக் கண்டதும் கீழே இறங்கி, சைக்கிளைத் தோளில் தூக்கி நடந்தான்.

உத்தியோகஸ்தர்:—"சைக்கிளுக்குப் பாஸ் எங்கே?"

வாலிபன்:—"நான் சைக்கிளை ஓட்டவில்லை. சைக்கிள் என்னை ஓட்டுகிறது. அதனிடமே பாஸ் கேளுங்கள்".

***

பிள்ளை:—"அம்மா! இன்று பிள்ளைகளெல்லாரும் சிரிக்கும் போது நான் அழுதேன்"

தாய்:—அதென்னம்மா நீ மாத்திரம்?"

பிள்ளை:—"அம்மா! நான் பெஞ்சியிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டு அழுதுகொண்டிருந்தேன். பிள்ளைகளெல்லோரும் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்கள்".

***

"உனக்கிருக்கிற ஊனத்தைத் தெரிந்திருந்தும், நான் உன்னைக் கலியாணம் செய்துகொண்டேன் அல்லவா?"

"என்னை எங்கள் அப்பா உங்களுக்குக் கொண்டு வந்து தள்ளியிராவிட்டால் உங்களுக்குக் கலியாணமே நடந்திருக்காதே!"



விதவா விவாகத்தை ஆதரிக்கும் ஒருவரும் சகுனப் பிரியர் ஒருவரும் இருவருமாக ஒரு காரியமாகப் புறப்பட்டுப் போனார்கள்.

சகுனப் பிரியர்:—"எத்தனை விதவைகள்! சகுனம் பார்த்துக் கட்டாதுபோலிருக்கே!"

விதவா விவாகத்தை ஆதரிப்பவர்:—பார்த்தீர்களா! இதற்குத்தான். விதவா விவாகம் வேண்டுமென்பது. இந்த விதவை திரும்பக் கலியாணம் செய்திருந்தால் நமக்கு நல்ல சகுனமாயிருக்குமன்றோ?

***



உபாத்தியாயர்-கிருஷ்ணா! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும் என்பதற்கு ஒரு உதாரணம் கூறு.

கிருஷ்ணன்:— "நீங்கள் இன்று பள்ளிக்கூடத்திற்கு வரமாட்டீர்களென்று நினைத்தேன். ஆனால் நீங்கள் வந்திருக்கிறீர்களல்லவா"

***

சிறுவன்:—தாத்தா! பல்லு போனவனுக்கு சொல்லு பலிக்காதென்கிறார்களே, அது நிசம்தானே?

கிழவர்:—அப்படிதான் சொல்லுகிறார்கள்.

சிறுவன்:—ஆனால் நம் காந்தி தாத்தாவுக்கு பற்கள் போய்விட்டிருக்கின்றனவே. அவர் சொல்மட்டும் உலகமெலாம் பலிக்கிறதே.

***

ராமு:—அடே கிச்சு, இனிமேல் எனக்கு ஒன்றுமே குறைச்சலில்லேடா.

கிச்சு:—டே, நேக்குச் சொல்லக்கூடாதாடா என்னடாது.

ராமு:—எங்க பாட்டி 500 ரூபாய்க்குச் சூட் போட்டிருக்காடா, இனி நேக்கென்னடா.

கிச்சு:-அப்படினுக்கே அவளுக்கு எங்கடா உத்தியோகம்? ரொம்ப அழகாயிருப்பனே.



காற்றைப் பற்றிச் சிறுவர்களுக்குக் கொஞ்ச நேரம் சொல்லிக் கொடுத்துவிட்டு,

உபாத்தியாயர்:— "ராமு இப்போது நம்மைச் சுற்றிலும் என்ன இருக்கிறது?"

ராமு:—"நம்மைச் சுற்றி நாலு புறமும் அவர்கள் இருக்கின்றன."

உபாத்தியர்யர்:— "அது தான் போகட்டும். அடே கிட்டு நான் உன் கிட்டே வந்து என் கையைக் கொண்டு வீசினால் என்ன படுகிறது?"

கிட்டு:—"பலமான அடி விழும் சார்."

***



ரயில்வே கார்ட்:—"நீ ஏன் சங்கிலியைப் பிடித்து இழுத்தாய். உனக்கு என்ன அபாயம் நேர்ந்தது?"

பிச்சைக்காரன்:—"எனக்கு ஒரு அபாயமுமில்லை. சாப்பாட்டிற்கு வழியில்லை என்றுதான்"

ரயில்வே கார்ட்:—"சங்கிலி சாப்பாடு போடுமா?"

பிச்சைக்காரன்:—"சங்கிலியைக் காரணமில்லாம விழுத்தால் ரூ 50 அபராதம் விதிப்பீர்கள். என்னிடமோ அபராதம் கொடுக்க யாதொன்றுங் கிடையாது. அப்படியானால் என்னை ஜெயிலில் வைத்து சாப்பாடு போடுவீர்களென்றுதான்."

***

தாயார்:—அடேய் கோபாலு; நீ ஏன் படிக்கிறதில்லை?

கோபாலு:—நான் புஸ்தகத்தைக் கரைத்துக் குடித்துவிட்டேன் அம்மா.

***

தகப்பனார்:—கண்ணு புது கணக்கு வாத்தியார் எப்படி யிருக்கிறார்.

கண்ணன்:—அப்பா அவருக்கு மறதி ரொம்ப ஜாஸ்தியா யிருக்கிறது. நேற்றைய தினம் ஐந்தும் இரண்டும் ஏழு என்று சொல்லிக் கொடுத்தார். இன்றைக்கு மூன்றும் நான்கும் ஏழு என்கிறார்.

வைஸ்ராய் நீர்க்குழாய்களைத் திறக்கும் பொருட்டு, ஒரு பொன் திறவுகோலும், இந்தியா சட்டசபையின் மண்டபத்துக்கு அஸ்திவாரக் கல் போடும் பொருட்டு பொன் கரண்டி யொன்றும் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

* * *

ராபர்ட்ஸ் ஹைட்ஸ் என்னுமிடத்தில் உலகத்திலேயே பெரியதோர் ரேடியோ ஸ்டேஷன் கட்டப்பட்டிருக்கிறதாம்.

* * *

ஹிருதய நாடிகள் ஒரு ஆண்டுவரை அடிப்பதால் மனிதனின் உடலில் உள்ள இரத்தம் சுமார் 61320 மைல் தூரம் வரை செல்லுகிறதாம்,

* * *

ஐரோப்பாவில் அட்டைப் பூச்சிகளைக்கொண்டு, பல வியாதிகளைக் குணமாக்குகிறார்களாம். ஆனால், கீழ்நாட்டு வைத்திய சாஸ்திரிகளோ அட்டைப் பூச்சிகளைவிட எறும்புகளே மிகவும் பயனுள்ளதெனக் கூறுகிறார்கள்.

* * *

வெட்டுக்கிளிகளுக்கு முன்னங்கால்களில்தான் காதுகள் இருக்கிறதென்று உயிர் நூல் புலவர்கள் கூறுகின்றனர்.

* * *

ஆப்பிரிக்காவில் ஒருவித எறும்புகள் மழை பெய்யும்போது, இலைகளையும், மலர்களையும் குடைகளாகப் பிடித்துக்கொள்வதோடு, சமயம் நேர்ந்தால் அலைகளைப் படகுகளாகவும் உபயோகித்துக் கொள்கின்றனவாம்.

* * *

போர்த்துகீய ஆடவரொருவர் விவாகமான மறுநாள் காலையில் படுக்கை விட்டெழுந்ததும் பேச சக்தியற்றவராகி விட்டாராம். அவரைப் பரீக்ஷித்த டாக்டர்கள் காணத்தால் அவரது குரல் நரம்பு ஸ்தம்பித்து விட்டதெனக் கூறுகின்றனர்.

* * *

உலகிலுள்ள 180 கோடி மக்களுள் 108 மதப் பிரிவுகளும், 3065 வேறுபட்ட பாஷைகளும் இருக்கின்றனவாம்.

* * *

ஜெர்வி நகரில் புதிதாகச் சிறைச்சாலை யொன்று கட்டப்பட்டிருக்கிறது. அதன் சுவற்றில் வெப்பம் தாக்க வொட்டாதவாறு தடுக்கு முறையில் வர்ணம் பூசி யிருக்கின்றனர். சந்தடி யேற்பட்டு தொந்தரவு விளையாத வண்ணம் கண்ணாடிக் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அறையிலும் குளிப்பதற்கு வசதிகள் செய்யப்பட் டிருக்கின்றன.

* * *

ஐரோப்பாவில் லாஸ்ரஞ்சல்ஸ் என்னும் நகரில் வசிக்கும் விஞ்ஞானி யொருவர் எந்தெந்த இடத்தில் தங்க மிருக்கிறதென்று காண்பிக்கும் இயந்திரமொன்றைச் செய்து வருகிறார்.

கழுத்தில் மூக்கு

பாடுவா என்னுமிடத்தில மூன்று வயது சிறுவன் இப்தீரியா என்னும் ஒருவித நோயால் பீடிக்கப்பட்டு மூச்சடைத்து இறந்துபோனான். மரணப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்துவிட்டு உடம்பைக் கொளுத்தப் போகுஞ் சமயத்தில், டாக்டர் ஒருவர், அவ்வுடலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று, கழுத்தில் துவாரமொன்றை யுண்டாக்கி மூச்சுப் போக இடங்கொடுத்தார். 20 நிமிஷமான பிறகு, மூக்கு வழியாகச் சுவாசம் போகும்படி செய்யப்பட்டது. உடனே இறந்துபோனதாகக் கருதப்பட்ட அச்சிறுவன் பிழைத்து எழுந்தான்.

***

பந்தயத்திற்கா விவாகம்?

காட்சாவிலுள்ள விக்டர் பிராங்க் என்பவர் தாம் விவாகம் செய்து கொண்ட பின்னர், 15-நிமிஷம் கழித்து மணமகளைப் பார்த்து, ஒரு பந்தயத்திற்காகவே, விவாகஞ் செய்துகொண்டதாகவும், உண்மையாக, விவாகஞ் செய்துகொள்ள விருப்பமில்லை யென்றும் கூறினாராம். எனவே, ஸ்ரீமதி. பிராங்க் இப்போது விவாக ரத்து செய்து கொண்டாள். தான் விவாக ரத்து செய்து கொண்டதற்குக் காரணம் 1931௵ ஆகஸ்டு௴ விவாகம் நடந்த தேதி வரையிலும் கணவனைப் பார்த்ததேயில்லை யென்பதே யாகும் என்று கூறினாள்.

***

ஆயிரம் விதமாக விஷப்புகை

ஜீக்கோஸலோ வோகியன் பாராளும் மன்றத்தில் சமுதாயக் குடியாட்சித் தலைவரொருவர் ஜர்மெனி தேசத்திலுள்ள ரசாயனசாலைகளில் சுமார் ஆயிரம் விதமான பல்வேறு விஷப்புகைகள் செய்யப்படுகின்றன என்று கூறினார்.

***

ஒட்டத்தில் நிபுணரான சீக்கியர்

24-வயதுள்ள சரவணசிங் என்னும் பெயருடைய சீக்கியர் ஏழுமாதங்களாக ஒட்டப் பந்தயத்திற்குப் பயிற்சி பெற்று வந்தார். முதன் முதலாக அவர் ஒட்டகத்தின் மீது சவாரி சென்ற ஒருவரோடு பந்தயம் போட்டு 21 மணி நேரத்தில் 122 மைல் தூரம் ஓடி வெற்றி பெற்றார். அதனால் அவ்வொட்டகம் ஒரு வாரத்துக்கெல்லாம் இறந்து விட்டது. பிறகு அவர் மற்றொரு பந்தயத்தில் 12 மணி நேரத்தில் 80 மைல் ஓடி வென்றார். பார்னாலா என்னுமிடத்தில் நடந்த கால் நடைக் காட்சிக்கு அவர் சென்றிருந்த போது, அங்கு ஒரு பந்தயத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இடையே 46 நிமிஷம் 15 விநாடி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டதுபோக காலை 5-30 மணிக்கு அவர் ஓடத் தொடங்கி மாலை 5-37 மணி வரை ஓடினார். கடைசியில் கணக்கெடுத்ததில், அவர் 75 மைல் தூரம் ஓடியதாகத் தெரிகிறது.

ஆசிரியர் குறிப்புக்கள்.

வைசிராய்—காந்தி விஜயம்

வைசிராய் லார்டு வில்லிங்டன் தம்பதிகள் சென்ற டிசம்பர் ௴ 14-ம்தேதி சென்னைக்கு விஜயம் செய்தார்கள். பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நகரப் பிரமுகர்களும் வைஸிராய் தம்பதிகளை வரவேற்று உபசரித்தனர். லார்டு வில்லிங்டன் சென்னைக்குப் புதியவர் அல்லர். முன்னர் ஐந்தாண்டுகள் இங்கே கவர்னரா யிருந்திருக்கிறார். எனவே வைசிராய் தம்பதிகட்கு விசேஷ உபசாரங்களும் விருந்துகளும் நடைபெற்றன. சென்னை நகர சபையும் வேறு சில பொது ஸ்தாபனங்களும் உபசாரப் பத்திரங்களை வாசித்தளித்தன. தங்கள் குறைகளை வரவேற்று—உபசாரப் பத்திரங்களில் தெரிவித்துக்கொண்ட ஸ்தாபனங்கட்கெல்லாம் வாக்குச் சாதுரியத்தில் கைதேர்ந்த வைஸிராய் தமது வழக்கமான பதிலையே சொன்னார். முக்கிய விஷயங்களைப் பற்றி மழுப்பிவிட்டார் என்பதை நாம் விரிக்கவும் வேண்டுமோ? வர்த்தக சங்க விருந்தில் அரசியல் சம்பந்தமாக அவர் பேசியபொழுது, "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் குடியேற்ற நாடுகட்குச் சமமான அந்தஸ்தை இந்தியா அடைவதற்கு உதவி செய்வதே எனது நோக்கமா யிருந்து வருகிறது" என்று குறிப்பிட்டார். இவர் முன்னர் ஒரு தடவை இம்மாதிரி கூறிவிட்டதற்காக இங்கிலாந்தில் சர்ச்சில் கோஷ்டியினர் கூச்சல் கிளப்பினர். ஆனால் வைசிராய் மீண்டும் அதையே கூறியிருக்கிறார். மேலோட்டமாகக் கவனிப்பவர்கட்கு அது தைரியம் நிறைந்ததாகத் தோன்றலாம். ஆனால் நாம் அங்ஙனம் கருதவில்லை. பிரிட்டிஷ் முதன் மந்திரி ராம்ஸே மாக்டனால்டும், இந்தியா மந்திரி ஸர். சாமுயல் ஹோருங்கூட இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வழங்குவதே தங்கள் நோக்கம் என்று கூறிவருகிறார்கள். எந்தக் காலத்தில் எந்த வடிவத்தில் இவர்கள் கூறும் சுயராஜ்யம் சித்தியாகும் என்பது யாருக்கு என்ன தெரியும்? வைஸிராய் வில்லிங்டன் பிரபுவின் "குடியேற்ற நாட்டு அந்தஸ்து பெற உதவி புரியும்" பேச்சும் ஷையார்களுடைய பேச்சுக்கட்கு இளைத்து விடும் என்று நாம் நம்பவில்லை. வைசிராய் தம்பதிகள் சென்னைக்கு விஜயம் செய்தார்கள்—பழைய நண்பர்களோடு உறவாடினார்கள்—விருந்துக் களியாட்டங்களில் மூழ்கினார்கள்—சென்றார்கள் என்பதைத் தவிர இவர்களின் வருகையில் வேறு அநுகூலம் இருப்பதாக எமக்கு விளங்கவில்லை.

வைஸிராய் தம்பதிகள் சென்னையை விட்டு அகன்றவுடன் உலகம் போற்றும் தியாக வள்ளல்—மகாத்மாகாந்தி விஜயம் செய்தார். காந்தியடிகள் இங்கே தங்கியிருந்த மூன்று நாட்களும் ஒரு பெரும் திருவிழா நாட்களாகவே காட்சி அளித்தன. சநாதநிகள் ஒரு பக்கம்—சமய எதிர்ப்பாளர் ஒரு பக்கம்—அரசாங்கத்தார் ஒரு பக்கம் "காந்தியைப் பகிஷ்கரிக்க வேண்டும்" என்று செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை. இவர்களுடைய பகிஷ்கார பிரசாரம் காந்தியடிகளின் நல் வரவேற்புக்கு அளவு கடந்த ஆக்கம் அளித்தது என்றே கூறவேண்டும். காந்தியடிகளின் முதல் நாள் வரவேற்பிலும் கடற்கரைக் கூட்டத்திலும் லக்ஷக் கணக்கான மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இப்பொழுது காந்தியடிகள் தீண்டாமை என்னும் பேயை ஓட்டித் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்

றம் திருப்பணியில் முனைந்து நிற்கிறார். அதற்காகத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்யவும் தயாரா யிருக்கிறார். காந்தியடிகள் இப்பொழுது மேற்கொண்டுள்ள அகில இந்தியச் சுற்றுப் பிரயாணம் மிகுந்த வெற்றியுடன் முடிவு பெறும் என்றே நம்புகின்றோம். காந்தியடிகள் ஜனவரி மாதம் பிற்பகுதியில் தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் தொடங்குவார். அப்பொழுது தமிழ் மக்கள் எல்லாரும் காந்தியடிகளின் திருவுள்ளக் கருத்து நிறைவேறுவதற்குத் தகுந்த ஆதரவு நல்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

***

அகில இந்திய சமூக சீர்திருத்த மகாநாடு

சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் ஸ்ரீமான் ஜி. கே. தேவதார் தலைமையில் அகில இந்திய சமூக சீர்திருத்த மகாநாடு டிசம்பர்மீ 29-ம் தேதியில் கூடியது. வரவேற்புக் கழகத் தலைவர் சி. வி. கிருஷ்ண ஸ்வாமி ஐயர். மகாநாட்டுத் தலைவரும் வரவேற்புக் கழகத் தலைவரும் நமது சமூகத்திலுள்ள பல சீர்கேடுகளை விரிவாக ஆராய்ந்து எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இந்த மகாநாடு நாற்பத்தாறு ஆண்டுகட்குமுன் முதன் முதலாகச் சென்னையில் கூட்டப்பட்டது. இடையில் சில ஆண்டுகள் இம் மகாநாடு கூட்டப்படவில்லை. அங்ஙனம் இம்மகாநாடு கூட்டப்படாமைக்குரிய காரணமாகச் சொல்லப்பட்டது மிக வேடிக்கையானது. இம்மகாநாடு மேற்கொண்ட சமூக சீர்திருத்த வேலைகள் அநேகமாய் வெற்றி பெற்றுவிட்டனவாம். ஆகையால் இம்மகாநாட்டுக்கு அவசியம் இல்லாமல் போய்விட்டதாம். ஆனால் இப்பொழுது மட்டும் என்ன அவசியம் வந்துவிட்டது என்று கேட்கின்றோம். கடல் யாத்திரைத் தடை, பாலிய விவாகம், பெண் கல்வி இன்மை, பிரௌடா விவாகத் தடை, விதவா விவாகத்தடை ஆகிய சமூக விஷயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதாம. இந்த முன்னேற்றம் இம் மகாநாடு ஆண்டுதோறும் நடைபெறுமல் நிறுத்தப்பட்டமைக்குக் காரணம் என்று ஒரு சிலரால் கூறப்பட்டது. கடல் யாத்திரைத் தடை நீங்கல், பாலிய விவாகம் ஒழித்தல், பிரௌடா விவாகம் செய்தல் போன்ற சீர்திருத்தங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு நன்மை உண்டாக்கி யிருக்கலாம். இந்திய மக்களின் சமூக சீர்திருத்தம் இம்மட்டில் அடங்கிவிட்டதா என்பதை எல்லோரும் யோசிக்கவேண்டும். தீண்டாமை என்னும் பேய் தலை விரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. 100-க்கு 90 மக்கட்கு எழுத்து வாசனை கிடையாது. சாதி சமய வேற்றுமைகள்—சண்டைகள் இன்னும் ஒழிந்தபாடில்லை. பொருளற்ற மூடப் பழக்கவழக்கங்கள் மக்கள் சமூகத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேற்கண்ட விஷயங்களில் இந்த "அகில இந்திய சமூக சீர்திருத்த மகாநாடு" கருத்தைச் செலுத்தவேண்டாமா என்று கேட்கின்றோம். பொறுப்பு வாய்ந்த இத்தகைய மகாநாடுகள் முக்கிய விஷயங்களில் அலக்ஷிய பாவத்துடன் இருப்பதினாலேயே நாட்டில் நாஸ்திகக் கூட்டம் தோன்றவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பது எமது அபிப்பிராயம். ஆகையால் இந்தியா முழுவதற்கும் அரசியலில் காங்கிரஸைப்போல் விளங்கும் இந்தத் தனிச் சமூக சீர்திருத்த மகாநாடு ஆண்டுதோறும் இடையறாது கூட்டப்பட்டுச் சமூக முன்னேற்றத்திற்குத் தொண்டாற்றவேண்டும் என்று விரும்புகின்றோம். சென்ற மாதம்

கூடிய மகாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அத் தீர்மானங்களெல்லாம் அமுலுக்குக் கொணரவேண்டிய முயற்சியையும் ஷை மகாநாட்டார் மேற்கொள்ளவேண்டும். இன்றேல் அவையெல்லாம் வெறும் காகிதத் தீர்மானங்கள் ஆகிவிடும் என்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

***

சர்வ கலாசாலைகளைப்பற்றி ஸர் சாப்ரு

இந்திய சர்வ கலாசாலைகளின் கல்விமுறை பயனற்றது என்ற அபிப்பிராயம் நாளுக்குநாள் வலிமையடைந்து வருகிறது. பட்டமளிப்பு விழாக்களில் சொற்பொழிவு நிகழ்த்தும் ஒவ்வொரு அறிஞரும் தற்காலக் கல்வி முறையில் உள்ள ஊழல்களையும் குறைபாடுகளையும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிக் கண்டித்து வருகிறார். என்பதில் ஐயம் இல்லை. சென்ற மாதம் 16-ம் தேதி அலகாபாத் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் மகாகனம் ஆர் தேஜ்பகதூர் சாப்ரு சொற்பொழிவு நிகழ்த்தினார். தற்காலச் சர்வ கலாசாலைகள் மேற்கொண்டுள்ள கல்வி முறையின போக்கை அழுத்தமாகக் கண்டித்தார். இந்திய சர்வகலாசாலைகள் புதிய துறைகளில் செயல்புரியவேண்டும் என்று வற்புறுத்தினார். "சாஸர் காலம் முதல் இன்றுவரையிலுமுள்ள எல்லா ஆசிரியர்களின் உயரிய நூல்களையும் படித்தவர்களாகவும், தத்துவ நூல்களைக் கரைகண்டவர்களாகவும், சட்ட நிபுணர்களாகவுமுள்ள பல பல பட்டதாரிகள் ஆண்டுதோறும் சர்வ கலாசாலைகளிலிருந்து வெளி வருவதாக வைத்துக்கொள்ளுவோம். இவர்களால் நாட்டுக்கு என்ன நன்மை? என்ற கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லியாகவேண்டும்" என்று சாப்ரு பட்டதாரிகளை நோக்கிக் கூறியிருக்கிறார். ஆம்! இக்கேள்விக்குப் பட்டதாரிகள் வரி செலுத்துவோருக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். வரி செலுத்துவோர் பணச் செலவில் வெறுங் கலைகளைக் கற்று நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன்படாத மேதாவிகளாய் விளங்குவதில் புண்ணியமா? புருஷார்த்தமா? என்று கேட்கின்றோம். காலத்திற் கேற்பச் சர்வகலாசாலை ஊழியத் துறைகளையும் மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தைச் சாப்ரு நன்கு வற்புறுத்தினார். நேராகச் சம்பாத்தியத்திற்கு ஏற்றதாயுள்ள தொழிற் கல்வியின் அவசியத்தைச் சர்வ கலாசாலைகள் உணரவேண்டியது அவசியம் என்று கூறினார். சர்க்காரும், சர்வ கலாசாலைகளும் சேர்ந்து வாலிபர்களுக்குத் தொழிற் கல்வியைப் போதிப்பதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். நிலங்களைச் சாகுபடி செய்ய வாலிபர்களைத் தூண்டவேண்டும். இவ்வாறு செய்வதற்குச் சர்வகலாசாலைக் கல்வி முறையையே திருத்தி அமைககவேண்டும் என்பது சாப்ருவின் கருத்து. "சர்வகலாசாலைப் படிப்புப் பயனுள்ளதா யிருக்க வேண்டுமானால், கல்லூரிப் படிப்பைத் தேடிச்செல்லும் மாணவர்களின் தொகையைக் குறைக்கவேண்டும். செக்கண்டரி பள்ளிக் கூடங்களும் கைத்தொழிற் கலாசாலைகளும் பெருகவேண்டும். இவற்றில் படித்துத் தேர்ச்சி பெறுபவர்களுக்கு அரசாங்கத்தாரே உத்தியோகங்களையும் தொழில்களையும் தேடிக்கொடுக்கவேண்டும்" என்று சாப்ரு சொல்லுவதை நாம் பெரிதும் போற்றுகின்றோம். இத்தகைய நன்னாளை நாம் ஆவலுடன் எதிர் பார்க்கின்றோம்.

வரி தள்ளுபடி !

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் விவசாயிகளின் நல் வாழ்வை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமது நாடு விவசாயநாடு. 100க்கு 75-பேர் விவசாயத்தையே ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது விவசாயிகளின் நிலைமை என்ன? அந்தோ பரிதாபம்! வறுமைப்பேய் அவர்களை வாட்டி வருகிறது. சரியான விளைவு இல்லை. விளைந்த பொருள்களுக்கும் விலை இல்லை. பெரும்பான்மையோர் கடனாளிகளாகவே காலங்கழித்து வருகின்றனர். நகை நட்டுகளையும் தட்டுமுட்டுச்சாமான்களையும் விற்று நிலவரி செலுத்தும் நிலைமையில் உயிர்தாங்கி வருகின்றனர். சென்னை அரசாங்கத்தார் சில ஜில்லாக்களில் விவசாயிகளின் துயரத்தைக் கண்டு, சென்ற ஆண்டில் ரயத்துவாரி நிலங்கட்கு விதித்திருந்த தீர்வையில் 100க்கு $12\frac{1}{2}$ விகிதம் வசூலிக்காமல் நிறுத்தி வைத்திருந்தார்கள். இன்றும் நிலைமை செழுமை அடையவில்லை. எனவே இவ்வாண்டில் அரசாங்கத்தார் அதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது ஒரு அளவுக்குத் திருப்தி தரக்கூடிய செய்தி என்பதில் ஐயம் இல்லை. இப்பொழுது ஏழை விவசாயிகள் படும் துயரங்களையும், விலைவாசிகளின் இறக்கத்தையும் நோக்கும்போது அரசாங்கத்தார் செய்துள்ள வரி வஜா மிகவும் அற்பமானதென்றே கருதவேண்டும். உண்டிக்கும் உடைக்கும் திண்டாடிக் கொண்டிருக்கும் விவசாயிகட்கு அரசாங்கத்தார், இந்நிலையில், போதிய உதவி செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள். எனவே இப்பொழுதுள்ள நிலத் தீர்வையில் சரி பகுதியேனும் குறைக்கப்பட்டால் ஏழை விவசாயிகட்கு ஒருவித ஆறுதலாயிருக்கும் என்று சென்னை அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

***

சைவர் மகாநாடு காட்டிய நல்வழி

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தெட்டாவது ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மகாநாடும் டிசம்பர்மீ 29, 30, 31-ம் தேதிகளில் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசியர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆசிரியர் நாட்டார் அவர்களைப்பற்றி நாம் தமிழ் மக்கட்கு அறிமுகம் செய்ய வேண்டியது அநாவசியம் என்றே கருதுகின்றோம். அவர்கள் பண்டைச் சங்க இலக்கிய இலக்கணங்களில் ஆராய்ச்சி முறையில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்கள். ஒப்பற்ற தமிழ்க் கடல் என்றே இவர்களை மதிக்க வேண்டும். தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்குதல் மாத்திரம் அன்றிச் சைவ சமய ஆராய்ச்சியிலும் பெரியார் நாட்டார் அவர்கள் தலைசிறந்து விளங்குகின்றார்கள். இவர்கள் பால் இயற்கையாக அமைந்துள்ள அன்பும் பரந்த நோக்கமும் பொன் மலருக்கு நறுமணம் பொருந்தியதுபோல் அணி செய்து நிற்கின்றன. உயர் திருவாளர் நாட்டார் அவர்கள் தம்முடைய முன்னுரையில் சைவ சமயப் பெருமையையும், அதன் பரந்த கொள்கைகளையும் ஆதாரத்துடன் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். சாதி சமய வேற்றுமை கூடாது என்றும், சைவ சமயத்தில் இத்தகைய வேற்றுமைகட்கு ஒரு சிறிதும் இடம் இல்லை என்றும், எல்லாருக்கும் திருக்

கோவில்களிற் சென்று வழிபடும் உரிமை உண்டு என்றும் சமய அறிவு சான்ற பண்டித நாட்டார் அவர்கள் வற்புறுத்தியதைச் சைவ நன் மக்கள் எல்லாரும் ஊன்றிச் சிந்திப்பார்களாக. சைவர் மகாநாடு சமய வளர்ச்சிக் குரிய பல அரிய தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கிறது. ஆனால் வீணில் உண்டு உறங்கிக் கிடக்கும் மடாதிபதிகளை மறந்து விட்டது பெரிதும் வருந்தத் தக்கதாகும். இம்மகாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானங்களில் தலை சிறந்து விளங்குவது தாழ்த்தப்பட்ட மக்கட்கு ஆலயப்பிரவேச உரிமை உண்டு என்று ஒப்புக் கொண்ட தீர்மானமாகும். இத்தீர்மானம் கற்றறிந்த சைவ சமய நல்லறிஞர்கள் கூடிச் செய்தது என்பது பெரிதும் குறிப்பிடத் தக்கதாகும். "அங்கே நடைபெற்ற சைவ மங்கையர் மகாநாடும் இத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி யிருக்கிறது. காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு எழுந்தருளும்போது சைவ மக்களின் முழு ஆதரவும் கிடைக்கும் என்றே நம்புகின்றோம். இதுகாறும் சைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்தில் முட்டுக்கட்டைபோடுகிறார்கள் என்ற ஒரு பழி இருந்தது. இப்பொழுது அப்பழியை நீக்கிக்கொள்ளத் துணிந்த சைவ அறிஞர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். இந்தச் சமயத்தில் வைஷ்ணவ சமயத்தைத் தழுவும் மக்கள் கடமை என்ன என்று கேட்கின்றோம். சைவர்களைப்போலவே வைஷ்ணவர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் திறத்தில் பரந்த நோக்கம் காட்டினால் தென்னாட்டில் தீண்டாமைப் பேய் ஓட்டம் பிடித்துவிடும் என்பதில் ஐயம் இல்லை.

***

தமிழ் நடிகர் மகாநாடு

சென்ற டிசம்பர் மாதம் 24-ம்தேதியில் நாடகமேடையைச் சீர்திருத்தி அமைக்கும் நோக்கத்துடன், முதலாவது தமிழ்மாகாண நடிகர் மகாநாடு சென்னையில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் தலைமை வகித்தவர் நாடகப் பேராசிரியர் ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியாரவர்கள் ஆவர். பிரபல நடிகரான ஸ்ரீமான் வேலு நாயர் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். தமிழ் இயல் இசை நாடகம் என்னும் மூன்று பிரிவுடையது. இக்காலத்தில் பண்டைத் தமிழ் நாடகங்கள் அறவே இறந்தொழிந்தன. வடமொழிப் புராணக் கதைகளும், ஒரு சில தமிழ்க்கதைகளும் இக்காலத்தில் மிகவும் ஒழுங்கீனமான முறையில் நாடகங்களாக நடிக்கப்படுகின்றன. இவைகளில் உண்மை நாடக இலக்கணங்கள் அணுவளவும் இல்லையென்றே கூறவேண்டும். மக்களின் சமூக வாழ்க்கையை மேன்மையுறச் செய்வதே நாடகக் கலையின் நோக்கமாகும். மேனாட்டு நாடகங்கள் இந்நோக்கத்தை நன் முறையில் நிறைவேற்றி வருகின்றன. வங்காளம் ஆந்திரம் முதலிய நாடுகளில் நாடகமேடைகள் பாராட்டத்தக்க முறையில் சீர்பெற்று விளங்குகின்றன. தமிழ்நாட்டில் புளித்துப்போன கதைகள் அநேக அசந்தர்ப்பங்களுடனும் ஆபாசங்களுடனும் நடிகர்களால் நடித்துக் காட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டு நாடகக் கலையில் ஒரு பெரும் புரட்சி உண்டாகிப் புத்துணர்வு ததும்பும் நாடகங்களும் நடிகர்களும் தோன்றவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். அதற்கு இம்மகாநாடு சிறந்த வழிகாட்டியாய் இருக்கவேண்டும் என்பதே எமது பேரவா. இம்மகாநாடு தனது நோக்கங்களைச் செயலில் காட்டும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(477-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே நான் "என்ன விஷயம்! எவ்விதத்தில் மர்மமென்கிறீர்கள்? விளங்கச் சொல்லுங்கள்" என்றேன்.

பாலாமணி;—நீங்கள் கூறியபடியே நாங்கள் நேற்றைய தினந்தான் இங்கிருந்து புறப்பட்டு இங்கு வந்தோம். நானும் கோகிலமும் இங்கு வந்திருக்கிறது யாருக்குந் தெரியாது. என்னுடைய கணவனுக்குக்கூடத் தெரியாது.

நான்:—இங்கு யாரைப் பார்க்க வந்தீர்கள்? மாசிலாமணி முதலியாரின் மனைவியைத்தானே? அவர்களும் பல்லாவரத்தை விட்டுவிட்டு அடிக்கடி இங்கு வந்துவிடுகிறார்கள்!

பாலாமணி:—ஆம். மாசிலாமணி முதலியாரின் மனைவியைப் பார்க்கத்தான் இங்கு வந்தேன். இன்றையதினம் பகல் இரண்டு மணிக்குச் சந்திப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

நான்:—(பேச்சை மாற்றவேண்டுமென்ற எண்ணத்துடன்) பல்லாவரத்தில் நேர்ந்த கொலையைப் பற்றி நான் பத்திரிகைகளில் பார்த்துத் தெரிந்துகொண்டேன். கொலை செய்யப்பட்டவர் மாசிலாமணி முதலியார்தானே! பாவம்! நல்ல மனிதர்!

பாலாமணி:—ஆம். மிக்க நல்ல மனிதர்!

நான்:—கொலை நடந்த இரவு நீங்களும் கோகிலமும் பல்லாவரத்தில் முதலியார் பங்களாவிலேயே இருந்தீர்களென்று நினைக்கிறேன்.

பாலாமணி:—இல்லை; நல்லகாலம், கொலை நடந்த தினம் நாங்கள் அங்கு இல்லை. நாங்கள் அவ்விடத்தில் இருந்திருப்போமாகில் சந்தேகம் எங்கள் பேரிலும் ஏற்படும். கொலை நடந்த முதல் நாளே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டோம்!—என்று கொஞ்சங்கூடத் தயங்காமற் சொன்னாள்.

இவள் கூறுவது உண்மையல்லவென்று எனக்குத் தெரியும்—ஒருவேளை பாலாமணியில்லாவிட்டாலும் கோகிலம் நிச்சயம் அங்கு அன்றிரவு இருந்திருக்கிறாள். நானே கோகிலத்தை நேரில் பார்த்திருக்க சந்தேகமென்ன?... இவள் என்னிடம் பொய் பேசுவதை என்னால் நிரூபித்துவிடமுடியும். ஆனால்

நான் பல்லாவரத்திற்குப் போன விஷயம் இவளுக்குத் தெரியவேண்டாமென்று சும்மா யிருந்துவிட்டேன்.

நான்:—சரி, இன்று மாசிலாமணி முதலியாரின் மனைவியைப் பார்த்தீர்களா?

பாலாமணி:—(சிறிது நேரம் தயங்கி மௌனமாயிருந்து விட்டுப் பிறகு) பார்த்தேன். சுமார் ஒருமணி நேரம் வரையில் அவர்கள் இங்கு இருந்தார்கள். பிறகு சென்றுவிட்டார்கள்.

நான்:—தனிமையாகவா சென்றார்கள்?

பாலாமணி:—இல்லை. நானும் கோகிலமும் அவர்கள் பின்னே சென்றோம்.

நான்:—எங்கு சென்றீர்கள்?

பாலாமணி:—புரசைப்பாக்கத்திலுள்ள ஒரு நண்பரைப் பார்க்கச் சென்றிருந்தோம்.

நான்:—அங்கு எவ்வளவு நேரம் தங்கியிருந்தீர்கள்?

பாலாமணி:—சுமார் அரைமணி நேரம் தங்கியிருந்தோம்.

நான்:—புரசைப்பாக்கத்திலுள்ள நண்பரின் பெயரைச் சொல்ல முடியுமா?

பாலாமணி:—அல்ல. அந்தப் பேர் வழியை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியங் கிடையாது.

நான்:—நீங்களாவது அல்லது கோகிலமாவது இந்த வீட்டைத் தவிர வேறு எவ்விடத்திலாவது சிற்றுண்டிகள் அல்லது தண்ணீர் அல்லது எவ்வித வஸ்துவாவது அருந்தியதுண்டா?

பாலாமணி:—அதுங்கிடையாது. புரசைப்பாக்கம் நண்பர் எங்களைக் காபி சாப்பிடச் சொல்லி உபசாரம் செய்துங்கூட, நாங்கள் பசியில்லாமையால் அந்தக் காபியைக் கூட சாப்பிடவில்லை.

நான்:—காபியில்லாத பட்சத்தில் டீ சாப்பிட்டிருக்கக்கூடும். நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள்.

பாலாமணி:—இல்லை. எதுவுமே கிடையாது. இங்கு ஐந்துமணிக்கு வந்து இங்கேயேதான் காபி தயார் செய்து அருந்தினோம். சுமார் 6 மணிக்கு ஒரு வேலைக்காரன் கோகிலத்தினிடம் ஒரு கடிதத்துண்டைக் கொடுத்தான். உடனே கோகிலம் தன்னுடைய உபாத்தியாயினி வந்திருக்கிறதாகவும் அவளுடன் பேசி அவளையனுப்பிவிட்டு இரண்டொரு நிமிஷங்களில் திரும்பி வந்து விடுவதாகவும் என்னிடங் கூறிவிட்டுச் சென்றாள். நான் பின்கட்டிலுள்ள அறையிலேயே காத்துக்கொண்டிருந்தேன்! இரண்டு நிமிஷங்களில் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவள் பதினைந்து நிமிஷங்களாகியும் வரவில்லை. பிறகு நான் நீல அறைக்குப் போனேன்.

நான்:—என்ன அறை? நீல அறையா?

பாலாமணி:—ஆம். எதிரிலே உள்ள அறைக்குப் புராதனமாக நீல அறையென்ற பெயரே வழங்குகின்றது. இந்த அறைக்குத்தான் உபாத்தியாயினி வருவது வழக்கம்.

நான்:—நீல அறையென்ற பெயர் வரவேண்டிய காரணமென்ன?

பாலாமணி:—அந்த அறையைப் போலவே இவ்வீட்டில் இன்னும் இரண்டு மூன்று அறைகளிருக்கின்றன. மற்ற அறைகளுக்கெல்லாம் சுவற்றில் வெள்ளை பூசியிருக்க இவ்வறைக்கு மாத்திரம், கட்டடங் கட்டுங் காலத்திலேயே நீல சாயம் பூசப்பட்டிருக்கிறது. ஒன்றையொன்று வித்தியாசப்படுத்தவே இதற்கு நீலசாயம் பூசப்பட்டிருக்கிறது. இந்த நிறத்தினால் இதை நாங்கள் நீல அறையென்று கூப்பிடுவது சகஜமாய்ப் போய்விட்டது.

நான்:—நல்லது. நீங்கள் பின்கட்டில் காத்துக்கொண்டிருந்துவிட்டு நீல அறைக்கு வந்தீர்கள். அப்பால் என்ன? சொல்லுங்கள்.

பாலாமணி:—நான் நீல அறைக்குள் நுழைந்தேன். மின்சார விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. உடனே நான் மின்சாரப் பொத்தானை யழுத்தி வெளிச்சமுண்டாக்கிப் பார்த்தபோது, மீனாள் பிணத்தைப்போல் இவ்விதம் அசைவற்றுப் படுத்துக் கிடந்தாள். பிறகு மீனாளை இந்த அறையில் கொண்டுவந்து போட்டுவிட்டு உங்களிடம் வந்தேன்.

நான்:—இவ்வளவேதான் உங்களுக்குத் தெரியுமா? அல்லது இன்னும் ஏதாவது சொல்லவேண்டிய சமாச்சாரம் இருந்தாலும் சொல்லிவிடுங்கள்—என்று சற்று அவசம்பிக்கைப்பட்டுக் கேட்டேன்.

பாலாமணி:—இவ்வளவுதான் எனக்குத் தெரிந்தது.

நான்:—கோகிலம் இந்த நிலைமையிலிருப்பதை நீங்கள் பார்த்து ஒன்றரை மணி யிருக்கலாம். அல்லவா

பாலாமணி:—ஆம்.

நான்:—போகட்டும். இங்கு வந்துவிட்டுப்போன ஸ்திரீ யார்? கோகிலத்தின் உபாத்தியாயினிதானா அல்லது வேறு யாராவதா?

பாலாமணி:—வந்த பேர்வழியை நான் பார்க்கவில்லை. வேலைக்காரன் தான் உபாத்தியாயினி யென்று அவளை நீல அறைக்குள் அழைப்பித்தான். ஒரு சங்கதி நிச்சயம்! வந்தபேர்வழி ஒரு ஸ்திரீயாகத்தான் இருக்கவேண்டும்

நான்:—அப்படியானால் உபாத்தியாயினிதான் வந்தார் என்று உங்களால் நிச்சயமாய்ச் சொல்லமுடியாதா?

பாலாமணி:—வந்த ஆசாமியை நான் நேரிலேயே பார்க்கவில்லையாதலால், என்னால் எவ்விஷயத்தையும் திடமாய்ச் சொல்லமுடியாது. வேலைக்காரனைக் கேட்டதற்கு "கோகிலம்மாளுடைய உபாத்தியாயினி வந்தார்கள்" என்று சொன்னான். நிச்சயந்தானா, நீ நன்றாகப்பார்த்தாயா என்று கேட்டதற்கு வந்த பேர்வழி, தான் வாத்தியார் அம்மா என்று சொல்லிக்கொண்டு வந்ததாகவும், இதைக்கேட்டுக்கொண்டு தான் நீல அறைக்குப் போகவிட்டுவிட்டதாகவும் வந்த ஸ்திரீ முகமூடி போட்டுகொண்டிருந்தபடியால் தான் முகத்தைச் சரியாய்க் கவனிக்கமுடியவில்லை யென்றும் சொல்லுகிறான்.

நான்:—நீங்கள் பின் கட்டிலிருந்தீர்களே! அப்பொழுது இவ்வறையிலிருந்து ஏதாவது சத்தம் உண்டானதாகக் கேட்டதா?

பாலாமணி:—கேட்கவில்லை. நிசப்தமாகவிருந்தது. நீல அறையில் என்ன நடந்ததென்று கொஞ்சங்கூட எனக்குத் தெரியாது—என்றாள்.

சிறிது நேரம் நான் ஆழ்ந்த யோசனையி லிருந்தேன். பிறகு பாலாமணியம்மாளைப்பார்த்து, "அம்மா! இது சாதாரணமாக நேர்ந்த மூர்ச்சையல்ல. மீனாளைக் கொலை செய்துவிடவே பிரயத்தனம் நடந்திருக்கிறது. இப்பொழுதுகூட மீனாள் உயிரோடு இருக்கிறாள் என்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கு இல்லை" என்றேன்.

இதுகேட்டு பாலாமணியம்மாள் கரைகடந்த வருத்தமடைந்தவளாய் மிக்க சோர்வுற்று, "இங்கு வந்துபோன ஸ்திரீ யார் என்று நிச்சயமாய்த் தெரியவில்லையே?" என்று மெல்லிய குரலில் இயம்பினாள்.

இந்த சமயத்தில் பளிச்சென்று மின்னல்போல் என் மனதிற்கு ஓர் எண்ணம் தோன்றியது. கோகிலமும் சபாபதி முதலியாரும் சதா அச்சப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த மர்ம சாரதாவே இங்கு வந்துபோன ஸ்திரீயாக இருக்கக்கூடுமோவென்று சந்தேகித்தேன்!

பாலாமணி:—தனக்குத் தெரிந்த உண்மை யனைத்தையும் கூறிவிட்டாளென்று என் மனம் நம்பவில்லை. ஆகவே, நான் மறுபடியும் மீனாளைப் பரிசோதிப்பவன்போல் நாசித்துவாரத்திற்கெதிரே கையை வைத்துப் பார்த்துவிட்டுப் பயங்கொண்டவன்போல், "அடடா! காரியம் முடிந்துபோய்விட்டது. இந்த க்ஷணந்தான் உயிர் நீங்கிற்று" என்று கத்தினேன். இது கேட்டு நடுக்கங்கொண்டவாய் பாலாமணி, "ஐயோ! ஐயோ! உயிர்போய்விட்டது என்று சொல்லாதீர்கள்! எப்படியாவது நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கெஞ்சாத வண்ணம் கெஞ்சி யென் காலில் விழுந்தாள். நான் அவளைப் பார்த்து, "இறந்தவள் பிழைப்பதில்லை, இனி மனிதப் பிரயத்தினத்தினாலாவது ஒன்றுமில்லை. மீனாள் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்!" என, அவள் "யார்? அந்த ஸ்திரீதான் கொன்றிருக்கிறாளோ? எப்படிக் கொன்றாள்?" என்றாள்.

"அந்த ஸ்திரீ தான் கொலை செய்தாளோ அல்லது வேறு யார்தான் கொலை செய்தார்களோ எனக்குத் தெரியாது. தேகத்தில் காயம் ஒன்றுமில்லை. இருந்தாலும் கொஞ்சங் கொஞ்சமாகக் கொஞ்சமிருந்த உயிரும் போய்விட்டது" என்று நான் சொல்லிவிட்டுப் பாலாமணியையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

உடனே பாலாமணி கரை கடந்த துக்கத்தினால் விம்மிவிம்மி யழ ஆரம்பித்தாள். பிறகு பெருமூச்சுவிட்டுக் கொண்டே என்னை நோக்கி, "ஐயா! நான் முன்னமேயே எல்லாவற்றையும் ஒளிக்காமல் சொல்லியிருக்கவேண்டும். ஆனால் நான் சொல்லுவதை நம்புவீர்களோ நம்பமாட்டீர்களோ என்று பயந்து சும்மா யிருந்துவிட்டேன். ஒரு அதிசயமான விஷயம் இவ்வீட்டில் நடந்திருக்கிறது. இந்த வீட்டில் பேய்கள் வாசம் செய்கின்றன என்று என் மனதிற்குத் தோற்றுகிறது" என்று சொல்ல நான், "நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்றேன்.

இப்படி நான் சொல்லி முடித்தேனோ இல்லையோ வாசலில் யாரோ கதவைத் தட்டுவதாகக் கேட்டது. உடனே வாசற்பக்கம் ஒரு வேலைக்காரன் ஓடிக் கதவைத் திறந்தான். டாக்டர் நடேசன் என்னை நோக்கி அதிவேகமாக வந்துகொண்டிருந்தான்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஸ்ரீ முக௵ தை௴—கலியுகாதி 5035, சாலிவாகனம் 1856.
பசலி 1343, கொல்லமாண்டு 1109, ஹிஜரி 1352,
இங்கிலீஷ் 1934௵ ஜனவரி௴—பிப்ரவரி௴

தேதி	ஜனவரி	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	14	ஞா	சது40-30	மூல17-50	அ17-50சி	சங்கராந்தி பண்டிகை, உத்தராயண புண்யகால, பொங்கல் பண்டிகை
2	15	திங்	அ●31-10	பூரா10-35	மர60	சர்வத்திர தை அமாவாஸை,
3	16	செவ்	பிர22-20	உத்3-3 திரு56-15	அமி3-3சித்	மாட்டுப் பொங்கல், கரிநாள் மாகஸ்நாநம், சந்திரதரிசனம், கரிநாள், அவமாகம்
4	17	புத	துதி14-5	அவி50-45	பி50-45சி	தானியம் செலவிட
5	18	வியா	திரி6-58	சத46-23	ம46-23சி	மாசசதுர்த்தி விரதம்
6	19	வெள்	சது1-18 பஞ்57-30	பூர43-50	சித்60	மதன பஞ்சமி, ஸ்ரீ பஞ்சமி, வசந்த பஞ்சமி, அவமாகம்
7	20	சனி	சஷ்55-43	உத்43-10	சி43-10மர	சஷ்டி, கும்பாயன கா-42-5
8	21	ஞாய	சப்55-56	ரே44-25	அ44-25சி	ரதசப்தமி, சர்வமுகூர்த்தம்
9	22	திங்	அஷ்57-58	அஸ்47-33	சித்60	காவேரி புஷ்காம்
10	23	செவ்	நவ60	பர52-13	சித்60	மூலிகை உபயோகிக்க
11	24	புதன்	நவ1-48	கி✻58-22	அ58-22சி	கிருத்திகை, கரிநாள்
12	25	வியா	தச6-53	ரோ60	மர60	திருதினஸ்பிருக்
13	26	வெள்	ஏகா12-50	ரோ5-15	ம5-15சித்	சர்வ, மத்வ ஏகாதசி
14	27	சனி	து19-25	மிரு12-50	சித்60	சனிப் பிரதோஷம்
15	28	ஞா	திர26-3	திரு20-30	சித்60	சாதுருத்த, கதிராருக்க
16	29	திங்	சது32-28	புன28-0	அ28-0சித்	திருதினஸ்பிருக்
17	30	செவ்	○38-25	பூச35-3	சித்60	பௌர்ணமி, தைப்பூசம்
18	31	புத	பிர43-40	ஆயி41-30	சித்60	
19	1934௵ பிப்ரவரி௴ 1	வியா	துதி48-3	மக-47-5	அ47-5சித்	
20	2	வெள்	திரி51-25	பூர51-43	சித்60	
21	3	சனி	சது53-30	உத்55-18	சித்60	
22	4	ஞா	பஞ்54-30	அஸ்58-0	அ58-0சித்	
23	5	திங்	சஷ்58-56	சித்58-30	பி58-30அ	
24	6	செவ்	சப்52-5	சுவா58-3	சி58-3மர	
25	7	புதன்	அஷ்48-38	விசா56-10	சித்60	
26	8	வியா	நவ43-48	அ52-50	சி52-50பி	
27	9	வெ	தச37-53	கே48-28	ம48-28அ	
28	10	சனி	ஏகா30-58	மூல43-13	சித்60	
29	11	ஞா	து23-18	பூரா37-8	சித்37-8அ	பிரதோஷம், தில துவாதசி, சனிதாரம்பம், கடன் தீர்க்க

சுக்	3-மக-புத 8-மக-வக் சுக்		கே
ரா-கு செவ் சனி	9-துலா-குரு 12-கும்-செவ் 20-கும்-புதன்		
புத			குரு

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 5, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல்.

இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற் குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவர்தனை விளங்கின தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணவிசயங்களைப் பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(நான்காம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்ப காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

நாலடியார் மூலமும்

விரிவான உரையும்.

செம்பூர் வித்வான்-வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந் நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரை யொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந் நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற்கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன.

இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் மூதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத் தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாளடைவில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கமுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1—12—0

நாகரீகம்?

இரண்டாம் பதிப்பு.

செ. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஐ., அவர்கள் இயற்றியவை

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகி வரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதிகளடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும், ஆப்தமித்ரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை ரூ. 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

கிராமக் கோர்ட்டுகள் சட்டம்.

(சென்னை 1888௵த்து 1-வது ஆக்ட்.)

சென்னை ராஜதானியின் கிராமங்களில் எற்படுத்தியிருக்கும் கிராமக் கோர்ட்டுகளில் (கிராம முனிசிப் கோர்ட்டுகளிலும் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளிலும்) நடக்கும் சட்ட திட்டத்தைக் குறித்த ஷை ஆக்டை, 1920௵த்திலும், 1929௵த்திலும் எற்பட்ட திருத்தங்களுடன் ஆக்டையும், அதன்படி செய்யப்பட்ட விதிகளையும், இன்னும் அவைகளுக்கு சம்பந்தமான கிராம மேஜஸ்திரேட்டு ரெகுலேஷன்களையும், இதர சட்டங்களையும் அனுபந்தங்களுடன் சேர்த்து விரிவான உரையுடன் எளிய தமிழ் நடையில் சென்னை ஹைகோர்ட்டு அட்வொகேட்டுகள் ம-ள-ள-ஸ்ரீ, K. ஜகன்னாத சாஸ்திரியார், B.A. B.L., K. சங்கர சாஸ்திரியார், B.A. B.L., அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை ரூபா 1—8—0.

இதர ஆக்ட் புஸ்தகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
இந்தியன் பினல் கோட் சட்டம்	3	0	பஞ்சாயத்துச் சட்டம்	1	4
கிரிமினல் லா	3	0	இந்துதேச சாட்சி ஆக்ட்	1	0
சிவில் லா	3	0	தேவஸ்தான சட்டம்	1	0
புது விவகார சிந்தாமணி	2	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	4
புது பெரிய ஹிந்து லா	2	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
முகம்மதியன் லா	2	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
கிராம முன்சிப் சட்டம்	1	8	டிரஸ்டிகள் சட்டம்	0	12
பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம்	1	0	கால நிர்ணயச் சட்டம்	0	8
இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	நில ஆக்கிரமிப்பு என்குரோச்மெண்ட் சட்டம்	0	4
லோகல்போர்ட் ஆக்ட்	2	0	கிராமச் சுகாதாரம்	0	2

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.



இனும்! Rs. 2-4-0 இனும்!!

ரூ. 2-4-0-தான். ரூ. 2-4-0-தான்.

தற்சமயத்தைக் கைவிடாதீர்கள்.

ரூ. 2-4-0-க்கு 50 இனும் சாமான்களோடு 3-கடியாரங்கள். கடியாரங்களுடைய விபரங்கள்:—1 கோல்ட் கில்ட் டம்மி ரிஸ்ட் வாட்சு, 1 பாக்கெட் டம்மி வாட்சு, 36 மணிக்கு மணிகாட்டும் சிறந்த டைம்பீஸ். 5 வருஷங்களுக்கு உத்தரவாதம். 6 புட்டி ஆட்டோ செண்ட், ஒரு பவுண்டன் பேனா, ஒரு கோல்ட் கில்ட் மோதிரம் இவை தவிர 50 வெகுமதிகள்.

தபால் சார்ஜ் அணா 12.

GREAT NATIONAL STORE, (A)

1/1 A, Raj Narain Biswas Lane, P. O. Baghbazar, CALCUTTA.

மதிமோச விளக்கம்.

(துசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.

223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த தீக்த கடிதத்தில் அச்சிடப்பட்டது.

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நம் பாதகண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், காலவயப்பட்டு, மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமா பாதகமும் அவற்றிற்கஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள் தோறும், ஊர்தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், திடீர்ப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளினும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சேவைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே யிருக்கின்றன. உலக முழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே, வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் படுமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சிறந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புக்களும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

பகவத்கீதை வசனம்

ஸ்ரீ மகாத்மாவினால் சிறப்பித்துக் கூறப்படுவதும், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ நீலகண்டர் முதலிய சமயாச்சாரியர்களின் வியாக்கியானங்கட்குப் பாத்திரமாக விளங்கியதும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருளிச் செய்யப்பட்டதுமாகிய பகவத்கீதையைச் சிறிது கல்வியறிவுள்ள ஆண்களும் பெண்களுங்கூடப் படித்துப் பயன் பெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அது பிரபல நாவலாசிரியரும், கைவல்ய நவநீத வசன நூலாசிரியருமாகிய ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எளிய இனிய வசன நடையில் எழுதப்பட்டது.

அழகிய காலிகோ கட்டடம். இதன் விலை ரூ. 1—8—0.

காதலி ?

ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-34 வரை விலை அணா 8.

பவளத்தீவு 2-பாகம்

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூர்ணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும். 2-பாகம் விலை ரூபா. 3.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 2-பாகமும் விலை ரூ. 2—4—0

திருவருட்பா.

(அடக்க விலை)

ஞான துறையில் கிடைத்த பல அரிய உபதேசங்கள், உண்மை நெறிகள், சன்மார்க்க வெளியீடுகள் அடங்கியது. தடித்த கிளேஸ் காகிதம் சுத்தமான பதிப்பு, பலமான அழகிய பட்டு கலிகோ பைண்டு. ஒவ்வொன்று சுமார் ஆயிரம் பக்கங்கள். 2-வால்யமும் ரூபா 6 தான். தபால் அல்லது ரயில் செலவு வேறு. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. முந்துவோர்களே கிடைக்கும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

நிமித்தியகுறி சாஸ்திரம்

மனதில் நினைத்துக்கொள்ளுங் காரியங்களையும், அவற்றின் பலாபலனையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புல்—புல்—தாரா.



இது ஹார்மோனியத்தைப் போன்ற சிறந்த மனோகர சங்கீத வாத்தியம். சங்கீதப் பயிற்சியை எளிதில் அளிக்கக்கூடியது. இதனுடைய நாதமோ செவிக்கின்பந்தரத்தக்கது. ஒவ்வொரு வீட்டிலும் சிறுவர்களுக்கு சங்கீத ஞானத்தை புகட்டச் செய்யும் கருவி இதுவேயாகும்.

7	கம்பிகள் உள்ளது	விலை ரூபா	5	8	0
6	,,	,,	5	0	0
5	,,	,,	4	8	0
4	,,	,,	4	0	0
3	,,	,,	8	8	0

வாசிக்கும் தந்தம் 1, சாவி 1, கம்பி 2, உபயோகிக்கும் விதம் புத்தகம் 1, இவையாவும் சேர்த்து மேற்படி பெட்டியுடன் அனுப்பப்படும். பெட்டி வேண்டியவர்கள் இத்தனை கம்பிகள் என்று தெரிவிப்பதுடன் முன்பணம் ரூ. 2. அனுப்பவேண்டும்.

மயிர் போக்கும் சோப்.

இது ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தப்பாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி அதிக சுலபமாய்ப் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி, அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டினாலாவது ஓலைத்துண்டினாலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர் யாவும் கழிந்துபோகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக விருக்கும். இந்த சோப்பில் துர்நாற்றம் முதலியவை இரா. சோப் 1-க்கு விலை அணா 0 6 0

3-சோப் கொண்ட பாக்ஸ் 1-க்கு ரூ. 1 0 0

க்ஷணசித்தி டிபோ, நெ. 1/6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

நாகரீக நங்கையர் கழுத்துச் சங்கிலி

இது சுத்தமான 18 காரட் கோண்ட
ரோல்ட் கோல்ட் பிளேட் நெக்லேஸ் என்னும்

கழுத்துச் சங்கிலி



3 வருஷம் உத்திரவாதமுள்ளது. இது சுத்தமான ரோல்ட் கோல்டால் செய்யப்பட்டு இமிடேஷன் வைரம், சிவப்பு, ரத்தினங்கள் முதலியவை பதிக்கப் பெற்றது. படத்திற் கண்டபடி மிகவும் வேலைப்பாடுடையது. பதக்கம் அமைக்கப்பெற்றது. கண்ணைக் கவரக்கூடியது. அசல் தங்கத்தால் செய்ததுபோலவேயிருக்கும். யாவரும் எத்தேயத்தினரும் உபயோகிக்கலாம். இதன் விலை ரூபா 1—8—0

ஒரே சமயத்தில் இரண்டு சங்கிலிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இல்லை.

ரோல்டு கோல்டு

187515 "பிடோ" லீவர் கைகெடியாரம்.

எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்பப்பெறும். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

சுபீரியர் வாட்சு கம்பெனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்.

ஸ்ரீ மஹா பாரதம்

விராடபர்வ வசனம்

நமது இதிகாசங்களில் சிறந்ததும், அறம் பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களைத் திறம்பட வகுத்துரைப்பதினால் ஐந்தாம் வேதம் என்று சிறப்பிக்கப் படுவதுமாகிய ஸ்ரீ பாரதம் விராடபருவம் புதிய பதிப்பு வெளிவந்து விட்டது. சரளமான செந்தமிழ் நடை. முத்துப்போன்ற பெரிய எழுத்துக்களில் அமைந்த சுத்தப்பதிப்பு; விசித்திரப் படங்களுடன் இலங்குவது. சாமானியப் படிப்புள்ள ஆடவர் பெண்டிர் எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கும். சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. உடனே முந்துங்கள். உறுதியான கட்டடம்.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு வி...

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட் ... 161, மதராஸ்.